ஆடிப்பிறப்பு
பக்கம் 15

வெற்றிக்கு அவசியம்.....
பக்கம் 11

உதயன்

24 பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 233 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 1, வியாழன் 17.07.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

32°C
தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றழுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04


காஸாவில் தொடர் குண்டு மழை 7


தீர்க்கமான கட்டத்தில் வடமாகாண சபை 14


அடுத்த சுற்றில் நக்கீரன் 17


பரிசுத் தொகை 10,000 கோடி 18

# 11 வயதான சிறுமி மீது 11 நாள் வன்கொடுமை

## காரணமான கடற்படைச் சிப்பாயை கைது செய்ய பொலிஸ் நடவடிக்கை
## மற்றொரு சிறுமியும் பாதிக்கப்பட்டாரா என மருத்துவ சோதனை



“தரம் ஆறில் கல்வி கற்கும் குறித்த சிறுமி கடந்த 12 நாள்களாகப் பாடசாலைக்கு சமுகமளிக்கவில்லை. இது குறித்து பாடசாலை நிர்வகத்தினர் காரைநகர் பிரதேச செயலகத்திற்கும் சிறுமியின் பெற்றோருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. அதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த பெற்றோர், கடந்த 12 நாள்களாகத் தமது மகள் காலையில் சீருடையுடன் பாடசாலைக்குப் புறப்பட்டுச் சென்றுபிற்பகலில் வீடு திரும்புகிறாள் என்று கூறினர்.”

யாழ்ப்பாணம், ஜூலை 17
பாடசாலைச் சிறுமி ஒருத்தி காரைநகரில் கடற்படைச் சிப்பாயால் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட சிறுமியை நேற்று மீட்ட அப்பகுதி சிறுவர் நன்னடத்தை அலுவலர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்ப்பித்தார். அந்தச் சிறுமி வழங்கிய தகவல்களின் அடிப்படையில், மற்றொரு சிறுமியும் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டாரா என்று அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். மருத்துவச் சோதனைகளுக்காக அந்தச் சிறுமியும் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார்.
சிறுமி ஒருத்தி கடற்படைச் சிப்பாயால் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டுள்ளார் என்று முறைப்பாடு கிடைத்துள்ளது என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார். எனினும் அந்தக் கடற்படைச்

22 ஆம் பக்கம் பார்க்க

## அணி திரண்டு சாட்சியம் அளியுங்கள்



கொழும்பு, ஜூலை 17
“இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முதல் படியாக ஐ.நா. விசாரணைக் குழு முன்னிலையில் புலம்பெயர் தமிழர்கள் அணிதிரண்டு சாட்சியமளிக்கவேண்டும்.”
- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவசர கோரிக்கை விடுத்துள்ளது.
இறுதிப் போரில் பாதிக்கப்பட்ட அதிகமான தமிழ் மக்கள் ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைந்துள்ளனர். எனவே, அவர்களும் ஐ.நா. விசாரணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.
இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரி மைகள் ஆணையாளர் அலுவலகத்தால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழு, நோர்வே தலைநகர் ஒஸ்லோ வில் நேற்றுமுன்தினம் தனது விசா ரணைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
குறித்த விசாரணைக்குழு இலங்கை வருவதற்கு அரசு அனுமதி மறுத்திருந்தது. ஆயினும், தமக்கு அனுமதி வழங்கப்படாதுவிடினும் நம்பகமான வழிமுறைகள் ஊடாக இலங்கைக்கு வெளியே இருந்து விசாரணைகள் நடைபெறும் என்று விசாரணைக் குழு அறிவித்திருந்தது.

22 ஆம் பக்கம் பார்க்க

## டெங்கு; ஒன்பதாவது இடத்தில் யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம், ஜூலை 17
யாழ்ப்பாணக் குடாநாட்டில் இந்த மாதத்தில் 52 பேர் டெங்குத் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ள நிலையில், இலங்கையில் டெங்குத் தாக்கத்துக்கு உள்ளாகிய மாவட்டத்தில் யாழ்ப்பாணம் 9 ஆவது இடத்தில் உள்ளது. இந்தத் தகவலை மாகாண சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.
இந்த மாதம் கிளிநொச்சியில் 2 பேரும், மன்னாரில் 4 பேரும், வவுனியாவில் 5 பேரும், முல்லைத்தீவில் ஒருவரும் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் கடந்த ஜனவரி மாதம் 148 பேரும், பெப்ரவரி மாதம் 92 பேரும், மார்ச் மாதம் 58 பேரும், ஏப்ரல் மாதம் 59 பேரும், மே மாதம் 73 பேரும், ஜூன் மாதம் 89 பேரும், ஜூலை மாதம் கடந்த வாரம் வரை 52 பேரும் டெங்கால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இவை தவிர இந்தமாதம் அதிகளவாக கொழும்பு மாவட்டத்தில் 480 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர். நாட்டில் இந்த மாதம் இதுவரையான காலப்பகுதிவரை ஆயிரத்து 544 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு இந்த வருடம் 20 ஆயிரத்து 866 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-4)



பொதுபலசேனா உட்பட மூன்று அமைப்புக்களைச் சேர்ந்த பௌத்த பிக்குமார் நேற்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை சந்தித்தனர். அந்தச் சந்திப்பில் அளுத்கம சம்பவம் தொடர்பில் சில உள்ளூர் ஊடகங்கள் பாரபட்சமான முறையில் செய்திகளை வெளியிடுகின்றன என்று முறைப்பாடு ஒன்றை சமர்ப்பித்தனர்.

## காணாமற்போனோர் ஆணைக்குழுவின் காலத்தை மேலும் நீடிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 17
காணாமற் போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக்குழுவின் கால எல்லையை மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவின் பதவிக் காலமாக ஆறு மாதமே வழங்கப்பட்டிருந்தது.
ஆணைக்குழுவின் முதலாவது பதவிக் காலம் முடிவடைந்த நிலையில், கடந்த பெப்ரவரி மாதம் மேலும் ஆறு மாத கால பதவி நீடிப்புக்கு ஆணைக்குழு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்து பதவி நீடிப்பு பெற்றிருந்தது. நீடிக்கப்பட்ட ஆறு மாத கால பதவியும் எதிர்வரும் ஓகஸ்ட் 15 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது.
ஆணைக்குழுவினால் இதுவரையில் 5 பகிரங்க அமர்வுகளே நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. 19 ஆயிரத்து 400 இற்கு மேற்பட்ட முறைப்பாடுகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றுள்ள போதும் அவற்றில் 750 முறைப்பாடுகள் வரையிலேயே விசாரித்து முடிக்கப்பட்டுள்ளன.
எனவே இந்த விசாரணைகளை செய்து முடிப்பதற்கு காலம் மேலும் தேவை என்

22 ஆம் பக்கம் பார்க்க

## மக்களின் காணிகளை அபகரிக்கவே கூடாது

### ஜனாதிபதி மஹிந்த கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 17
மக்களின் காணிகளை அபிவிருத்தித் தேவைகளுக்குப் பலவந்தமாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்று தமது அரச உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு ஆலோசனை கூறியுள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.
“நிலத்துக்குச் சொந்தமான மக்களை வீதிக்குக் கொண்டு வரக் கூடாது. பலவந்தமாக காணிகளை எடுத்துக் கொள்ள இடமளிக்கப்படக் கூடாது” என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
“30- 40 ஆண்டுகளாக மக்கள்வசித்த காணிகளில் இருந்து அவர்கள் வீதிக்கு விட்டெ

22 ஆம் பக்கம் பார்க்க

# தமிழர்களின் துன்பங்களுக்காக சிங்களவரும் குரல் கொடுக்கின்றனர்

## இப்படி சொல்கிறார் மனோகணேசன்

யாழ்ப்பாணம், ஜூலை 17

தமிழ் மக்களின் துன்பங்களுக்காக குரல்கொடுக்க சிங்கள மக்கள் முன்வந்திருக்கிறார்கள். இதன் மூலம் உண்மையான தேசிய ஐக்கியம் வெளிப்பட்டிருக்கிறது. இதை பொறுத்துக்கொள்ள முடியாது அரசு நீதிமன்றங்களை நாடி சிவில் போராட்டங்களுக்கு தடை விதிக்கிறது. இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

**உண்மைகளை நீண்ட காலத்துக்கு மூடி மறைக்க முடியாது. அவை என்றோ ஒரு நாள் வெளிவரவே செய்யும். அரசின் அராஜகத்தை யாழ்ப்பாணத்தில் சிங்கள மக்களே அம்பலப்படுத்தியுள்ளார்கள்.**



உண்மைகளை நீண்ட காலத்துக்கு மூடி மறைக்க முடியாது. அவை என்றோ ஒரு நாள் வெளிவரவே செய்யும். அரசின் அராஜகத்தை யாழ்ப்பாணத்தில் சிங்கள மக்களே அம்பலப்படுத்தியுள்ளார்கள்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு சம்மேளனம், தென்னிலங்கை சிங்கள மக்களை வடக்கே அழைத்து சென்று, இராணுவத்துக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபடுத்தி உள்ளது. இதன் மூலம் தேசிய ஐக்கியம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் நடத்த இருந்த அமைதி ஆர்ப்பாட்டத்தையும், ஊர்வலத்தையும் தடுக்க பொலிஸார், நீதிமன்றம் சென்று தடை உத்தரவை வாங்கினர். எனினும் அந்த போராட்டம் ஒரு எழுச்சிக் கூட்டமாக அங்கு நடந்து முடிந்துள்ளது.

கடந்த வாரம், அரசு தென்னாபிரிக்காவின் உப ஜனாதிபதி ரமபோஷவை அழைத்து, அவரைச் சுற்றுலா பயணி என்று எள்ளி நகையாடி அவமானப்படுத்தி அனுப்பி வைத்துள்ளது. அவர் இனி இந்நாட்டுக்கு மீண்டும் வருவார் என நான் எதிர்பார்க்கவில்லை. தென்னாபிரிக்கா, ஆபிரிக்க கண்டத்தில் செல்வாக்குள்ள பெரிய நாடு. இந்த செய்கை மூலம் ஆபிரிக்காவின் இலங்கைக்கான ஆதரவு முடிந்து விட்டது என்றே கருத வேண்டும்.

இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணைகள் அதிகாரப்பூர்வமாக ஆரம்பமாகியுள்ளன. எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா. மனிதவுரிமை சபையில் இலங்கை விவகாரம் எடுக்கப்படும் போது ஆபிரிக்க ஆதரவு இருக்காது. அத்துடன் அளுத்கம எரிப்பின் பின் மத்திய கிழக்கு நாடுகளின் ஆதரவும் இல்லாமற்போயுள்ளது.

இவ்வாறு படிப்படியாக வெளிநாட்டு நட்பைஇலங்கை அரசு இழந்து வருகிறது. - என்றார். (ஐ- 5)

# தொழிலுக்குச் சென்றவர் நேற்று மீன் வாடியில் சடலமாக மீட்பு



வடமராட்சி, ஜூலை 17

கடற்றொழிலுக்குச் செல்வதாக சகோதரியிடம் கூறிச் சென்ற ஒருவர் பருத்தித்துறை கம்பர் மடத்தடியில் உள்ள மீன் வாடி ஒன்றில் வாயில் இரத்தம் வழிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

ஞ்சு அம்மன் கோயிலடி வியாபாரி மூலையைச் சேர்ந்த பாலசிங்கம் சதாசிவம் (வயது 40) என்பவேர சடலமாக மீட்கப்பட்டவராவார்.

பருத்தித்துறை பொலிஸாரின் தகவலின் பேரில் நேரில் சென்று சடலத்தைப் பார்வையிட்டு மரண விசாரணை மேற்கொண்ட பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா சடலத்தைப் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்குப் பணித்தார்.

பருத்தித்துறையில் தனது சகோதரன் வீட்டில் தங்கியிருந்து கடற்றொழில் செய்து வந்தார். நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு மதிய உணவை முடித்துக் கொண்டு கடற்றொழிலுக்குச் செல்வதாகக் கூறிச் சென்றார். ஆனால் நேற்றுக் காலை வீடு திரும்ப வேண்டியவர் வீடு திரும்பவில்லை. அவர் மீன் வாடியில் வாயில் இரத்தம் வடிந்த நிலையில் கிடக்கிறார் என்று அறிந்து நானும் எனது அம்மாவும் சென்று பார்த்தோம். அங்கு அவர் சடலமாகக் காணப்பட்டார் என்று உயிரிழந்தவரின் சகோதரி விசாரணையில் தெரிவித்தார்.

**"மீன் வாடியில் வாயில் இரத்தம் வடிந்த நிலையில் கிடக்கிறார் என்று அறிந்து நானும் எனது அம்மாவும் சென்று பார்த்தோம்.**

சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்ட மரண விசாரணை அதிகாரி மேலதிக விசாரணைகளை ஒத்திவைத்தார். (ஐ-173)

# ரயிலில் மோதி பொலிஸார் சாவு

கொழும்பு, ஜூலை 17

ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸார் ஒருவர் நேற்றுப் புதன்கிழமை காலை ரயிலில் மோதி உயிரிழந்துள்ளார்.

கொழும்பு - பதுளை பிரதான ரயில் வீதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. கண்டி பன்வில பகுதியைச் சேர்ந்த டீ.எம்.கே.முனசிங்க (வயது 35) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக டிக்கோயா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பேருவளை தாக்குதலை கண்டித்துத் தீர்மானம்

## கிழக்கு மாகாணசபை அமர்வில் ஏகமனதாக நிறைவேறியது

மட்டக்களப்பு, ஜூலை, 17

அளுத்கம, பேருவளை உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் முஸ்லிம் சமூகத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களைக் கண்டித்து கிழக்கு மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபையின் அமர்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அவைத் தலைவர் ஆரியபதி கலப்பதி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது உறுப்பினர் ஏ.எம்.ஜெமீன்பேருவளை, அளுத்கம சம்பவங்கள் குறித்து கண்டன பிரேரணையை சமர்ப்பித்தார்.

இதனைத் தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் ,

அளுத்கம, பேருவளை பகுதிகளில் முஸ்லிம்கள் மீது பொது பல சேனா அமைப்பு திட்டமிட்டே தாக்குதல்களை மேற்கொண்டது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. உடமைகள் அழிக்கப்பட்டதுடன் அவர்களது பொரு, ளாதாரம்முற்றாக அழித்தொழிக்கப்பட்டது.

முஸ்லிம்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை கிழக்கு மாகாண சபை வன்மையாக கண்டிக்கிறது. சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணைகளை மேற்கொள்வதற்கும் அதன் சூத்திரதாரிகளைத் தண்டிப்பதற்கும் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கும் எதிர்காலங்களில் இவ்வாறான இனவெறித் தாக்குதல்கள் இடம்பெறா வண்ணம் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டக் கோரியும் அரசை வலியுறுத்தி இந்தப் பிரேரணையை நான் சமர்ப்பிக்கிறேன்.

இந்தப் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, கிழக்கு மாகாண முதலமைச்சரும் அவைத் தலைவரும் ஒப்பமிட்டு அதனை ஜனாதிபதி, பாதுகாப்பு செயலாளர் மற்றும் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் அனுப்பி வைக்க வேண்டும் - என்றார்.

பிரேரணையை ஆதரித்து ஆளும் மற்றும் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பலரும் உரையாற்றினர். தொடர்ந்து அது தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. (ஐ-10)

# அந்தரங்க உறுப்பை வெட்டி கடலில் வீசிய இளைஞர்

கொழும்பு, ஜூலை 17

தனது ஆண் உறுப்பை வெட்டி களுத்துறை கடலில் வீசிய இளைஞர் நாகொட வைத்திய சாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

28 வயதான குறித்த இளைஞர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இளைஞர் வெட்டி வீசிய ஆண் உறுப்பு தேடிப்பெற முடியாத நிலையில், பிறிதொரு ஆண் உறுப்பை உடலில் பொருத்தும் நடவடிக்கையில் சத்திர சிகிச்சை ஆரம்பிக்கப் பட்டுள்ளது என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த இளைஞர் மருந்தகத்தில் பெறப்பட்ட விறைப்பை ஏற்படுத்தும் மருந்தை இரகசிய இடத்தில் செலுத்திவிட்டு ஆண் உறுப்பை வெட்டி கடலில் எறிந்துள்ளார்.

# மந்துவில் குடும்பஸ்தர் கொலை; இருவர் கைதாகி விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்.கல்லுண்டாய் வெளியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கழுத்துவெட்டப்பட்டு, அசிற் ஊற்றப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் கொலையுண்டவருடன் ஏற்கனவே முரண்பாட்டை கொண்டிருந்தனர் என்றும் இருவரையும் நேற்றுமுன்தினம் தாம் கைது செய்து நேற்று மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தினர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மந்துவில் கிழக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த என்.பார்த்தீபன் (வயது - 32) என்பவரே வெட்டிப் படுகொலை செய்யப்பட்டு அசிற் ஊற்றப்பட்ட நிலையில் கடந்த சனிக்கிழமை கல்லுண்டாய் வெளிப் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டார்.

சடலம் மீட்கப்பட்ட இடத்திலிருந்து வெற்று பியர் ரின்கள், வெற்று மிக்சர் பை என்பனவற்றை மீட்ட பொலிஸார் அவை தொடர்பில் விசாரணை முன்னெடுத்து வருகின்றோம் என்று தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவர் சாவகச்சேரியில் கடை ஒன்றை வைத்துள்ளார். அவர் சம்பவம் இடம்பெறுவதற்கு முதல்நாளான வெள்ளிக்கிழமை இரவு கடையைப் பூட்டிவிட்டு வெளியேறியுள்ளார். அவரது கைத்தொலைபேசிக்கு அன்றிரவு 11 மணியளவில் அவரது வீட்டிலிருந்து தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. அதன் பின்னர் அவருடன் தொடர்புகொள்ள முடியவில்லை. அவர் வீட்டுக்கும் திரும்பவில்லை. மறுநாள் அவர் சடலமாக மீட்கப்பட்டார். அவர் தனிப்பட்ட பகை காரணமாக உயிரிழந்தாரா என்பது தெரியவில்லை. அவருக்கும் அதே இடத்தைச் சேர்ந்த மற்றொரு சாராருக்கும் இடையே ஏற்கனவே முரண்பாடு இருந்து வந்தது என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஐ-4)

# காணியற்றவர்களுக்கு காணி வழங்க கரைதுறைப்பற்றில் அமைகிறது குழு

## அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம்,ஜூலை 17

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் காணியில்லாதவர்களுக்கு காணிகளைப் பகிர்ந்தளிக்க மாகாண சபை உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவை அமைப்பது என்று நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நுனைஸ் பாரூக், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், சி.சிவமோகன், க.கனகசுந்தரசுவாமி, திருமதி மேரிகமலா குணசீலன் ஆகியோர் பங்கெடுத்திருந்தனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்ற கூட்டத்தில், தென்னிலங்கை மீனவர்கள் சட்டவிரோதமான முறையில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் காரசாரமான விவாதம் இடம்பெற்றுள்ளது. அத்துடன் காணி அபகரிப்பு தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

இதன் போது காணி அபகரிப்பு தொடர்பான விடயங்கள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் காணியற்றவர்களுக்கு காணிகள் வழங்கும் விவகாரத்தில் கரைதுறைப் பற்றில் முஸ்லிம் - தமிழ் மக்களிடையே முறுகலான நிலைமை இருப்பது தொடர்பில் ஆராயப்பட்டது.

இந்த நிலையில் காணி பகிர்ந்தளிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள, மாகாணசபை உறுப்பினர்களையும் உள்ளடக்கிய குழு அமைப்பதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

**சீனாவில் MBBS பட்டப்படிப்பு (ஆங்கில மொழிமூலம்)**



சீனாவிலுள்ள **டாலியன்** மருத்துவ பல்கலைக்கழகத்தில் (Dalian Medical University). புரட்டாதி 2014 இல் ஆரம்பமாகவுள்ள கற்கை நெறிக்கான பதிவுகள் ஆரம்பமாகியுள்ளன.

**அடிப்படைத் தகைமை:**

GCE A/L Biology Stream இல் ஆகக்குறைந்தது 2C. S பெற்றிருக்க வேண்டும்.

**தொடர்புகளுக்கு: 076 56 800 15**

E-mail: dalianedu@gmail.com

(அங்கீகரிக்கப்பட்ட முகவர்)

(50033)(10)

பக்கங்கள்: இருபத்துநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா யாழ். 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 01 வியாழக்கிழமை (17.07.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 233

# மக்களின் எதிர்ப்பையும் மீறி காணிகள் அளக்கப்பட்டன

## வலி.வடக்கு கீரிமலை பிரதேசத்தில் இராணுவப் பாதுகாப்புடன்

யாழ்ப்பாணம், ஜூலை 17

**கீரிமலை நகுலேஸ்வரம் பகுதியில் கடற்படையினரின் தேவைக்காக சுவீகரிக்கத்திட்டமிட்டுள்ள 183 ஏக்கர் காணியை நிலஅளவைத் திணைக்களத்தினர் நேற்று இரகசியமாக அளவிட்டனர்.**

**எனினும் கடற்படைமுகாமுக்கு வெளியே, உள்ள காணிகளை அளப்பதற்கு பொதுமக்கள் அனுமதிக்காததால் அந்த முயற்சி நேற்றுக் கைவிடப்பட்டது.**

கீரிமலை, நகுலேஸ்வரத்தில் (ஜே/226) கிராம சேவையாளர் பிரிவில் உள்ளடங்கும் 183 ஏக்கர் காணியை கடற்படையினர் தமது முகாம் அமைப்பதற்கு தேவை என்று கோரியிருந்தனர். இந்தக் காணிகள் 38 பேருக்கு சொந்தமானவை. தனியார் காணிகளை சுவீகரிப்பதற்கான அறிவித்தல்கள் கடந்த ஏப்ரல் மாதம் இந்தப் பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்தன.

காணிகளுக்குரிய உரிமையாளர்கள் எவரும் உரிமை கோரவில்லை என்றும் 183 ஏக்கர் நிலப் பரப்பும் ஒரே நிலப் பகுதியாகவே அடையாளமிடப்பட்டும் அந்த அறிவித்தல்கள் ஒட்டப்பட்டிருந்தன. இந்த நிலையில் காணிகளை அளவீடு செய்ய நில அளவைத் திணைக்களத்தினர் கடந்த வெள்ளிக்கிழமை குறித்த பகுதிக்கு வந்த போது, காணி உரிமையாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் எதிர்ப்பினால் அந்த முயற்சி கைவிடப்பட்டிருந்தது.

பின்னர் கடந்த திங்கட் கிழமையும் அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. இதனால் காணி உரிமையாளர்கள் அங்கு திரண்டனர். ஆனாலும் நில அளவையாளர்கள் அந்தப் பகுதிக்கு வரவில்லை.

மக்களின் தொடர்ச்சியான எதிர்ப்பை அடுத்து நேற்றுக் காலை அதிகளவான கடற்படையினர் துப்பாக்கிகளுடன் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் அந்தப் பகுதிகளில் புலனாய்வாளர்களின் நடமாட்டமும் அதிகரிக்கப்பட்டிருந்தது. இவ்வாறான பாதுகாப்புக்கு மத்தியில் நேற்றுமுற்பகல் 10.30 மணியளவில் நில அளவையாளர்கள் தமது வாகனத்தில், கடற்படையினரின் முகாமுக்குள் புகுந்தனர்.

தொடர்ந்து கடற்படையினரின் பாதுகாப்புடன் நில அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் கடற்படை முகாமுக்கு வெளியில், பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளையும் அளவீடு செய்வதற்கு நில அளவை

(22 ஆம் பக்கம் பார்க்க)



யாழ். நகர்ப் பகுதியில் கார் மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களுக்கிடையே நேற்று மோதல் ஏற்பட்டது . இதனால் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அதை வீதியில் விட்டுவிட்டு தப்பி ஓடினர். காரில் பின் தொடர்ந்து வந்தவர்கள் அந்த மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளி சேதப்படுத்தினர்.

(ஐ-4- 21)

## நல்லிணக்க முயற்சிக்கு அனைவரும் பாடுபடுக

### பிரான்ஸ் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 17

சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கமே இலங்கையில் முக்கிய பிரச்சினையாக இருக்கின்றது என்று தெரிவித்துள்ள பிரான்ஸ் அரசு, இலங்கையில் மீண்டும் போர் ஏற்படாது இருக்கும் உபாயங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

பிரான்ஸின் தேசிய தினத்தை முன்னிட்டு, இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் போல் மோஞ்சு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளமை வருமாறு:-

நல்லிணக்கம் என்பது தனித்து அரசினால் உருவாக்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மீனவர் 36 பேர் நேற்று கைதாகி விடுதலை

கொழும்பு, ஜூலை 17

எல்லைமீறி இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து மீன் பிடித்தார்கள் என குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட 36 இந்திய மீனவர்கள் நேற்று கடலில் வைத்தே தமிழகத்துக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

கடற்றொழில் நீரியல்வள அமைச்சின் பணிப்புரைக்கமைய அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தலைமன்னார் கடற்பரப்பில் மீன்பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 13 பேர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர். அவர்களது 3 படகுகளும் கைப்பற்றப்பட்டன. இதேவேளை, கச்சதீவுக்கு அருகில் நெடுந்தீவுக் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 23 பேர் நெடுந்தீவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர் அவர்களின் 5 படகுகளும் கைப்பற்றப்பட்டன.

எனினும் இவர்களை

(22 ஆம் பக்கம் பார்க்க)

## சிறில் ரமபோஷவின் அறிக்கை இருவாரங்களில் சூமோவிடம்

கொழும்பு, ஜூலை 17

இலங்கைக்கு மேற்கொண்ட பயணம் தொடர்பிலான தனது அறிக்கையை இன்னும் இரு வாரங்களில், தென்னா பிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமாவிடம், தென்னாபிரிக்க துணை ஜனாதிபதி சிறில் ரமபோஷ கையளிப்பார் என் றும், இந்த அறிக்கையின் அடிப்படையிலேயே இலங்கை யுடனான எதிர்கால தென்னாபிரிக்க உறவுகள் குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(22 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ மயமாக்கல் தொடர்ந்தால் விளைவுகள் பாரதூரமாக அமையும்

## மத்திய மாகாண சபை உறுப்பினர் அஸாத் சாலி தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 17

இலங்கை முற்றுமுழுதாக இராணுவ மயப்படுத் தலை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது. இதனால் நாடும் மக்களும் பெரும் பிரச்சினை களை எதிர்நோக்க வேண்டி வரும். இன்னும் சில நாள்களில் கிராம சேவகர் கடமையும் இராணுவ மயமாக்கப்படலாம். இவ்வாறு தெரிவித்துள்ளார் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான அஸாத் சாலி .

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்தும் அமைப்பு நேற்று புதன்கிழமை கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இராணுவ மயமாக்கலை எதிர்த்து பொது மக்கள் வீதிக்கு வரும் நிலை ஏற்பட்டுள்ளது. அரசியல் கட்சிகள் அரசுக்கு அழுத்தம் கொடுத்து இராணுவப் பிரசன்னத்தைக் குறைப்ப

(22 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# யாழ்ப்பாணத்து முஸ்லிம் மக்களுக்கு இந்திய வீட்டுத்திட்டத்தில் பாரபட்சம்

## உடனடித் தீர்வு வழங்குமாறு மாகாணசபை உறுப்பினர் அய்யூப் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 17

இந்திய வீட்டுத்திட்டத்தில் யாழ்ப்பாண முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளமைக்கு உடனடித் தீர்வு வழங்கப்பட வேண்டும்என்று வட மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் அய்யூப் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் கூறுகையில்,

யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முஸ்லிம் பிரதேசத்தில் இந்திய வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தலில் பாரபட்சங்கள் மற்றும் இன ரீதியான பாகுபாடுகள் காணப்படுவதாக தெரிய வந்துள்ளது. உண்மை யில் இது கவலைக்குரிய விட யமாகும்.

1990களில் யாழ்ப் பாணத்தில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் மிகுந்த எதிர்பார்ப்புக்களுடன் 2009 ஆம் ஆண்டு போர் நிறைவின் பின்னர் யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேற ஆரம்பித்தனர்.

இந்நிலையில் இந்திய வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவில் ஜே86, ஜே87, ஜே88 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்பட்டிருக்கின்ற பெரிய அநீதி, இன ரீதியான பாரபட்சம் என்பவற்றை யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்களின் இருப்பை வேரறுக்க மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகளாகவும், இனவாத அடிப்படையிலான நடவடிக்கைகளாகவுமே நோக்க வேண்டியிருக்கின்றது.

1990களில் யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டபோது 3,417 குடும்பங்கள் 2,480 வீடுகளில் வசித்ததாக யாழ்.மாவட்ட செயலகம், யாழ்.மாநகர சபை என்பவற்றின் தரவுகள் தெரிவிக்கின்றன. இதன்படி 2,480 வீடுகளும் போர்க் காலத்தில் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ சேதப்படுத்தப்பட்டுள்ளன. வெளியேறிய 3,417 குடும்பங்கள் தற்போது இரட்டிப் படைந்துள்ளமையால் 7,000 குடும்பங்கள் அளவில் மீள்குடியேற்றப்பட வேண்டும். 2009 ஆம் ஆண்டு போர் நிறைவின் பின் னர் மீள் குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்ட போது மீள்குடியேற்றத்துக்காக 2,252 குடும்பங்கள் யாழ். செயலகத்தில் பதிவுகளை மேற்கொண்டுள்ளன. அவர்களுள் பெரும்பாலானவர்கள் போர் காரணமாக வீடுகளை இழந்தோர், காணிகளற்றோர் ஆவர்.

2009 முதல் இந்திய வீட்டுத் திட்டத்துக்காக முஸ்லிம் மக்கள் விண்ணப்பித்திருந்த போதிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்திய வீட்டுத் திட்டத்தின் முதலாம், 2 ஆம், 3 ஆம் கட்டங்களுள் ஒரு முஸ்லிம் குடும்பமேனும் உள்வாங்கப்படவில்லை.

முஸ்லிம்பிரதேசங்கள் அமைந்திருப்பது யாழ். மாநகர சபை எல்லைக்குள்ளேயே என்பதால் வீட்டுத் திட்டங்களுக்காக விண்ணப்பிப்பதற்கு விண்ணப்பதாரர்கள் தங்களுடைய மீள் குடியேற்றம், காணி உரித்து, மாநகர நகர விதி முறைகள், நில அளவைத் திட்டம் என்பவற்றை உறுதிப்படுத்தும் 10 விதமான ஆவணங்களைச் சமர்ப்பித்தே விண்ணப்பங்களை மேற்கொள்ள வேண்டும் என்று பிரதேச செயலாளரால் அறிவுறுத்தப்பட்டது. இதன் காரணமாக மீள் குடியேற்றத்துக் காக பதிவு செய்த 2,252 பேர்களில் 350 பேர் மாத்திரமே விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கத் தகுதியுள்ளவர்களாக இருந்தனர்.

இந்திய வீட்டுத்திட்ட ஒழுங்கமைப்புக் குழு என்ற சமூக முயற்சியினூடாக ஒவ்வொரு குடும்பங்களும் ரூபா பத்தாயிரம் தொடக்கம் 15 ஆயிரம் வரை செலவு செய்து ஆவணங்களை பூரணப் படுத்தினர். 2013 ஏப்ரல் 28ஆம் திகதி கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜீ. ஏ. சந்திரசிறி, யாழ்.மாவட்ட அரச அதிபர் எஸ். அருமைநாயகம் ஆகியோர் முன்னிலையில் பொது மக்கள் ஒன்று திரண்டு பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரத்திடம் விண்ணப்பங்களைக் கையளித்தார்கள். இதன் பிரதிகள் இந்தியத் தூத ரகத்துக்கும் வழங்கப்பட்டன. கடந்த ஒரு வருட காலத்துக்கும் மேலாக இவ்விண்ணப்பங்கள் குறித்து எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவரவில்லை.

இவைபோன்ற முக்கிய விடயங்களை அவதானிக்கின்ற போது யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட முஸ்லிம் மக்கள் திட்டமிட்ட வகையில் வீட்டுத் திட்டத்தினுள் உள்வாங்கப்படவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. சமூக நல்லிணக்கம் குறித்து அக்கறை கொண்டிருக்கின்ற, தமிழ் முஸ்லிம் உறவை வலியுறுத்துகின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட அமைச்சர் என்ற வகையில் இவ்விடயத்தில் தலையிடு வதோடு முஸ்லிம் மக்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

அத்தோடு பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக விண் ணப்பித்த அனைவரும் மதிப்பீட்டு நடவடிக்கைக்குள் உள் வாங்கப்பட வேண்டும் என்றும் இப்பிரதேசத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள வீட்டுத் திட் டங்கள் இப்பிரதேச மக்களுக்கு முழுமையாக பயனளிக்கும் வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். (வ)

## போதனா மருத்துவமனை வெளி நோயாளர் பிரிவில் 3,08,398 பேருக்கு சிகிச்சை

2013 காலப் பகுதியில் யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் 3 லட்சத்து 8 ஆயிரத்து 398 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையால் திரட்டப்பட்ட புள்ளிவிவரத்தில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலும் அங்குள்ள பல்வேறு வகைப்பட்ட சிகிச்சைப் பிரிவுகளில் இந்தக் காலப்பகுதியில் 6 லட்சத்து 59 ஆயிரத்து 516 பேர் சிகிச்சை பெற்றுள்ளார்கள் என்றும் இந்தப் புள்ளி விவரத்தில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது. (வ-51)

## வளர்ப்பு நாய்க்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குள் அமைந்த பசார்-II பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்படவுள்ளதாகவும், வளர்ப்பு நாய்களுக்கான உரிமக் கட்டணமாக 20 ரூபா செலுத்தப்பட வேண்டும் எனவும் யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

இன்று 17ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப.11மணி வரை அத்தியடி பிள்ளையார் கோயிலடியிலும், மு.ப.11 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணி வரை ஸ்ரான்லி வீதி, ஆயுள் வேதக் கல்லூரியிலும்,

நாளை 18ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மு.ப.11 மணி வரை அருள் மாதா கோயிலடி ராசாவின் தோட்ட வீதியிலும், மு.ப.11 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணிவரை கோயில் வீதி, றக்கா வீதிச் சந்தியிலும்-

எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப.11மணிவரை மருதடி வைரவர் கோயிலடியிலும், மு.ப.11 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணிவரை கற்பகப் பிள்ளையார் கோயிலடி சன சமூக நிலையத்திலும்-

22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப. 11மணிவரை றக்கா வீதி இளங்கதிர் சனசமூக நிலையம், மு.ப.11 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணிவரை கோவில் வீதி, குழந்தையேசு கோயிலடி வீதியிலும் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)


### பனை அபிவிருத்திச் சபை

#### கூறுவிலை கோரல்

பின்வரும் பொருள்கள் தங்களிடம் இருப்பின் அதற்கான ஆகக் குறைந்த கூறுவிலையினையும் நிபந்தனைகளையும் குறிப்பிட்டு கூறுவிலைகளை எதிர்வரும் 31/07/2014ஆம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| No | Things | Size/ Description | Quantity |
|---|---|---|---|
| 01 | Gas Cylinder with Gas | 37.5 Kg | 05 |
| 02 | Gas burner Industrial | 4 Line | 03 |
| 03 | Boiling vessel with lid | 100 Lit | 04 |
| 04 | Buckets - stainless steel | 20 Lit | 06 |
| 05 | Buckets - stainless steel | 10 Lit | 06 |
| 06 | Sealer - Bottle | Cork | 02 |
| 07 | Vessel - Stainless steel (14 Gage) | 3' X 2' X 1½' | 05 |
| 08 | Empty bottle glass (Soft Drink) | 200 ml | 10,000 |
| 09 | Plastic box (200ml bottle 50 nos) | 50 bottle | 200 |
| 10 | Jam bottle - Glass thread (225g Bottle Weight) | 450 g | 10,000 |
| 11 | Electronic Balance | 0 Gram - 1 Kg | 05 |
| 12 | Electric Motor - 3 Phase | 3 Hp/ 1500 Rpm | 03 |
| 13 | Shrink Tunnel | Voltage (V/Hz): 220/ 50/ 380/50 (3PH) 220/ 60 (3PH)<br>Power (Kw): 6.5 Loading (Kg): 10<br>Tunnel Size (LXWXH): 900X450X(50-250) (mm) | 01 |
| 14 | Vacuum Packing Machine | Voltage (V/Hz): AC 220/ 50/ 110/60<br>Motor Power (W): 900 Sealing Power (W): 500<br>Sealing Length & Width (mm): 370X10 | 01 |
| 15 | Continuous Band Sealer | Voltage (V/Hz): AC 220/ 50/ 110/60<br>Motor Power (W): 900<br>Sealing Power (W): 300X2 Speed (m/min):0 | 01 |

குறிப்பு: 11 தொடக்கம் 15 வரையான பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்ட நாட்டை குறிப்பிடவும்.
மாதிரிகளை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

Chairman,
Palmyrah Development Board, National Housing Secretariat,
1st Floor, Kandy Road, Jaffna.
Telephone: 021 222 2034, E-mail: slpdbho@yahoo.com (C15419)(12.3.6)

10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வேலுப்பிள்ளை குமாரசுவாமி



பிறப்பு 01.04.1936 மறைவு 07.07.2004

திதி: ஷஷ்டி (17.07.2014)

தெய்வத்தின் திருவுருவே
அப்பா நீங்கள்
எம்மைப்பிரிந்து இன்றோடு
பத்து ஆண்டுகளாயினவே
ஆண்டுகள் பல கடந்தும்
ஆறவில்லை உங்கள் பிரிவாலான துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி மேற்கு. (50028)(12)(3.6) குடும்பத்தினர்.

7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 - 04 - 1933 மறைவு 03 - 07 - 2007

திதி:திருதியை

அமரர் நேசம்மா அப்புத்துரை

அன்பின் பிறப்பிடமே!
உறவுகளை ஒன்றாக்கி வாழவைத்த தெய்வமே!
எல்லோரையும் நல்வழிப்படுத்திய உத்தமியே!
ஆண்டுகள் ஏழு ஓடி மறைந்தாலும் - உங்கள்
திருவுருவம் எங்கள் மனதைவிட்டு அகலாது.

உங்கள் நினைவுகளுடன்

அம்பகர் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். குடும்பத்தினர்.

## மாடுகளுக்கு காதுகளில் அடையாளமிடல் ஆரம்பம்

கரவெட்டிப் பிரதேச அரசினர் கால்நடை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவால் 18 மாத வயதுக்கு மேற்பட்ட மாடுகளுக்கு காதுகளில் அடையாளம் இட்டு இலக்கத்தகடு வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினர் கிராம சேவையாளர்களின் அனுசரணையுடன் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.
இன்று வியாழக்கிழமை கரணவாய் கிழக்கிலும், நாளை வெள்ளிக்கிழமை உடுப்பிட்டியிலும், நாளை மறுதினம் சனிக்கிழமை உடுப்பிட்டி தெற்கிலும், எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உடுப்பிட்டி வடக்கிலும் இந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-173)

## அரச பதவியில் இருந்து ஓய்வு



தென்மராட்சி, ஜூலை 17
சாவகச்சேரி நகர்க் கிராம அலுவலராக கடமையாற்றிய விஸ்வநாதர் சிவசரணநாதன் தனது 34 வருட அரச பணியிலிருந்து கடந்த மாத இறுதியில் இளைப்பாறியுள்ளார். கடந்த 1980 ஆம் ஆண்டு விவசாய விஸ்தரிப்பு சேவையாளராக அரச சேவையில் இணைந்த இவர் கடந்த 1991 இல் கிராம அலுவலர் சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டு கிளிநொச்சி புதுமுறிப்பு கிராம அலுவலராக நியமிக்கப்பட்டார்.
அதன் பின்னர் தென்மராட்சி பிரதேச செயலகத்தின் கைதடி கிழக்கு, கைதடி வடக்கு, நுணாவில் கிழக்கு, கோயிற் குடியிருப்பு, சாவகச்சேரி நகர் ஆகிய பிரிவுகளிலும் கடமையாற்றியுள்ளார்.
இவர், இடப்பெயர்வு காலங்களில் தென்மராட்சி பிரதேசத்தில் அமைக்கப்பட்ட தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்களுக்கு அர்ப்பணிப்பான சேவையை வழங்கி நற்பெயர் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-9)

## வட்டக்கச்சி ம.வி. மத்திய கல்லூரியாக பெயர் மாற்றம்

வட்டக்கச்சி, ஜூலை 17
கிளிநொச்சி, வட்டக்கச்சி மகாவித்தியாலயம் கடந்த 19 ஆம் திகதி முதல் வட்டக்கச்சி மத்திய கல்லூரி என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
இது குறித்து வடக்கு மாகாண சபை கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் கடிதம் மூலம் அறிவித்துள்ளார். (ஓ)

## வாக்காளர் பட்டியல் மீள்திருத்தம் குறித்து விழிப்புணர்வுப் போட்டிகள்

கரணவாய், ஜூலை 17
தேர்தல்கள் ஆணையாளரின் வாக்காளர் பெயர்ப்பட்டியல் மீள்சீர் செய்தல் குறித்த விளக்கங்கள் பொதுமக்களுக்கு மாணவர்கள் மூலமாக தெரியப்படுத்தும் வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் பல்வேறு போட்டிகள் தேர்தல் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ளன.
நாம் அனைவரும் வாக்களிப்போம், வாக்காளர் தம்மைப் பதிவு செய்தல் வேண்டும், வாக்குரிமை எமக்குரியதாகும், வாக்காளர் இடாப்பு ஒவ்வொரு வருடமும் பரிசீலனை செய்யப்பட வேண்டும், பிரச்சினை இல்லாது வாக்களிக்க வேண்டும். ஆகிய தலைப்புக்களில் மூன்று பிரிவுகளாக சித்திரப் போட்டிகளும் - தரம் 10 - 11, தரம் 12 - 13 ஆகிய இருபிரிவு மாணவர்களுக்கு சுமார் 1000 - 1500 சொற் களுக்குள் "வாக்குரிமை மக்களின் உரிமை, மக்கள் பரமா திபத்திய சர்வஜன வாக்குப் பலம் சரியான காலத்தில் வாக்குப் பதிவு செய்தல் எமது உரிமையாகும், சுதந்திரமான வாக்குமுறை எமது உரிமையாகும்" ஆகிய தலைப்புக்களில் கட்டுரைப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.
இந்தப் போட்டிகளில் பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள் தமது பாடசாலை அதிபர் ஊடாக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக தேர்தல் ஆணையாளர், தேர்தல் அலுவலகம், சரண மாவத்தை, ராஜகிரிய என்ற முகவரிக்கு தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை - வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்கள், பாடசாலை மட்டத்தில் கட்டுரைப்போட்டிகளை நடத்தி அதில் தெரிவு செய்யப்பட்ட 6 கட்டுரைகளை வடமராட்சி வலயக் கல்வி அலுவல கல்வி அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (வ-108)

## தரம் 5 மாணவருக்கு மாதிரிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 17
வடமாகாண பாடசா லைகளில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை மக்கள் வங்கியின் அனுசரணையுடன் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு தெரிவு செய்யப்பட்ட பரீட்சை நிலையங்களில் நடைபெறும்.
தென்மராட்சி கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 10 நிலை யங்களில் பரீட்சையை நடத்த ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக தென்ம ராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர்.
(வ-9)

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

வலி.வடக்கு, ஜூலை 17
ஏழாலைப் பகுதியில் கிணற்றிலிருந்து குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது. ஏழாலை வடக்கைச் சேர்ந்த சின்னராசா தர்மராசா (வயது - 57) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
சடலம் கிணற்றில் கிடக்கக் கண்டவர்கள், சுன்னாகம் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டனர்.
மல்லாகம் நீதிமன்றத்தின் பணிப்புரைக்கு அமைய உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ். போதனா வைத் தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ஐ-86)

## அகளங்கனின் மணிவிழா

கலாநிதி தமிழ்மணி அகளங்கனின் மணிவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் கலாசார மண்டபத்தில் உடுவை எஸ்.தில்லைநடராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம், வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா ஆகியோரும்- விசேட விருந்தினராக கிழக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தண்டாயுதபாணியும் கலந்து கொள்வர்.
வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் வடமாகாண சபை வவுனியா மாவட்ட உறுப்பினர்களும் நிகழ்வில் கலந்து கொள்வர். (ஓ-421)

## நூல் வெளியீ டு

கோப்பாய், ஜூலை 17
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ம.நிரேஸ்குமாரின் புதுயுகம் மலர்கிறது குறுநாவலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியளவில் இடம் பெறவுள்ளது.
இந்த நிகழ்வு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெறும்.
பிரதம அதிதியாக க.மகாலிங்கமும் சிறப்பு அதிதியாக மருத்துவர் ஜெ.ரஜீவனும் கலந்து கொள்வார்கள். (க)

சுதுமலை வடக்கு
அருள்மிகு ஈஞ்சடி ஸ்ரீ சாமுண்டிகா சமேத ஞானவைரவர் தேவஸ்தானம்
தேர்த்திருவிழா சிறப்புமலர் - 17.07.2014

அனைவருக்கும் சௌபாக்கியம் கிடைக்கட்டும்



சுதுமலை ஈஞ்சடி ஞானவைரவர் ஆலய தேர் புதிதாக அமைக்கப்பெற்று, நேற்று வெள்ளோட்டம் இடபெற்று இன்று தேர்த் திருவிழா நடைபெறுகின்றது. பிரமாண்டமான அழகிய சிற்பமும் சித்திரமும் நிறைந்து பார்ப்போர் வியக்கத்தக்க அழகைத் தன்னகத்தே கொண்டு காணப் படும் இத்தேரில் இன்று ஞானவைரவர் பவனி வருகின்றார். இத்தேரினை அமைக்கக் காரணமாக இருந்த உபயகாரர்களுக்கும், ஞானவைரவர் அடியார்களுக்கும் சிற்பிமார்களுக்கும் ஆசாரியாருக்கும் ஞானவைரவர் அருள் புரிந்து அனைத்து சௌபாக்கியமும் பெற உதவ வேண்டும் என்று ஆசி கூறி அமைகின்றேன்.

பிரதம குரு உருத்திரமூர்த்தி
ஈஞ்சடி ஞானவைரவர் தேவஸ்தானம்

தேர்த்திருவிழா நிகழ்ச்சி நிரல்
காலம் - 17.07.2014 ஆடி முதலாம் நாள் வியாழக்கிழமை

| | |
|---|---|
| அபிஷேகம் | - காலை 8.00 மணி |
| வசந்தமண்டபப் பூசை | - மு.ப. 10.00 மணி |
| தேர்ப்பவனி | - நண்பகல் 12.00 மணி |
| பச்சை சாத்தல் | - பி.ப.2.00 மணி |

தர்மகர்த்தா சபையினர்
சுதுமலை வடக்கு ஈஞ்சடி ஞானவைரவர் தேவஸ்தானம்



சாந்தியும் சமாதானமும் நிலைக்கட்டும்



ஈழமணித்திருநாட்டின் வடக்கே யாழ்ப்பாண மாவட்டத்தில் இயற்கை அழகு பொழிகின்ற சுதுமலைக் கிராமத்தில் ஈஞ்சடிப்பதியிலே தொன்மை வாய்ந்த கிராமியத் தெய்வ ஆலயமாக ஈஞ்சடி ஞானவைரவப் பெருமான் ஆலயம் காணப்படுகின்றது. வைரவப் பெருமான் ஆலயங்களிலே முதன் முறையாகத் தேர் திருவிழா நடைபெற்ற ஆலயமாகக் காணப்படுகின்றது. வைரவர் ஆலயங்களிலே சுதுமலை வடக்கு ஈஞ்சடி ஞானவைரவர் தேவஸ்தானமே மிகப்பெரிய ஆலயம் ஆகும். பதினொரு தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெற்று, பொங்கல் விழாவுடன் நிறைவுபெற்று விழாப் பொலிவு காணும் ஆலயமாகும். கடந்த மூன்றாண்டுகளுக்கு முன் சப்பரமும் சென்ற வருடம் திருக்கைலாயமும் இவ் வருடம் புதிய சித்திரத் தேரும் எம்பெருமான் அருளால் நிறைவு பெற்றுள்ளது. அடுத்துவரும் ஆண்டு திருமஞ்சம் செய்வதற்கு ஏற்பாடாகி நடைபெற்று வருகின்றது. இன்று வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் நடைபெறவுள்ளது. இன் நன்னாளில் அடியார்கள் அனைவரும் வருகைதந்து தேர்வடம் பற்றி இழுத்து ஈஞ்சடி ஞானவைரவப் பெருமானின் அருளைப்பெற்று மனதில் சாந்தியும் சந்தோஷமும் நித்தம் நிலைத்து வாழ வேண்டிப் பிரார்த்தித்து எதிர்வரும் ஆண்டில் ஆலயத்தில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் செய்யப்பட்டு திருப்பணிவேலைகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றமையால் மீளா அடியவர்களின் அன்பான ஒத்துழைப்பையும் வேண்டி அமைகின்றேன்.

க. இராசரத்தினம்
தலைவர், தர்மகர்த்தா சபை.

★★★★★★★★★★★★★★★ விளம்பர அனுசரணையாளர்கள் ★★★★★★★★★★★★★★★

ஸ்ரீ குமரன்
ஹாட்வெயார்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீ சுபா பேக்கரி
சுதுமலை வடக்கு
மானிப்பாய்.

விநாயகர்
கட்டிங் சென்ரர்
நகைப்பூங்கா
கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: நா.பூலோக நாதன்

சுந்தர் கேபிள்
T.V
சுதுமலை வடக்கு, ஈஞ்சடி

ஸ்ரீ ஐங்கரன்
பேக்கரி
துரைவீதி, இணுவில்.
சுடச்சுடப்பாண் இரவு 7.00 மணிக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

அபிராமி சவுண்ஸ்
தொடர்புகொள்ள:
அம்பாள் ஸ்ரோர்ஸ் சுதுமலை.
பாடசாலை வீதி, இளவாலை,
பாடசாலை வீதி, சுண்டுக்குளி.

அம்பாள் ஸ்ரோர்ஸ்
அம்பாள் அரைக்கும் ஆலை
சுதுமலை அம்மன் கோயிலடி
சுதுமலை.

V.K.K.
அரிசி ஆலை
ஆலடி, உடுவில்.

S.K.M.
நகைப்பூங்கா
கே.கே.எஸ்.ரோட்,
சுன்னாகம்.

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பை உடன் தடை செய்ய வேண்டும்

## ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி வலியுறுத்துகின்றன

கொழும்பு, ஜூலை 17
நாட்டின் சட்டதிட்டங்களை மீறியும், நீதிக்கு முரணாகவும் செயற்படும் தமிழ் தேசியக் கூட்டமைப்பை தடை செய்ய வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய மற்றும் தேசிய சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.


உதய கம்மன்பில

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினரும் மேல் மாகாண அமைச்சருமான உதய கம்மன்பில,
அரசைக் குற்றவாளியாக்கும் முயற்சியில் இன்று நாட்டில் பல செயற்பாடுகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. அரசுக்கு எதிரான சர்வதேச சந்திப்புக்களையும், இலங்கைக்குள் ஆர்ப்பாட்டங்களையும் சிவில் அமைப்புகள் மேற்கொண்டு வருகின்றன.
தமிழ் மக்களின் உரிமைகள் என்ற கொள்கையிலேயே முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் போராட ஆரம்பித்தார்கள். இறுதியில் தமிழ் மக்களின் உரிமைகளை மதிக்காது தமது சுய நலத்துக்காக ஆயுதமேந்தி போராட ஆரம்பித்ததன் விளைவு என்னவானது என்பதை இன்று அனைவரும் உணர்ந்திருப்பார்கள்.
எனினும் வடக்கில் மீண்டும் ஒருமுறை போராட்டத்தை ஆரம்பிக்கும் வகையில் சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து புலிகளை ஆதரிக்கும் இங்குள்ள சிவில் அமைப்புகளும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் முயற்சிக்கின்றது. நாட்டுக்கு எதிராக சட்டங்களையும் நீதியையும் மதிக்காது செயற்படும் தமிழ் தேசியக் கூட்டமைப்பை உடனடியாக தடை செய்து நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் - என்று தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முசம்மில்,
தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமது பிரிவினைவாதக் கொள்கையை வடக்கு தமிழ் மக்கள் மத்தியில் பரப்பி தனி நாட்டை வடக்கில் உருவாக்கும் முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர். தமிழ் மக்களுக்கு இப்போது தேவைப்படுவது ஆர்ப்பாட்டங்களோ, புரட்சிகளோ அல்ல. அவர்களுக்கு அமைதியான சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டியதே இப்போதைய தேவையாக உள்ளது.
வடக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனியாக செயற்பட்டு தமக்கென சட்ட திட்டங்களை மீறி செயற்படுவதை அரசு அனுமதிக்கக்கூடாது. இவ்வாறு உள்நாட்டுக்குள் மக்களை தூண்டி விடுவது சர்வதேசத்திற்கு வாய்ப்பாக அமையும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## ஹெரோயின் வியாபாரி தப்பியோட்டம்

கொழும்பு, ஜூலை 17
கடந்த 12ஆம் திகதி கந்தானை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு வத்தளை நீதிவானின் உத்தியோகபூர்வ இல்லத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு, விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிரபல ஹெரோயின் வியாபாரியொருவர் அன்றைய தினமே சிறையிலிருந்து தப்பிச்சென்றுள்ளார் என்று சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் துஷார உபுல் தெனிய தெரிவித்துள்ளார்.
மினுவாங்கொடை, அளுத்தேபொல பிரதேசத்தைச் சேர்ந்த சுரேஷ் சஞ்சீவ எனும் 25 வயது இளைஞரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார். கடந்த இருவார காலத்தில் இவ்வாறு தப்பிச்சென்ற இரண்டாவது நபர் இவராவார்.
மஹர சிறைக்காவலர்களின் பாதுகாப்புடன் ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பிரபல ஹெரோயின் வியாபாரியான துஷித சாமர கடந்த 2ஆம் திகதி அதிகாலை தப்பிச்சென்றிருந்தார். (ற)

## வாக்குகளை அதிகரிப்பதற்காகவே அரசு மோதல்களை ஏற்படுத்துகிறது

### குற்றஞ்சாட்டுகின்றது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, ஜூலை 17
குறைந்து வரும் வாக்குகளை அதிகரித்து கொள்வதற்காக அரசு சில அடிப்படைவாதிகளை பயன்படுத்தி மோதல்களை உருவாக்கி,, சிங்கள வாக்குகளை அதிகரிக்க முயற்சித்து வருகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வாக்கு வங்கியில் விரைவான வீழ்ச்சி ஏற்பட்டு வருவது கடந்த தென் மற்றும் மேல் மாகாண சபைத் தேர்தல்களில் தெரியவந்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் கூறும் போது;
"நாட்டையும் மக்களையும் விட தமது அதிகார பேராசையே அரசின் முக்கிய நோக்கமாக உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியால் மட்டுமே இந்த இனவாத தீயை அணைக்க முடியும். இராணுவத்தினர் தமது உயிர்களை தியாகம் செய்து, விடுதலைப் புலிகளை தோற்கடித் தனர்.


கயந்த கருணாதிலக்க.

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட பின்னர், நாட்டின் பிரச்சினைகளை தீர்த்து, மக்களுக்கு நிவாரணங்களை வழங்கி, வாழ்க்கை சுமையை குறைத்து, நாட்டை அபிவிருத்தி செய்ய அரசுக்கு 5 ஆண்டு என்ற நீண்டகாலம் கிடைத்தது.
அரசின் இயலாமை, பொய் மற்றும் ஏமாற்றுதலை மக்கள் நன்கு புரிந்து கொண் டுள்ளனர்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## ஒன்பது கிலோ ஹெரோயின் மீட்பு

கொழும்பு, ஜூலை 17
பொரளை, வனாத்தமுல்லை பகுதியில் 9 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளார். (ற)


## அவமதிக்கப்பட்ட விருந்தாளிகள்

........போர் முடிவடைந்து சிறிது காலத்தின் பின்பு இலங்கை அரசின் அழைப்பின் பேரில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான்கீமூன் கொழும்புக்கு விஜயம்செய்தார்.
அப்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இனப் பிரச்சினைக்கு 13ஆவது திருத்தத்துக்கும் மேலதிகமான அதிகாரங்களை தமிழர்களுக்கு வழங்கித் தீர்வு காணப்போவதாகவும், போர்க்குற்றங்கள் தொடர்பாக ஒரு சுயாதீனமான விசாரணை நடத்தப்போவதாகவும் வாக்குறுதி கொடுத்திருந்தார்.
வருடங்கள் பல கழிந்த நிலையிலும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையால் மனித உரிமைகள் பேரவையில் போர்க்குற்றங்கள் தொடர்பாக ஒரு பிரேரணை கொண்டுவரப்பட்டது.
அப்போதும் அமைச்சர் விமல் வீரவன்ச ஐ.நா அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினார். அது மட்டுமன்றி ஐ.நா பொதுச்செயலாளரின் படத்தைச் செருப்பு மாலையிட்டு அவமதித்து தீயிட்டுக் கொளுத்தினர்.
இப்படி விருந்தினராக வந்தவரை........





## சீனர் விரும்பும் நாடாக மாறியுள்ளது இலங்கை

### பஸில் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17
சீன சுற்றுலாப் பயணிகள் அதிகம் விரும்பி பயணம் செய்யும் நாடாக இலங்கை மாறியுள்ளது என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
சீனாவின் ஷங்காய் நகரில் நடைபெற்ற இலங்கையின் சுற்றுலா ஊக்குவிப்பு தொடர்பான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
"சீனாவுக்கும் இலங் கைக்கும் இடையி லான தொடர்புகள் நாளுக்கு நாள் வலுவ டைந்து வருகிறது.
சுற்றுலாத்துறை மூலம் இலங்கை பெரும் வளர்ச்சியை எட்டியுள்ளதால், சீன முதலீட்டாளர்கள், இலங்கையின் சுற்றுலாத்துறையில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுக்கின்றோம். 2016 ஆம் ஆண்டு இலங்கைக்கு 25 லட்சம் சுற்றுலாப் பயணிகள்வருகைதருவார்கள் என எதிர்பார்க்கின்றோம்"- என்று தெரிவித்துள்ளார். (ற)


MULTIMEDIA
கல்விக்கான புலமைப்பரிசில் பரீட்சை
➩ பரீட்சை அனுமதி முற்றிலும் இலவசம்
➩ அடிப்படைத் தகைமை Grade 10
➩ வினாத்தாள் 30 நிமிடங்கள் மட்டுமே
➩ கலை, சினிமா, பொது அறிவு வினாக்கள்
➩ சர்வதேச அங்கீகாரம் பெற்ற இந்திய சான்றிதழ்கள்
WIN 65% Scholarship test on
July 19th & 20th
CSC-ASIAN
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION
யாழ்.நகரில் 2G, ஸ்ரான்லி வீதி, T.P : 021-222 5677

இடமாற்றத்தை முன்னிட்டு.....
யாழ். நகரம் காணாத மிக மிக மலிவு விற்பனை!
இருப்பகற்றலை முன்னிட்டு சில தினங்கள் மட்டுமே
+ பட்டு சாறிகள் - 2250/=
+ சல்வார் - 800/=
+ இந்தியன் ஸ்கேட் - 300/=
+ இந்தியன் ரொப் - 750/=
+ சேட் - 250/=
+ ஜீன்ஸ் - 650/=



மேலும் அனைத்து ஆடைகள் மற்றும் பான்சி பொருள்கள், சிறுவர்களுக்கான விளையாட்டு பொருள்கள் அனைத்தும் குறித்த விலையிலிருந்து பாதி விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்
114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 221 9393

# காஸாவில் தொடர் குண்டு மழை – சாவு எண்ணிக்கை 200 ஆகியது



குழந்தையுடன் வீதியில் தவிக்கும் தாய் ஒருவர்

காஸா, ஜூலை 17

காஸா பகுதியில் இஸ்ரேல் மீண்டும் விமானத் தாக்குதல் நடத்தியதில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 200 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த ஒரு வார காலமாக இஸ்ரேல் போர் விமானங்கள், காஸா முனையில் தொடர் தாக்குதல்கள் நடத்தி வருகின்றன. இதில் 192 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

இவர்களில் பெரும்பாலானோர் அப்பாவிப் பொதுமக்கள். மேலும், இஸ்ரேல் போர் விமானங்களின் குண்டு வீச்சுக்குப் பயந்து ஆயிரக் கணக்கான காஸா முனை மக்கள் இடம் பெயர்ந்து, ஐ.நா. முகாம்களில் தஞ்சம் அடைந்தனர்.

அப்பாவிப் பலஸ்தீன மக்கள் கொன்று குவிக்கப்பட்டு வருவது உலகமெங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இரு தரப்பும் சண்டை நிறுத்தம் செய்ய வேண்டும் என்று ஐ.நா. அழைப்பு விடுத்தது. ஆனால் நிலைமையில் மாற்றம் இல்லை.

இந்த நிலையில் எகிப்து போர் நிறுத்தத் திட்டம் ஒன்றை முன்வைத்தது. அந்த திட்டத்தில், இரு தரப்பிலும் சண்டையை நிறுத்திவிட வேண்டும், அதைத் தொடர்ந்து இஸ்ரேல் பலஸ்தீன தூதுக் குழுவினர் பேச்சு நடத்தவேண்டும், இதில் எகிப்து மத்தியஸ்தம் செய்யும் எனக் கூறப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை இஸ்ரேல் ஏற்றுக்கொண்டது. ஆனால் இந்த திட்டத்தை ஹமாஸ் தீவிரவாதிகள் நிராகரித்து விட்டனர்.

இது பற்றி அந்த இயக்கத்தின் செய்தி தொடர்பாளர் பாவ்ஜி பார்ஹூம் கூறும்போது, சண்டை நடந்து கொண்டிருக்கும்போது, நீங்கள் அதை நிறுத்திக்கொண்டு, பேச்சுக்கு வந்து விட முடியாது. என்றார்.

மேலும், போர் நிறுத்தம் தொடர்பாக அதிகாரப்பூர்வமான வகையில் ஹமாஸ் எந்த திட்டத்தையும் பெறவில்லை. காஸாவில் பெருமளவு பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், ஒரு தரப்பில் போர் நிறுத்தம் என்பது பயன் அளிக்காது என கூறினார்.

ஹமாஸ் ஆயுதப்படை பிரிவு தலைவர் எஜ்ஜேடைன் அல் குவாசமும், போர் நிறுத்தத் திட்டத்தை நிராகரித்து விட்டார். எதிரிகளுடன் சண்டை மேலும் தீவிரமாக நடக்கும் என அவர் கூறினார். இதே போன்று போர் நிறுத்தத்தை ஹமாஸ் ஏற்காவிட்டால், காஸா முனை மீது தாக்குதல் மேலும் தீவிரமாக நடத்தப்படும் என்று இஸ்ரேல் அதிகாரிகளும் அறிவித்தனர். இந்நிலையில் நேற்று மீண்டும் காஸா பகுதியில் இஸ்ரேல் விமானத் தாக்குதல் நடத்தியுள்ளது. (த)

CMYK

## மாடியிலிருந்து குதித்து உயிர் தப்பிய கர்ப்பிணி

இஸ்தான்புல், ஜூலை 17

தீப்பிடித்து எரிந்த மாடியில் இருந்து நிறைமாதக் கர்ப்பிணி ஒருவர் குதித்து உயிர் தப்பியுள்ளார்.

இஸ்தான்புல் துருக்கின் நாட் டின் இஸ்தான் புல் நகரின் ஒரு பகுதியின் கட்டடம் ஒன்று திடீரெனத் தீப்பிடித்துக் கொண்டது. தீயை அணைப்பதற்கு அங்கிருந்த பொதுமக்கள் அனைவரும் போராடிக் கொண்டு இருந்தனர்.

அப்போது தீப்பிடித்த கட்டடத்தின் முதல் மாடியின் ஜன்னல் வழியே ஒரு நிறைமாதக் கர்ப்பிணிப் பெண் தன்னைக் காப்பாற்றும்படி கூச்சலிட்டார். தீ மளமளவெனப் பரவி கட்டடம் முழுவதும் பற்றி எரியத் தொடங்கியது.

புகையும் வெப்பமும் அதிகமாக, அந்தப் பெண்ணால் பார்க்கக் கூட முடியவில்லை. இருந்தும் அந்தப் பெண் முதல் மாடியின் பல்கனிக்கு வெளியே வந்துவிட்டார். அப்போது அங்கு பொதுமக்கள் தயாராக வைத்திருந்த விரிப்பு ஒன்றில் அந்தக் கர்ப்பிணிப் பெண்ணைக் குதிக்கச்சொல்லி அவர்கள் அதில் பாதுகாப்பாகப் பிடித்துக் கொண்டனர்.

பின்னர் உடனடியாக அவரை மருத்துவமனையில் கொண்டு சேர்த்தனர். அங்கு சிகிச்சை அளிக்கப்பட்ட பின் தற்போது அவர் நலமாக உள்ளார். (த)

# பொஸ்னிய படுகொலைகளுக்கு நெதர்லாந்து அரசும் பொறுப்பு

### நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு


அம்ஸ்ரடாம், ஜூலை 17

1990 களில் பொஸ்னிய போரின்போது ஸ்ரெப்ரனீச்சாவில் 300 க்கும் மேற்பட்ட மக்களின் படுகொலைக்கு நெதர்லாந்து அரசு பொறுப்பு என நெதர்லாந்து நீதிமன்றம் ஒன்று தீர்ப்பளித்துள்ளது.

ஸ்ரெப்ரனீச்சாவின் தாய்மார்கள் என்ற பெயர் கொண்ட பெண்கள் அமைப்பினர், தங்களுடைய் குடும்பத்து ஆண்களைப் பாதுகாக்க அரசு தவறிவிட்டதென குற்றம்சாட்டி தொடுத்த வழக்கில் இந்த முடிவு வந்துள்ளது.

**இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஐரோப்பாவில் அதிகம் பேர் ஒட்டு மொத்தமாகச் செய்யப்பட்ட இனப் படுகொலைச் சம்பவம் இது.**

அந்தப் போரின்போது ஸ்ரெப்ரனீச்சாவுக்கு சற்று வெளியே அமைக்கப்பட்டிருந்த ஐ.நா வின் முகாமில் தஞ்சமடைந்திருந்த ஆயிரக்கணக்கான ஆண்களையும், சிறுவர்களையும் அமைதிகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த டச்சுப் படையினர் பொஸ்னிய இராணுவத்திடம் ஒப்படைத்திருந்தனர். பின்னர் இந்த அல்பேனியர்கள் கொல்லப்பட்டிருந்தனர். இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் ஐரோப்பாவில் அதிகம் பேர் ஒட்டுமொத்தமாகச் செய்யப்பட்ட இனப் படுகொலைச் சம்பவம் இது வென்று கருதப்படுகிறது. (த)




பிரேஸிலில் நடைபெறும் பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்பதற்காக அங்கு சென்றுள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பிரேஸில் ஜனாதிபதி டலீமா, சீன ஜனாதிபதி ஜின் பிங், தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமா ஆகியோர் மாநாட்டின் முடிவில் உறுதிமொழி எடுத்துக் கொண்டபோது... (த)

## இந்தியப் பெண்ணொருவர் அமெ.வில் சடலமாக மீட்பு

நியூயோர்க், ஜூலை 17

அமெரிக்காவில் இந்திய வம்சாவளிப் பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 55 வயதான ராஜ்குமாரி மோத்வானி என்பவரே நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது வீட்டின் அருகே கடந்த சனிக்கிழமை இரவு பிறந்த நாள் விருந்து நிகழ்ச்சி நடந்தது. இதில் ராஜ்குமாரி மோத்வானி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

விருந்து நிகழ்ச்சி முடிந்தவுடன் அனைவரும் சென்று விட்டனர். அந்தப் பகுதியை சுத்தம் செய்வதற்காகப் பணியாளர்கள் வந்தனர். அப்போது அங்குள்ள நீச்சல் குளத்தில் ராஜ்குமாரி மோத்வானி இறந்த நிலையில் சடலமாகக் கிடந்தார்.

இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தைப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். விருந்து நடந்தபோது அவர் தவறி விழுந்து இறந்தாரா? அல்லது யாராவது கொலை செய்தார்களா? என்று பொலிஸார் விசாரித்து வருகிறார்கள். (த)

## ஆளில்லா தாக்குதல் விமானத்தை நடுவானிலேயே அழித்தது இஸ்ரேல்

ஜெருசலேம், ஜூலை 17

காஸா பகுதியில் இருந்து வந்த ஆளில்லா தாக்குதல் விமானத்தை நடுவானிலேயே இடைமறித்து அழித்ததாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இஸ்ரேல் இராணுவ அதிகாரி ஒருவர் கூறுகையில், "பலஸ்தீனத்தின் காஸாவில் இருந்து இஸ்ரேலின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள ஆஷ்டோட் நகரை குறிவைத்து ஆளில்லா விமானம் மூலம் தாக்குதல் நடத்த முயற்சி நடந்தது.

அந்த விமானத்தை இஸ்ரேல் இராணுவம் நடுவானில் சுட்டு வீழ்த்தியது" என்றார்.

காஸா மீது இஸ்ரேல் தரைப்படை மற்றும் விமானப்படை கடந்த ஒரு வாரமாக கடும் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், ஹமாஸ் தீவிரவாதிகள் ஏவுகணை மூலம் இஸ்ரேல் மீது தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் முதன்முதலாக ஆளில்லா விமானம் மூலம் இஸ்ரேல் மீது தாக்குதல் முயற்சி நடத்தப்பட்டுள்ளது. இத்தகைய விமானத் தாக்குதல் முயற்சிக்கு இது வரை ஹமாஸ் தீவிரவாதிகள் பொறுப்பேற்கவில்லை. (த)

# காய்கறிகள் விலை தமிழகத்தில் உச்சம்

## ஏழை மக்கள் உணவுக்குத் தவிப்பு

சென்னை, ஜூலை 17
தமிழ்நாட்டில் பருவமழை குறைவால் காய்கறிகளின் விளைச்சல் குறைந்துள்ளதால் அதன் விலை விண்ணைமுட்டும் அளவு உயர்ந்துள்ளது. சென்னையில் கடந்த சில நாள்களாகக் காய்கறிகளின் விலை அதிவேகத்தில் உயர்ந்து வருகிறது.



ஏழைகளின் அப்பிள் என்றழைக்கப்படும் தக்காளி கிலோ 75 ரூபாயில் இருந்து, கிலோ 210 ரூபாவுக்குச் சென்றுள்ளது. பீன்ஸ் விலை கிலோ 120 ரூபாவில் இருந்து ஏறி தற்போது 330 ரூபாவுக்குச் சென்றுள்ளது.

பாகற்காய் விலை உயர்ந்து கிலோ 210 ரூபாவில் நிற்கிறது. அவரைக்காய் விலை 60 ரூபாவில் இருந்து 200 ரூபாவுக்கு உயர்ந்துள்ளது. பீற்றூட் விலை 20 ரூபாவிலிருந்து உயர்ந்து 50 ரூபாயில் உள்ளது.

மேலும், கடந்த 2 மாதங்களாக நிலவிய வெயிலின் தாக்கத்தினாலும் தமிழ்நாட்டில் காய்கறி விளைச்சல் குறைந்து விட்டதாலும் வெளிமாநிலங்களில் இருந்துதான் அதிக காய்கறிகள் சென்னைக்கு வருவதாகவும், இதனால்தான் இந்த விலை ஏற்றம் எனவும் கோயம்பேடு காய்கறி வியாபாரிகள் கூறியுள்ளனர். (த)

## கல்லூரிகளில் ஜீன்ஸ், ரிசேட் அணிவதற்கு அதிரடித் தடை

புதுடில்லி, ஜூலை 17
அரசு மருத்துவக் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் ஜீன்ஸ், ரிசேட் போன்ற ஆடைகளை அணிந்துவரத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் முதலாம் திகதி மருத்துவம் முதலாம் ஆண்டு தொடங்கவுள்ள நிலையில், முதலாம் ஆண்டு மாணவ, மாணவிகள் என்ன மாதிரியான ஆடைகளை அணிய வேண்டும் என மருத்துவக் கல்வி இயக்குநரகம் தெரிவித்துள்ளது. மருத்துவக் கல்வி இயக்குநரக அதிகாரிகள் இதுபற்றி தெரிவிக்கையில்; அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவ, மாணவிகள் ஜீன்ஸ், ரிசேட் போன்ற ஆடைகளை அணியக் கூடாது என்றும், மாணவிகள் சேலை, சல்வார் கமீஸ், சுடிதார் போன்ற ஆடைகளை மட்டுமே அணிந்து வரவேண்டும்.

மேலும், தலைமுடியை விரித்து விடாமல் இறுக்கமாகக் கட்டிக்கொண்டு வகுப்புக்கு வரவேண்டும். (த)

## டில்லியில் ஆட்சியமைக்க கடும் முயற்சியில் பா.ஜ.க.

புதுடில்லி, ஜூலை 17
டில்லியில் ஆட்சி அமைப்பதற்கான முயற்சிகளில் பா.ஜ.க இறங்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆம் ஆத்மி கட்சி, தனது கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை பா.ஜ.க. விலைக்கு வாங்க முயற்சிப்பதாக ஒரு குற்றச்சாட்டைத் தெரிவித்தது. இதனிடையே டில்லியில் கட்சி அலுவலகத்தில் நேற்றுக் கூடிய பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஐக்கிய ஜனதா தளத்தின் ஒரே ஒரு சட்டமன்ற உறுப்பினரும் தனது ஆதரவை பா.ஜ.க.வுக்கு அளிக்கக் கூடும் என்று கூறப்படுகிறது. இதனால், டில்லியில் ஆட்சியமைக்கும் எண்ணத்தைப் பா.ஜ.க கொண்டிருக்கிறது என்றாலும். இதனை வெளிப்படுத்த பா.ஜ.க. தயக்கம் காட்டிவாயை இறுக மூடி வருவதாக டில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த டிசெம்பரில் நடைபெற்ற டில்லி சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. 31 இடங்களைக் கைப்பற்றியது. ஆட்சியமைக்க மேலும் 4 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தேவைப்பட்ட நிலையில், தற்போது அதன் உறுப்பினர் பலம் மேலும் 3 குறைந்துள்ளது. ஹர்ஷ்வர்த்தன், ரமேஷ் பிதுரி, பர்வேஷ் வர்மா ஆகிய மூவரும் மக்களவைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளதால், 70 உறுப்பினர் சட்டசபையில், இப்போது பா.ஜ.கவின் பலம் 28 ஆக உள்ளது. சிரோண்மணி அகாலிதள உறுப்பினர் ஒருவரின் ஆதரவு இருந்த போதும், டில்லி பா.ஜ.க. தலைவர் சதீஷ் உபாத்யாய, டில்லி சட்டமன்றத்துக்கு புதிதாக தேர்தல் நடத்த வேண்டும் என்ற கோஷத்தையே இப்போதும் முன்வைத்து வருகிறார். (த)

## கூடங்குளத்தில் 45 நாள்களில் வணிக ரீதியில் மின் உற்பத்தி

சென்னை, ஜூலை 17
கூடங்குளம் முதலாவது அணு உலையில் வணிக ரீதியிலான மின் உற்பத்தி 45 நாள்களில் தொடங்க உள்ளது என அணுமின் நிலைய வளாக இயக்குநர் ஆர்.எஸ். சுந்தர் தெரிவித்தார்.

கூடங்குளத்தில் மின் உற்பத்தி தொடங்க, அணுசக்தி ஒழுங்குமுறைச் சபை கடந்த ஆண்டு ஜூலை 11ஆம் திகதி அனுமதி அளித்தது.

ஒக்ரோபர் 22ஆம் திகதி அதிகாலை 2.45 மணிக்கு கூடங்குளத்தில் மின் உற்பத்தி தொடங்கப்பட்டுதொடர்ந்து பல்வேறு ஆய்வுகளுக்குப் பின் மின் உற்பத்தியின் அளவு அதிகரித்தது.

அணுமின் நிலைய வளாக இயக்குநர் ஆர்.எஸ். சுந்தர் கூறியதாவது:-

முதலாவது அணு உலையில் வணிக ரீதியிலான மின் உற்பத்தி இன்னும் 45 நாள்களில் தொடங்கும். இதற்கான ஆய்வுப் பணிகளுக்காக அணு உலையின் செயற்பாடு படிப்படியாக நிறுத்தப்படும். இன்னும் ஒரு வாரத்தில் அணு உலையில் மின் உற்பத்தி நிறுத்தப்படும்.

ஆய்வுப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகள் ஒரு மாதம் வரையில் நீடிக்கும் இதை தொடர்ந்து வணிக ரீதியிலான மின் உற்பத்தி தொடங்கும்.

வணிக ரீதியிலான மின் உற்பத்தி தொடங்கிய பின்னர் ஆயிரம் மெகாவாட்ஸ் மின்சாரத்தில் 560 மெகாவாட்ஸ் வரையில் தமிழகத்துக்கு விநியோகம் செய்யப்பட உள்ளது என்றார் அவர். (த)



இந்தியாவுக்கு மூன்று நாள் பயணமாக வந்துள்ள அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன் ஜெய்ப்பூரில் நலத்திட்ட மொன்றை ஆரம்பித்து வைக்கிறார். (த)

## மேலும் 200 இந்தியர்கள் ஈராக்கிலிருந்து திரும்பினர்

புதுடில்லி, ஜூலை 17
உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டுள்ள ஈராக்கில் இருந்து மேலும் 200 இந்தியர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை தாயகம் திரும்பினர். இதன் மூலம் தாயகம் திரும்பிய இந்தியர்களின் எண்ணிக்கை 2,500 ஐ கடந்துள்ளது.

இது குறித்து வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் கூறும்போது; ஈராக்கின் நஜப் நகரில் இருந்து ஈராக்கி எயார் வேஸ் சிறப்பு விமானம் மூலம் 200 இந்தியர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை டில்லி வந்துள்ளனர்.

இந்தியர்கள் தாயகம் திரும்புவற்காக இதுவரை 2,500 பயணச் சீட்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்தியத் தொழிலாளர்களுக்காக ஈராக் நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ள மேலும் 1000 பயணச் சீட்டுகளை இந்தியத் தூதரகம் பயன்படுத்திக் கொள்ளும் என்றார். (த)

## வேட்டி தடை விவகாரம்: ஜெயலலிதா எச்சரிக்கை

சென்னை, ஜூலை 17
வேட்டி உடுத்தி வந்த உயர் நீதிமன்ற நீதிபதிக்கு தமிழ்நாடு கிரிக்கெட் சங்க கிளப்பில் அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து, இது போன்ற விதிகளை நடைமுறைப்படுத்தும் தனியார் கிளப்புகள், வேட்டிக்கு தடை விதிக்கும் விதிமுறையை நீக்க நடப்புக் கூட்டத்தொடரில் சட்டத்திருத்தம் கொண்டு வரப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

தமிழ்நாடு கிரிக்கெட் சங்கக் கிளப்பில் நடந்த ஒரு நிகழ்ச்சிக்கு சென்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஹரி பரந்தாமன் மற்றும் இரு உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞர்கள் வேட்டி உடுத்திச் சென்றதால் , கிளப்புக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியது. இதற்கு ஏற்கனவே தி.மு.க் தலைவர் மு.கருணாநிதியும் பிற அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

இந்தச் சர்ச்சை குறித்து தமிழக சட்டப் பேரவையில் அறிக்கை வாசித்த தமிழக முதல்வர்ஜெயலலிதா,சென்னையில் ஒரு தனியார் கிளப்பில் வேட்டி அணிந்து சென்றதால் ஒரு நீதிபதிக்கும் , இரண்டு வழக்கறிஞர்களும் அனுமதி மறுக்கப்பட்ட சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்துள் ளார். பாரம்பரிய தமிழர் உடையான வேட்டி அணிவதற்கு தடை விதிக்க அந்த கிளப்பிற்கு அதிகாரம் இல்லை என்றும் முதல்வர் தெரிவித்துள்ளார். அத்துடன் இந்த தனியார் கிளப்பின் உள்விதிகளின் படி லுங்கி, பர்முடாஸ் போன்ற உடைகளுக்குத்தான் தடை விதிக்கப்பட்டுள்ளது.வேட்டிக்கு தடை விதிக்கப்படவில்லை , எனவே இந்த தடை விதிக்கப்பட்டது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்றும் முதல்வர் ஜெயலலிதா கண்டனம் தெரிவித்துள்ளார்.




இந்த விவகாரம் குறித்து விசாரிக்கும்படி பதிவுத்துறை இயக்குநருக்கு உத்தரவிட்டுள்ளதாகவும், இது குறித்து விளக்கம் அளிக்க அந்த கிளப்புக்கு கடிதம் அனுப்ப உத்தரவிட்டுள்ளதாகவும் முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

அத்துடன் இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடந்தால், இது போன்ற கிளப்புகளின் உரிமத்தை இரத்துச் செய்ய தமிழக அரசு தயங்காது என்றும் தமிழக முதல்வர் தெரிவித்துள்ளார். (த)

# வடக்கு மாகாண சபை சிறப்பாக இயங்குகிறது

## பிரதம நீதியரசர் கூறுகின்றார்



நாட்டில் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற கருத்தே தமது தேர்தல் அறிக்கையில் வெளிப் படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு, ஜூலை 17
வடக்கு மாகாண சபை சிறப்பாக இயங்குகின்றது என்று தெரிவித்துள்ளார் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ்.

வடக்கு மாகாண சபைக்கு கடந்த ஆண்டு நடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்ட தேர்தல் அறிக்கையை இரத்து செய்யுமாறு கோரி சிங்கள அமைப்புகள் தாக்கல் செய்த மனு விசாரணைக்குட்படுத்தியபோதே பிரதம நீதியரசர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபை நன்றாக செயற்பட்டுவரும் நிலையில் குறித்த மனுவை மேற்கொண்டு விசாரணை செய்வதால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு தேர்தலின்போது முன்வைத்திருந்த விஞ்ஞாபனத்தில் பிரிவினைவாதக் கருத்துகள் இடம் பெற்றுள்ளன என்று தெரிவித்தே குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக முன்னிலையான வழக்கறிஞர் சுமந்திரன், தமது தேர்தல் அறிக்கையில் பிரிவினைவாதம் நிராகரிக்கப்பட்டுள்ளது என்று வாதாடினார்.

நாட்டில் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற கருத்தே தமது தேர்தல் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்றும், அதனால் அரசியல்யாப்பு மீறப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

அதை ஏற்றுக்கொண்ட பிரதம நீதியரசர், தேர்தல் அறிக்கையில் பிரிவினைவாத கருத்துகள் உள்ளடக்கப்படவில்லை என உறுதிச் சான்றிதழ் ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்குமானால், வழக்கை முடித்துக்கொள்ள முடியும் என்று தெரிவித்தார். சுமந்திரன் அதற்கு இணக்கம் தெரிவித்தார். (ற-5)

## மாயமாக மறைந்த வெள்ளை நாகம்



கோப்புப்படம்

கொழும்பு, ஜூலை 17
தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையில் இருந்த இரண்டு அடி நீளமான வெள்ளை நாக பாம்பொன்று காணாமற் போயுள்ளது என்று கூறப்படுகின்றது.

அது தொடர்பில் தமக்கும் தகவல் கிடைத்துள்ளது என்று தெரிவித்துள்ள பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன, மிருகக்காட்சி சாலை நிர்வாகத்திடமிருந்து உத்தியோகபூர்வமாக முறைப்பாடு கிடைத்தால் அதுதொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவித்துள்ளார். (ற)

## அபிவிருத்தியை நோக்கி இலங்கை பயணிக்கிறது

### பிரதமர் ஜயரட்ன தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவம் மற்றும் தெளிவான நோக்கு காரணமாக இன்று இலங்கை ஆசியாவில் துரித அபிவிருத் தியை நோக்கிப் பயணிக்கும் ஒரு நாடாக மாறி வருகின்றது.

ஜனாதிபதி அவர்களின் நோக்கும் மக்களின் எதிர்பார்ப்புக்களும் இன்று ஒன்றாக இருக்கின்றது இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதமர் தி.மு.ஜயரட்ன.

ஆசியாவின் கல்வி சம்பந்தமான இரண்டாவது சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு கூறினார்.

"தூர நோக்கு மற்றும் அர்ப்பணிப்பு இல்லாத ஒரு அரச தலைவரால் நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்ல முடியாது.

30 வருட காலம் நடை பெற்ற போர் முடித்து இன்று நாம் துரித அபிவிருத்தியை நோக்கிச் சென்றுகொண்டிருக் கின்றோம். அது ஆசியாவின் அதிசயமாக இருக்கின்றது. பொருளாதாரம் பலப்படுத்தப்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சி வேகம் அதிகரித்துள்ளது. ஆசியாவின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இங்கு தொழிலின்மை வீதம் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. பண வீக்க வேகம் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. இந்த நாட்டில் வாழும் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் போன்ற மூவினத்தவரினதும் ஒற்றுமையான உழைப்பே இந்த பலமான அபிவிருத்திக்குக் காரணமாக இருக்கின்றது."- என்று அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள் மீது சோதனை

கொழும்பு, ஜூலை 17
வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள் தொடர்பில் விசேட சோதனைகள் நடத்தப்படவுள்ளன என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

அண்மையில் கடுகண்ணாவ நகரத்தில் அமைந்துள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஒன்று தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. அது தொடர்பிலும் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் பணியகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண,

"கடனட்டைப் பாவனை, வேலைவாய்ப்பு நிறுவனங்கள் தொடர்பில் மக்கள் அதிக கவனத்துடன் செயற்பட வேண்டும். அண்மைக்காலமாக நாட்டில் கடனட்டை மோசடிகள் அதிகரித்துள்ளன. மக்கள் அவை தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)



அம்பாந்தோட்டை மஹாம்புர துறைமுகத்துக்கு எரிபொருள் நிரப்புவதற்காக வந்திருந்த ஏழு கப்பல்களில் மிகவும் பெரிய கப்பலான யூரிடிஸ் என்ற 300 மீற்றர் நீளம் கொண்ட கப்பலுக்கு நேற்றுமுன்தினம் 1,400 மெற்றிக் தொன் ஐ.எவ் 380 ரக எரிபொருள் நிரப்பப்பட்டது.

## போர் முடிவுற்றபோதும் அழுத்தம் தொடர்கிறது

### இராணுவத் தளபதி கவலை



தயா ரத்நாயக்க

கொழும்பு, ஜூலை 17
மனிதாபிமான நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டுள்ள போதிலும் நாட்டுக்கு எதிரான அழுத்தங்கள் இன்னும் குறையவில்லை என்று கவலை வெளியிட்டுள்ளார் இராணுவ தளபதி பிரிகேடியர் லெப்டினன் ஜெனரல் தயா ரத்நாயக்க.

சாதாரண முறையில் அன்றி மனிதாபிமான முறையில் போரை நிறைவு செய்தோம். பௌத்த தர்மத்தின் அடிப்படையில் நாங்கள் செயற்பட்டோம்.

எனினும் இலங்கைக்கு எதிரான வெளிநாட்டு அழுத்தங்கள் இன்றும் தொடர்கின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

தெல்தெனிய பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும், போர்க்குற்றங்கள் தொடர்பில் ஐ.நா. விசாரணை குழு தனது பணியை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இராணுவத் தளபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

## சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருக்கு அச்சுறுத்தல்

கொழும்பு, ஜூலை 17
இனந்தெரியாத நபர்கள் சிலர் தன்னைப் பின்தொடர்கின்றனர் என்று சட்டத்தரணிகள் சங்க தலைவர் உபுல் ஜயசூரிய கருவாத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பின்தொடர்பவர்கள் தன்மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதற்காகவே பின்தொடர்கின்றனர் என்று அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

அதுகுறித்துப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ற)

## தங்கத்தை விழுங்கி பறக்க முயன்றவர் கைது

கொழும்பு, ஜூலை 17
ஒரு கிலோ கிராமுக்கு அதிகமான தங்கத்தை உருண்டைகளாக்கி அவற்றை விழுங்கிய நிலையில் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக இந்தியாவின் பெங்களூருக்கு பயணிக்க முயன்ற மருதானையைச் சேர்ந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சுங்க திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவரிடமிருந்து மீட்கப்பட்ட சுமார் 72 லட்சம் ரூபாய் பெறுமதியான தங்க உருண்டைகள் அரசுடைமையாக்கப் பட்டுள்ளன. அத்துடன் அந்த பெண்ணுக்கு ஒரு லட்சம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது என்றும் சுங்கப்பிரிவினர் தெரிவித்தனர். (ற)

## ஊவா மாகாணத் தேர்தலுக்கு வேட்பாளர் தெரிவு ஆரம்பம்

### மைத்திரிபால சிறிசேன கூறுகின்றார்



கொழும்பு, ஜூலை 17
ஊவா மாகாண சபை தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் தற்சமயம் கோரப் படுகின்றன என்று அந்தக் கட்சியின் செயலாளரும் சுகாதார அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித் துள்ளார்.

ஊவா மாகாண சபையின் முன்னாள் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அமைச்சர்கள் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் அனைவருமே இதற்காக விண்ணப்பிக்க வேண்டும் என்றும் அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். புது முகங்களை உள்ளடக்கிய தொழில் ரீதியான சிறந்த குழு ஒன்றை இம்முறை தேர்தலில் இணைத்துக்கொள்ள இருக்கின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# மின்மினிப் பூச்சிகள் ஒளிர்வது எப்படி?



மின்மினிப் பூச்சிகளைப் பற்றி நிறையவே கேள்விப்பட்டிருப்போம். அதிகமானோர் பார்த்திருக்கவும் வாய்ப்புகள் உண்டு.
அது எப்படி இந்தப் பூச்சி மட்டும் பிரகாசமாக ஒளிர்கிறது என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுவது உண்டு.
மின்மினிப் பூச்சிகளை ஆங்கிலத்தில் Firefly என்று அழைக்கிறார்கள். இது Coleopteran என்ற குடும்பத்தைச் சேர்ந்தது.
இப்பூச்சி ஒளிர்வதற்கு காரணம் லூசிஃபெரின் (Luciferin) என்ற இரசாயன கூட்டுப் பொருள் ஆகும்.
இது பூச்சியின் ஒளியுமிழ் உறுப்பில் (Light emitting organ) நிறைந்துள்ளது.
இந்த லூசிஃபெரின், லூசிஃபெரெஸ் என்ற என்ஸைமில் உள்ள ஒட்சிசன் மற்றும் செல்களில் உள்ள ATP மற்றும் மக்னீசியம் ஆகியவற்றுடன் சேரும் போது ஒளி உண்டாகிறது.
இவற்றில் ஏதேனும் ஒன்று இல்லாவிடினும் ஒளியுண்டாகாது. மின்மினிப் பூச்சி விட்டு விட்டு ஒளிர்வதற்குக் காரணம், அதன் ஒளியுமிழ் உறுப்புக்குச் (Light emitting organ) செல்லும் நரம்புத் தூண்டல்கள் (Nerve Impulses) விட்டு விட்டுச் செல்வதேயாகும்.



**இந்தப் பூச்சி ஒளிர்வதற்கு காரணம் லூசிஃபெரின் (Luciferin) என்ற இரசாயன கூட்டுப் பொருள் ஆகும்.**

# மனிதன் ஏன் துன்பத்தில் மூழ்கி இருக்கிறான்?

மனிதன் துன்பத்தில் மூழ்கி இருப்பதற்குக் காரணம் அவ னுக்கு இறைவனால் வழங்கப்பட்ட பரிசாகிய உடம்பு, புலன்கள், சிந்தனை, புத்தி ஆகியவை மாசடையச் செய்யப்பட்டு அவ னால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருப்பதனாலாகும்.






# காலத்தால் மறக்கப்பட்ட விஞ்ஞானி

எம்மில் யாருக்காவது நிக்கோலா தெஸ்லாவைப் பற்றித் தெரியுமா? காலத்தால் மறக்கப்பட்ட இந்த அறிவியலாளர் 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில் மின்னியல், காந்தவியல் ஆகிய துறைகளில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியவர்.
தெஸ்லாவின் மின் வழங்கல் முறைமைகள், மாறுதிசை மின்னோட்ட மோட்டார்கள் மற்றும் 1894 இல் இவரது கம்பியில்லாத் தொடர்பு செயல் முறை விளக்கங்கள் ஆகியவை இரண்டாம் தொழில்புரட்சி ஏற்படக் காரணமாகின.
இவருடைய பல கண்டுப்பிடிப்புகள் தற்கால மின் பொறியியலுக்கு உறுதுணையாக அமைந்தன. தற்போதைய அறிஞர்கள் இவரை இயற்பியலின் தந்தை என்றும், 20 ஆம் நூற்றாண்டைக் கண்டு பிடித்தவர் என்றும் தற்கால மின்னியலின் காப்பாளர் என்றும் சிறப்பித்து வருகின்றனர்.
அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சியைக் குறித்து இவருடைய சில நம்பத்தகாத கூற்றுகள் மக்களிடையே இவர் பைத்திய அறிவியலாளர் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியதுண்டு. இது நாளடைவில் அவருடைய புகழை மங்கவும் வைத்தது.

# மூக்கு இன்றி பிறந்த அபூர்வ குழந்தை





பிரிட்டனைச்சேர்ந்த நாதன் கிரன்னி என்ற தம்பதியினருக்கு பிறந்த பெண் குழந்தைக்கு பிறக்கும் போதே மூக்கு இல்லை. குழந்தையின் பெயர் டீசா. இவளுக்குத் தற்போது 17 மாதம் நடைபெறுகிறது.
கன்ஜெண்டல் அர்கினிய. (congenital arhini). என்ற குறைபாட்டுடன் மூக்கு இல்லாமல் பிறந்த டீசா , தன்னுடைய வாயின் மூலமே மூச்சுவிட்டு உயிர் வாழ்ந்து வருகிறார்.
இதுமாதிரியான குழந்தைகள் உலகில் இதுவரை 40 குழந்தைகள்தான் பிறந்துள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.
வாசம் என்பதையே என்ன வென்று அறியாத இந்தக் குழந்தைக்கு அடிக்கடி சளி மற்றும் இருமல் தொந் தரவு இருப்பதாக இந்தக் குழந்தையின் தாயார் கிரன்னி கூறுகிறார். மூக்கு இல்லாமல் இருந்தாலும், தன்னுடைய குழந்தை எப்போது புன்னகையுடன் இருப்பாள் என்றும் அவளது அந்தப் புன்னகை விலை மதிப்பு இல்லாதது என்றும் கிரன்னி தன் மகள் குறித்து பெருமையாக கூறுகிறார்.
இந்தக் குழந்தையைப் பரிசோதனைசெய்த பிரிட்டன் மருத்துவர்கள் செயற்கை மூக்கு பொருத்த ஆலோசனை செய்து வருகின்றனர்.
இந்த வருடத்தில் இந் தக் குழந்தைக்கு செயற்கை மூக்கு பொருத்தப்படும் என் றும், விரைவில் மற்றக் குழந்தை களை போலதனது மகளும் வாசனை யை நுகர்வாள் தாய் கிரன்னி கூறி உள்ளார்.

இலாபம் தருகின்ற வியாபார உதவியாளர்

A3 பிரதியாக்கம்
போட்டோ கொப்பி
COLOUR ஸ்கானிங்
இருபக்கங்களும் அச்சிடுதல்(Double Side Printing / Copying )பிரதியாக்கம்
உத்தரவாத சான்றுகளுடன்




RICOH
MP 2001L

கெஸ்டெட்னர் ஒ்ப் சிலோன் பிஎல்சி.
248 வோக்சோல் வீதி, கொழும்பு 02 | 0114725900

விற்பனை விசாரணை துரித அழைப்பு: கொழும்பு 0772961662

# இளைஞர்களின் வெற்றிக்கு அவசியம் நேற்றைய நினைவுகள்

விமர்சனம்



சமூகத்தில் தற்போது இளைய சந்ததியினரை எடுத்து நோக்குவோமானால், மாணவர்கள் முதல் வேலை பார்ப்பவர்கள்வரை ஏதோ ஒரு வகையில் மற்றவர்களை விட தாம் முதன்மை நிலையில் வாழ வேண்டும்.

சமூகத்தில் போற்றப்பட வேண்டும் என்ற போட்டி மனப்பாங்குடன் வாழ்வது உண்மையே.

உதாரணமாக மாணவன் ஒருவன் தான் சகல மாணவர்களையும் விட உயர்புள்ளி பெற்று பரீட்சையில் சித்தியடைய வேண்டுமென்ற சிந்தனையுடன் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையத் தவறிய சந்தர்ப்பத்தில் பெற்றோர், ஆசிரியர்கள் கண்டிப்பு, மற்றைய மாணவர்கள் கிண்டல், கேலிகளுக்கு ஆளாகும்போது அவனது மனவேதனை, கவலைகள் அதிகரிக்கின்றன.

ஆனால் அதே மனதில் வெற்றி வீராப்பு கொதித்தெழுகின்றபோது அவன் தான் தவறியதற்கான காரணங்களை ஆராய்ந்து அடுத்த பரீட்சைக்குத் தன்னை தயார்ப்படுத்திக் கொள்கின்றான். நேற்றைய தோல்வி நினைவுகளே வெற்றியின் முதற்படியாகும் என்பதில் ஐயமில்லை.

ஆகவே இளைஞர்களின் வெற்றிக்கு நேற்றைய நினைவுகளே அவசியமாகும்.

*ஏ. இந்திரா*
*ஸ்ரீ பரமானந்தா சிறுவர், முதியோர் இல்லம்*
*வதிரி, கரவெட்டி*

நேற்றைய தோல்வி நினைவுகளே வெற்றியின் முதற்படியாகும் என்பதில் ஐயமில்லை. ஆகவே இளைஞர்களின் வெற்றிக்கு நேற்றைய நினைவுகளே அவசியமாகும்.


நீங்களும் எழுதலாம்....

இளைஞர்களின் வெற்றிக்கு அவசியம்

**நேற்றைய நினைவுகளா? நாளைய கனவுகளா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.



## இளைஞனே உனக்காக

இளைஞனே !
மின்னலை விட
வேகமாய் பாயும் திறன் உனக்கு
இன்னலைத் துரத்திக் கொள்ள-
நீ
போடும் கணக்கு எங்கே?
துருப்பிடித்த உன்
எண்ணமெனும்..
அரிவாளைத் தீட்டு.
உலகுக்கு எடுத்துக்காட்டு..-
உலகு
உறங்கிக் கொண்டிருக்கிறது-
உன்
இதயமதை அறிவுக் கரத்தால்
தட்டி எழுப்பு.
ஆயிரம் சிந்தனைகள் அதில்
உதயமாகட்டும்...!

*த. நிதர்ஷனா.*
*யாழ். இந்து மகளிர் கல்லூரி*


## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் இளவல்கள் வட்டம் என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-........................................
முகவரி :-........................................

............................ ............................
திகதி கையொப்பம்

**இளவல்கள் வட்டம்,**
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



சிலர் இறையன்புக்கு ஒப்பானவர்களாக தமது பசியைப் போக்க இருந்த உணவை வீடு தேடி வரும் விருந்தாளிக்குக் கொடுத்து ஆத்ம திருப்தி கொள்கின்றனர், இவர்களிடத்தில் இறைவனைக் காணலாம்.



## மனித ஏக்கம்?

எந்தன் வாழ்வில் ஒளி பிறக்குமா
எமக்கு இனிமேல் வழி திறக்குமா
கனவோடு நாமும் தினம் வாழ்கிறோம்
அணுவணுவாகச் செத்து விடுகிறோம்
எதிர்காலம் எம் வாழ்வில் ஒளியூட்டுமா
இல்லை வருங்காலம்
உயிரோடு எரியூட்டுமா
கற்பனைக் கடலிலே
நாம் மூழ்கி நிற்கிறோம்
கண் பார்க்கும் வழியிலே
பயணம் தொடர்கிறோம்.....
எத்தனை துன்பங்கள் எமைச் சூழுதே
எம் எதிர்காலம் என்றதோர் மலர் வாடுதே
இத்தனை காலமும் நாம் வாழ்ந்ததே
அதன் அர்த்தமும்
இல்லாமல் போய் விட்டதே....
கண்ணீரும் கவலையும் எமக்காகவே
இந்தக் கடவுளின் படைப்பும் இதற்காகவே
இனிமேலும் நாம்
இங்கு உயிர் வாழ்வது இந்த
உலகத்தில் இதைப் போல போராடவே...

## பசியின் கொடுமை

*(கடந்தவாரத் தொடர்ச்சி...)*

ஒரு மனிதன் எதைக் கொடுத்தாலும் இன்னும் வேண்டும் என்றுதான் சொல்வான். ஆனால் பசித்த வயிற்றுக்கு நாம் உணவழித்தால் போதும், காணும் என்ற ஆத்ம திருப்தியான பதில் வரும். ஏனெனில் உணவில் மட்டும்தான் ஒரு மனிதன் போதும் என்று சொல்லும் நிலை ஏற்படுகின்றது.

சிலருக்கு வயிறு அடங்கினாலும் மனம் அடங்காது என்பார்கள். அதுவும் உண்மையே. ஏனெனில் தமக்கு மட்டுமே வேண்டும்என்ற சுயநலநினைப்புசிலபேரில்மனதை ஆக்கிரமித்துள்ளதே இதன் காரணம்.

ஏழைகளின் பசியை உணரவே விரதங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இன்று விரதம் என்பது அப்படியா நடக்கின்றது. வெறும் நூல் கட்டுவதற்காகவும் ஆலயங்களுக்கு ஆடம்பரமாகச் செல்வதற்காகவுமே சிலர் மேற்கொள்கின்றனர்.

சிலர் இறையன்புக்கு ஒப்பானவர்களாக தமது பசியைப் போக்க இருந்த உணவை வீடு தேடி வரும் விருந்தாளிக்குக் கொடுத்து ஆத்ம திருப்தி கொள்கின்றனர். இவர்களிடத்தில் இறைவனைக் காணலாம்.

ஒரு மனிதன் பண பலத்தோடும், உடல் நலத்தோடும் இருக்கும் மட்டும் எத்தனை வெறி பிடித்து அலைகிறான்.

சாதி வெறி, பண வெறி, நான் என்ற அகங்கார வெறி அனைத்தும் உரு ஏற்றப்பட்ட நிலையில் ஆடும்மனிதன் தெருவில் போகின்ற போது விபத்துக்குள்ளாகி உயிருக்கு ஊசலாடும் நிலையில் உதவப்போவது யாராக இருந்தால் என்ன அதனை ஏற்றுத்தான் ஆக வேண்டும். ஏனெனில் உடலில் வலுக் குறையும்போது அனைத்தும் அடங்கி விடுகிறது. அந்த நிலையில் சாதியில்லை, பணம் இல்லை, மனித நேயம் ஒன்றே தேவை. ஏனெனில் உயிர் காக்கப்பட வேண்டும்.

எது எவ்வாறாக இருப்பினும் ஏழைகளின் பசியை உணர்வோம். இருப்பதை மிஞ்சிப் போவதைப் பசியில் வாடும் எமது உறவுகளுக்கு கொடுப்போம். நாம் செய்கின்ற அனைத்தும் இறைவன் பதியப்படும்.

# வவுனியாவில் ஆடிப்பிறப்பு கொண்டாட்ட நிகழ்வுகள்

வவுனியா, ஜூலை 17

வவுனியா பிரதேச செயலகம் ஒழுங்கு செய்துள்ள ஆடிப்பிறப்பு கொண்டாட்டம் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள மேற்படி கொண்டாட்டம் வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராஜா தலைமையில் நடைபெறும். வவுனியா மாவட்ட அரச அதிபர் எம்.கே.பந்துல ஹரிச்சந்திர இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்தலைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றல், பிரதேச கீதம் இசைத்தல், வரவேற்பு நடனம் ஆகியன இடம்பெறும்.

தொடர்ந்து வவுனியா உதவிப் பிரதேச செயலர் திருமதி.சாரதாஞ்சலி கர்ணன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

நிகழ்வின் சிறப்பு நிகழ்வுகளாக ஆடிப்பிறப்புக் கொண்டாட்டம் பற்றி கலாநிதி தமிழ்மணி அகளங்கனின் உரை, கவிஞர்களான த.ஐங்கரன், மாணிக்கம் ஜெகன் ஆகியோர் வழங்கும் கவிதை, வவுனியா விபுலானந்தாக் கல்லூரி மாணவர்கள் வழங்கும் குழுப்பாடல், வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய மாணவி மா.டிலோஜினியின் பேச்சு என்பன இடம்பெறும்.

ஆடிப்பிறப்பை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட மற்றும் தேசத்தின் மகுடம் கண்காட்சியை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் இந்த விழாவில் வைத்து வழங்கப்படும்.

தொடர்ந்து வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திரு.இ.நித்தியானந்தன் நன்றியுரை நிகழ்த்துவார். (க-402)

# இந்துநாகரிகம் கற்பிக்க ஆசிரியர் இல்லாத நிலை

வவுனியா, ஜூலை 17

வவுனியா நகரில் அமைந்துள்ள இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் கடந்த 3 மாதங்களுக்கும் மேலாக க.பொ.த. உயர்தர வகுப்பில் இந்து நாகரிக பாடத்தைக் கற்பிக்க ஆசிரியர் இல்லாத தால் மாணவர்கள் பாதிப்படைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது .

இந்துநாகரிக பாடத்தைக் கற்பித்த ஆசிரியர் இட மாற்றம் பெற்றுச் சென்று பல மாதங்களாகியும் அந்த வெற்றிடத்துக்கு வேறு எவரும் நியமிக்கப்படவில்லை.

இதனால் இந்த வருடம் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் முழுமையான பாடத்திட்டம் நிறைவு செய்யப்படாமலேயே பரீட்சையை எதிர்நோக்கியுள்ளனர்.

இதேவேளை அடுத்த வருடம் பரீட்சையில் தோற்றும் மாணவர்களை இந்து நாகரிகத்துக்கு பதிலாக வேறு பாடத்தைத் தெரிவு செய்யுமாறு பாடசாலை நிர்வாகம் வலியுறுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உயர்தர கலைப்பிரிவில் புதிதாக இணைந்த மாணவர்களையும் இந்து நாகரிக பாடத்தைத் தெரிவு செய்து கற்க முடியாது எனப் பாடசாலை நிர்வாகம் வலியுறுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை-இந்தப் பாடசாலையில் கலை பிரிவில் இந்து நாக ரிகத்தை ஒரு பாடமாகக் கற்ற மாணவர்களே அதிகளவில் பல்கலைக்கழகஅனுமதி பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (க-402)



சமூக சேவைகள் கரைச்சிப் பிரதேச செயலகத்தில் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான நடமாடும் சேவைகள் நேற்று இடம்பெற்றபோது ஏராளமான பொதுமக்கள் அதில் கலந்து கொண்டு பயன்பெற்றனர். (க)

# மருத்துவமனைக்கு நீண்ட தூரம் அலைந்து திரியும் கிராம மக்கள்

## மல்லாவி மருத்துவமனையில் வசதிகள் இல்லாததால்

கிளிநொச்சி, ஜூலை 17

**துணுக்காயிலுள்ள ஐயன்கன்குளம் மருத்துவமனையில் இரண்டு மாதங்களுக்கும் மேலாக மருத்துவர் இல்லாததால் மருத்துவமனையின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.**

மல்லாவி ஆதார மருத்துவமனையில் நோயாளர்களைப் பரிசோதித்து அறிக்கை வழங்குவதற்கான வசதிகள் இன்னமும் ஏற்படுத்தப்படாமையால் துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு ஆகிய இரண்டு பிரதேச செயலர் பிரிவுகளையும் சேர்ந்த மக்கள் நீண்ட தூரங்களிலுள்ள மருத்துவமனைகளை நாடிச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருதிப் பரிசோதனைகளுக்கு கூட நீண்ட தூரங்களிலுள்ள கிளிநொச்சி மற்றும் வவுனியா பொது மருத்துவமனைக்குத் தாம் செல்ல வேண்டியுள்ளதாக மக்கள் மேலும் தெரிவித்தனர்.

துணுக்காய் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மக்கள் இந்தக் குறைபாடுகள் தொடர்பாகத் தெரிவித்தனர்.

மல்லாவி மருத்துவமனை துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு ஆகிய இரு பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள மக்களுக்கும் உயிர்நாடியாக விளங்குகின்றது.

இருப்பினும் இந்த மருத்துவமனையில் அடிப்படை வசதிகள் குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றது.

குருதிப் பரிசோதனை களுக்குக் கூட மக்கள் பொது இடங்களுக்கு அலைந்து திரிவதைக் காணமுடிகின்றது.

மல்லாவி மருத்துவமனை ஆதார மருத்துவமனையாக அண்மையில் தரமுயர்த்தப்பட்ட போதிலும் ஆதார மருத்துவமனைக்குரிய வளங்கள் மருத்துவமனையில் காணப்படவில்லை.

மருத்துவமனையினை வளங்களைப் பெருக்கி மக்களுக்கான மருத்துவப் பணிகளை முழு அளவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை- துணுக்காயிலுள்ள ஐயன்கன்குளம் மருத்துவமனையில் இரண்டு மாதங்களுக்கும் மேலாக மருத்துவர் இல்லாததால் மருத்துவமனையின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

நிரந்தர மருத்துவர் நியமிக்கும் வரை ஐயன்கன்குளத்தில் நடமாடும் மருத்துவ சேவையை நடத்துவதன் மூலமாக பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம் மூன்று கிராமங்களையும் சேர்ந்த மக்கள் நன்மையடைவார்கள் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (க-18)

# வெளியாரின் சட்டவிரோத செயல்களை உடனே நிறுத்துக

## கரைதுறைப்பற்று கூட்டத்தில் உள்ளூர் மீனவர்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 17

மாத்தளன், நாயாறு, கொக்கிளாய் ஆகிய பகுதிகளில் சட்டவிரோத மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்களை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு கரைதுரைப்பற்று பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத் தில் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.



*கோரிக்கைகளை விடுக்கும் மக்கள் பிரதிநிதிகள்*

கரைதுறைப்பற்று பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் மு.ப.10 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புத் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் தலைமையில் ஆரம்பமானது.

இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலர் தி.திரேஸ்குமார், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், ஜயத்திலக்க மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், ஜனோர்பர் ஆகியோருடன் திணைக்கள அதிகாரிகள் கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அமைப்புக்களின் தலைவர்கள், செயலாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் மாத்தளன், நாயாறு கொக்கிளாய் போன்ற பகுதிகளில் சட்ட விரோத கடற்றொழிலில் ஈடுபடும் பிற மாவட்ட மீனவர்களால் உள்ளூர் கடற்றொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைகள் பாதிப்படைவதால் இதனை உடன் தடுத்து நிறுத்துமாறு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அ.மரியராசா வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் மாவட்ட மீன்பிடி நீரியல் திணைக்கள அதிகாரிகளை இது விடயம் குறித்து பூரண அறிக்கை சமர்ப்பிக்குமாறும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சருடன் பேசி இதற்குத் தகுந்த தீர்வை முன்வைப்பதாகவும் கூறினார்.

சமூக மட்ட அமைப்புக்களைச் சேர்ந்த மயூரன், ரஹீம் ஆகியோர் கருத்துத் தெரிவிக்கையில்;

ஆண்டான்குளம், தண்ணிமுறிப்பு, கேப்பாபிலவு போன்ற பகுதிகளில் பல ஏக்கர் வயல் நிலங்கள் இன்னமும் இராணுவத்தினால் செய்வதற்கு அனுமதிக்கப்படவில்லை எனவும் இதற்கு பல காரணங்கள் கூறப்படுவதாகவும் தெரிவித்தனர்.

அந்தப் பகுதிகளில் கண்ணிவெடிகள் காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது. ஆனால் அப்பிரதேசங்களுக்கு அப்பால் பெரும்பான்மையினத்தவர் சுதந்திரமாக வசிப்பதாகவும் அவர்களுக்கு கண்ணிவெடி ஆபத்துக்கள் இல்லையா எனவும் கேள்வி எழுப்பினர்.

இதற்கு அங்கு பிரசன்னமாகவிருந்த இராணுவ பிரதிநிதியிடம் இந்தக் காணிகளை விடுவிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் பணிப்புரை வழங்கினார். (க-102)

## மண்டைதீவு மருத்துவமனை திறப்பு விழா நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 17
மண்டைதீவு பிரதேச மருத்துவமனை இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார்.
விசேட அதிதிகளாக வட மாகாண சபையின் சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், சி.சிறிதரன் ஆகியோரும்- கௌரவ அதிதிகளாக வட மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, வடமாகாண சபையின் உறுப்பினர்களான பா.கஜதீபன், இ.ஆனல்ட், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், வேலணைப் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா, பிரதேச செயலர் திருமதி ச.மஞ்சுளாதேவி ஆகியோரும் கலந்துகொள்வார்கள். (க)

## போதையில் கலாட்டா; மூவரையும் எச்சரித்து ஆட் பிணையில்

தென்மராட்சி, ஜூலை 17
மது போதையில் குழப்பம் விளைவித்ததுடன் அந்தப் பகுதி வீடொன்றின் மீது கல்லெறிந்து சேதம் ஏற்படுத்திய மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். நாவற்குழி 300 வீட்டுத் திட்டப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
சம்பவத்துடன் தொடர்புடைய மூவரையும் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது மூவரையும் எச்சரித்து நீதிவான் தலா 15 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட் பிணையில் செல்ல அனுமதித்தார். (ஓ-9)

## அன்னதானம்

கோட்டை முனீஸ்வரர் ஆலயத்தின் தேர்த் திருவிழா உற்சவ தினமான எதிர்வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். மாநகர சபை நீர்வேலைப் பகுதி கலியுகவரதன் இந்து மன்றத்தினால் அன்னதானம் வழங்கப்படுமென அறிவிக்கப் பட்டுள்ளது. (க)

# யாழ். நகர்ப் பகுதிக் கடைகளில் ஆடிப்பிறப்பு வியாபாரம் அமோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 17
கடைகளில் நேற்றையதினத்திலிருந்து ஆடிப் பிறப்பை முன்னிட்டு பனங்கட்டி, அரிசி மா என்பவற்றின் விற்பனை சூடு பிடித்துள்ளது.
ஆடிப் பிறப்பை முன்னிட்டு யாழ். நகரக் கடைகளில் பனங்கட்டி, அரிசி மா என்பவற்றின் விற்பனை அமோகமாக நடைபெற்றது.
இது தொடர்பாக வியாபாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
ஆடிப் பிறப்பன்று மக்கள் தமது இல் லங்களில் கூழ் காய்ச்சும் வழக்கம் உள்ளது. அதற்காக பனங்கட்டி, அரிசி மாஎன்பவற்றை மக்கள் வாங்கிச் செல்கின்றனர்.
கடந்த வருடத்தை விட இந்த வருடம் சற்றுக் கூடுதலாக வியாபாரம் நடைபெறுகின்றது எனத் தெரிவிக்கப்பட் டது. (வ)



ஆடிக் கூழ் காய்ச்சுவதற்காகப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் பெண்.



பொதுநலவாய உள்ளூராட்சி மன்றங்களின் இணையத்தின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி தேசிய கொள்கை தொடர்பான வடக்கு மாகாண கலந்துரையாடல் ரில்கோ விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது. இதன்போது திட்ட முகாமையாளர் இ.சண்முகராசா வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்கினேஸ்வரனுக்கு நினைவுப் பரிசில் வழங்கினார். (வ-21)

# நல்லாட்சித் தத்துவ அடிப்படையில் பிரதேச சபைகள் சேவையாற்றுக

### வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17
நாட்டில் அண்மைக் காலத்தில் குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டதாக அதிகளவில் பிரதேச சபை உறுப்பினர்களும், தவிசாளர்களும், மாகாணசபை உறுப்பினர்களுமே கைது செய்யப்பட்டு வருகின்றனர். இந்த நிலைமை மாற்றப்பட்டு, பிரதேச சபைகள் மக்களுக்கு நல்லாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் பணியாற்ற வேண்டும் என்று வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ்.திருவாகரன் தெரிவித்தார்.
பொதுநலவாய உள்ளூராட்சி மன்றங்களின் இணையத்தின் ஏற்பாட்டில் உள்ளூ ராட்சி குறித்த தேசியக் கொள்கை தொடர்பான மாகாணக் கலந்துரையாடல் ரில்கோ விடுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறியதாவது:-
"உள்ளூராட்சி மன்றங்கள் நல்லாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் தமது சேவை களை வழங்க வேண்டும். நல்லாட்சித் தத்துவத்தில் மிக முக்கியமான கூறுகளான, சட்டத்தின் ஆட்சி நடைபெற வேண்டும். ஒருவரின் சுய விருப்பு - வெறுப்புக்களுக்கு இடங்கொடுக்கலாகாது. ஆனால் சட்டத்தை தமக்கு ஏற்றவாறு வளைத்து மாற்றியமைப்பது இப்போது ஒரு பண்பாக மாறி வருகின்றது- என்றார். (வ-5)

# உள்ளூராட்சிமன்ற முறைமை நீக்கப்பட வேண்டும்; 98 சத வீதத்தினர் கருத்துக் கணிப்பில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17
குற்றங்களும் - ஊழல்களும் நிறைந்தவையாக உள்ளூராட்சி மன்றங்கள் இருக்கின்றன என்றும், இதனால் உள்ளூராட்சிமன்ற முறைமையை நாட்டிலிருந்து நீக்க வேண்டும் என்று 98 சதவீதத்தினர், கருத்துக் கணிப்பில் தெரிவித்துள்ளனர்.
மக்களுக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இடையிலான இடைவெளி அதிகரிப்பதே இதற்குக் காரணம் என்று பொதுநலவாய உள்ளூராட்சிமன்றங்களின் இணையத்தின் இலங்கை செயற்றிட்டத்தின் முகாமையாளர் இ.சண்மு கராஜா தெரிவித்தார்.
பொதுநலவாய உள்ளூராட்சி மன்றங்களின் இணையத்தின் ஏற்பாட்டில் உள் ளூராட்சி தொடர்பான தேசியக் கொள்கை குறித்த மாகாணக் கலந்துரையாடல் ரில்கோ விடுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.
இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தமதுரையில் மேலும் கூறுகையில்,
இணையத்தளம் ஒன்று அண்மையில் கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்தியிருந்தது. உள்ளூராட்சி மன்றங்கள் குற்றங்களும் - ஊழல்களும் நிறைந்தவையாக உள்ளன. எனவே இலங்கையிலிருந்து உள்ளூராட்சி மன்ற முறைமையை நீக்க வேண்டும். இது தொடர்பில் மக்கள் கருத்தறிந்த போது 98 சதவீதமானவர்கள் அதற்கு ஆதரவளித்துள்ளனர்.
மக்களிடமிருந்து பிரதேச சபைகள் தூர விலகிச் செல்வதும், பிரதேச சபைகளிடமிருந்து மக்கள் தூர விலகிச் செல்வதுமே இவற்றுக்கான பிரதான காரணம். ஆனால் இந்த நிலை வடக்கில் காணப் படாது என்று நம்புகின்றேன். இங்குள்ள தவிசாளர்கள் தன்னலமற்று மக்களுக்கு சேவையாற்றுகின்றார்கள்.
உள்ளூராட்சி மன்றங்களில் 4 நிலையியற் குழுக்களை அமைக்க முடியும். அந்த நிலையியற் குழுக்களில் மக்கள் பிரதிநிதிகளைத் தாண்டி, மக்களையும் இணைத்துக் கொள்ள முடியும். ஆனால்பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்கள் மக்களை அவற்றில் இணைத்துக் கொள்வதில்லை" - என்றார். (வ-5)

# சாவகச்சேரி வாள் வெட்டில் உயிரிழந்தவருக்கு நீதி கோரிக் கவனவீர்ப்பு

தென்மராட்சி, ஜூலை 17
சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கடந்த சனிக்கிழமை வாள் வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்த உதயகுமார் அன்பழகனின் படுகொலைக்கு நீதி வேண்டி நேற்று முன் தினம் மாலை அவரது பெற்றோர், உறவினர், நண்பர்களால் கவனவீர்ப்புப் போராட்டமொன்று நடத்தப்பட்டது.
மாலை 5 மணிக்குப் படுகொலை இடம்பெற்ற சாவகச்சேரி ஆதார மருத்துவமனை முன்பாக ஆரம்பித்து மீசாலை சந்தி வரை பேரணியாகச் சென்றனர். பேரணியில் சுலோகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கிய வண்ணம் சென்றனர். அத்துடன் வட மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தனின் உருவப் பொம்மைக்குச்



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள்

செருப்பு மாலை அணிவித்து பேரணியில் கொண்டு சென்று புத்தூர் சந்தியில் தீயிட்டு எரித்தனர். ஆர்ப்பாட்டம் நடைபெறுவதை அறிந்த பொலிஸார் அசம்பாவிதங்கள் நடைபெறாத வகையில் பாதுகாப்பு வழங்கினர்.
"கைதுசெய் கைதுசெய் கொலையாளியைக் கைதுசெய்", "கொடுக்காதே கொடுக்காதே கொலையாளிகளுக்கு மன்னிப்புக் கொடுக்காதே".
"கொலை புரிந்த 23 பேரில் 5 பேரைக் கைது செய்து பிரதான கொலையாளியைக் கைது செய்யாததன் மர்மம் என்ன?"
"நீதி வேண்டும் நீதி வேண்டும் அன்பழகனின் படுகொலைக்கு நீதி வேண்டும்", "சட்டத்தை திருப்பாதே சட்டத்தை திருப்பாதே பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிராக சட்டத்தை திருப்பாதே".
"அரச மருத்துவமனையில் படுகொலை செய்யப்பட்ட அன்பழகனுக்கு நீதி கிடைக்குமா?
ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாகைகள் பேரணியில் எடுத்துச் செல்லப்பட்டன.
கடந்த சனிக்கிழமை இரவு கச்சாய் அம்மன் கோயிலில் இடம்பெற்ற திருவிழாவில் இரு பகுதியினருக்கு இடையே ஏற்பட்ட மோதலில் காயமடைந்தவரை மோட்டார் சைக்கிளில் ஏற்றி வந்து சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதித்துவிட்டு திரும்பியவரை மருத்துவமனை வளாகத்தில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் கூரிய ஆயுதத்தால் தலையில் வெட்டியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததும் இந்தச் சம்பவம் தொடர்பாக நால்வர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதும் தெரிந்ததே. (வ-9- 31)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எப்போது முடிவுக்கு வரும் அரச பயங்கரவாதம்?

பலஸ்தீனத்தின் காஸா பகுதி கொதித்துக் கொண்டிருக்கிறது. அப்பாவி மக்கள் கொத்துக் கொத்தாகச் செத்து மடிந்து கொண்டிருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கானவர்கள் இடம்பெயர்ந்து அகதிகளாகி இருக்கிறார்கள். மக்கள் குடியிருப்புக்கள் மீது ஏவு குண்டுகள் வீழ்ந்து வெடிக்கின்றன; விமானங்கள் இலகு வைத்துக் குண்டுகளை வீசுகின்றன. தடுத்து நிறுத்த முடியாமல் ஐக்கிய நாடுகள் சபை மீண்டும் ஒரு தடவை கைகளைப் பிசைந்து கொண்டிருக்கின்றது.

பயங்கரவாதம் அல்லது தீவிரவாதத்தை அழிக்கின்றேன் என்ற பேரில் இஸ்ரேல் நாடு தனது அரச பயங்கரவாதத்தை பலஸ்தீன அப்பாவிகள் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. காஸா முழுவதும் 1,470 "தீவிரவாத இலக்குகளை" தான் தாக்கி அழித்திருப்பதாக அதற்குப் புள்ளிவிவரமும் கூறுகின்றது. அவற்றில் 770 தாக்குதல்கள் ஏவு குண்டுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டவையாம்.

புதிய ஜனநாயக ஒழுங்குகளின் கீழ் ஒருபுறத்தில் மனித உரிமைகள், விழுமியங்கள் என்பன மிக உயர்வானவை என்று போதிக்கப்பட்டு வருகையிலேயே மறுபுறத்தில் அவற்றை மிதித்துத் தள்ளும் அரச பயங்கரவாதமும் பெருங்கோலோச்சி வருவதை அவதானிக்க முடிகிறது. வல்லரசுகளில் இருந்து சின்ன அரசுகள் வரையில் ஒரே பால பாடத்தை - அரச பயங்கரவாதத்தை - நடைமுறையில் பின்பற்றி வருவது உள்ளங்கை நெல்லிக்கனி.

ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும், பாகிஸ்தானிலும் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும், காஷ்மீரில் இந்தியாவும், திபெத்தில் சீனாவும் பலஸ்தீனத்தில் இஸ்ரேலும் செச்சினியாவில் ரஷ்யாவும் என அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றன; விட்டுவருகின் றன. ஆனால், அவற்றுக்காக அந்த அரசுகள் தண்டிக்கப்படுவதில்லை. அவை "தெரியாமல் நடந்த தவறுகளாக" மன்னிக்கப்பட்டு விடுகின்றன. ஆனால், அதனையே அங்கீகரிக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டிராத ஒரு குழுவோ அமைப்போ செய்தால் அதனை இந்த தேர்ந் தெடுக்கப்பட்ட அரசுகள் பயங்கரவாதம் என்றுகூறி நசுக்கி, ஒடுக்கி விடுகின்றன.

"பயங்கரவாதம்" என்கிற ஆள், பேர், முகம் இல்லாத எதிரியின் பேரால் தங்கள் அனைத்துக் கொடுமைகளையும் நியாயப்படுத்திக்கொள்கின்றன இந்த தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள். இவற்றின் தயவிலேயே ஐக்கிய நாடுகள் சபையும் இயங்குவதால், நாடுகளின் அரசுகள் மேற்கொள்ளும் படுகொலைகள், சொத்தழிப்புக்கள், தான்தோன்றித்தனமான குண்டுத் தாக்குதல்கள், மக்களை ஏதிலிகளாக்கி அலையவிடும் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு அதனால் முடியவில்லை.

விளைவு, உலகத்தின் கண் முன்னால் கடந்த சில நாள்களில் மட்டும் 205 அப்பாவிப் பலஸ்தீனர்கள் (நேற்றுப் பகல் வரையான கணக்கு மட்டும்) இஸ்ரேல் அரச பயங்கரவாதத்தால் கொல்லப்பட்டுள்ளார்கள். அவர்களில் 30 வீதத்துக்கும் அதிகமானவர்கள் பெண்களும் குழந்தைகளுமேயாவார்கள். 1,500க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். 17,000க்கும் அதிகமானவர்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளார்கள். மேலும் மேலும் தாக்குதல்கள் தொடர்கின்றன. காஸாவின் குறிப்பிட்ட பகுதிகளில் இருந்து மக்களை வெளியேறு மாறு இஸ்ரேலிய அரசு துண்டுப் பிரசுரங்களை வீசு கின்றது. வெளியேறவேண்டாம் என்று கமாஸ் அமைப்பு மக்களைத் தடுக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. "அனைத்தையும் நிறுத்துங்கள்" என்று சத்தமிடுவதைத் தவிர ஐ.நாவால் வேறு எதனையும் செய்யமுடியவில்லை.

5 வருடங்களுக்கு முன்னர் வன்னியில் நடந்த அவலங்களை காஸா இப்போது எமது கண்முன் கொண்டு வருகின்றது. இதயத்தைக் கசக்கிப் பிழியும் இந்தச் சோகங்களுக்கு - அரச பயங்கரவாதத்துக்கு எப்போது முடிவு? அரச பயங்கரவாதத்தினால் கடும் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டவர்கள் என்ற வகையில் பலஸ்தீனர்களுக்காக குறைந்தபட்ச குரலையாவது உயர்த்துவது ஈழத் தமிழர்களின் கடமை அல்லவா?

# தீர்க்கமானதொரு கட்டத்தில் வடக்கு மாகாண சபை





■ சேரலாதன்

நாய் குரைப்பதால் மலை சரிந்துவிடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்ப்பும், வடமாகாண சபையின் புறக்கணிப்பும் எனக்கொன்றும் புதிதல்ல. இவ்வாறு திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார் வடமாகாண ஆளுநராக மீண்டும் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டு பதவியேற்றுள்ள மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி.

இதேவேளை பல்வேறு தரப்பினரும் இந்த ஆளுநர் மீள் நியமனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். ஆனால் இந்த நியமனத்தை நியாயப்படுத்தும் வகையில் ஜனாதிபதியின் சகோதரரும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ வடக்கு மாகாணம் நாட்டிலிருந்து பிரிக்கப்பட்ட ஒன்றல்ல. இலங்கையின் ஒரு பகுதி யாகவே அது காணப்படுகின்றது. அந்த வகையில் வடமாகாணத்துக்கும் ஆளுநர் ஒருவரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. பல மாநிலங்களைக் கொண்ட இந்தியாவிலும் மத்திய அரசுக்கு வேண்டப்பட்டவர்களே ஆளுநர்களாக நியமிக் கப்படுகின்றனர் என்னும் தமது கருத்தைஅவர் அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார். இந்த இருவரின் கருத்துக்களையும் இலங்கை அரசின் கருத்துக்களாகவே நாம் கொள்ள வேண்டும். இந்த நாட்டில் வாழுகின்ற சிறுபான்மை இனங்களைக் கிள்ளுக்கீரையாக அரசு நடத்தும்போது அதன் விசுவாசிகளாகச் செயற்படுபவர்கள் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பது ஒன்றும் இரகசியமான விடயமல்ல. வட மாகாணத்தில் வாழுகின்ற தமிழ் மக்களால் பெரிதும் ஆதரிக்கப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு நாய்க்கு ஒப்பிட்டுப் பேசும் அளவுக்கு தரம் தாழ்ந்ததொரு நிலைதான் இந்த நாட்டில் காணப்படுகின்றது. தமிழர்கள் என்னதான் வாய்கிழியக் கத்தினாலும் எம்மை எவருமே எதுவும் செய்துவிடமுடியாது என்ற ஆணவமும், இறுமாப்பும் பெரும்பான்மையினர் மத்தியில் ஆழ ஊடுருவி நிற்கின்றன என்பதும் இதனால் தெள்ளத் தெளிவாகத் தெரிகின்றது.



மேலும் அமைச்சர் பஸில் ஒன்றுமே அறியாதவர் போன்று அறிக்கை வெளியிட்டுள்ளமை அவரது பதவிக்கு இழுக்கானதொன்றாகும். இந்திய மத்திய அரசினால் நியமிக்கப்படும் ஆளுநர்கள் மாநில அரசின் கடமைகளில் தலையிடுவதில்லை. மாநில அரசின் கொள்கை விளக்க அறிக்கைகளை வாசிப்பதுடன் அவ்வப்போது மத்திய அரசினால் கோரப்படும் அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதுவும் அவர்களின் கடமைகளாக வரையறுக்கப்பட்டுள்ளன. இதை விடுத்து மாநில அரசின் கடமைகளில் பங்கு கொள்வதும், அதிகாரத்தைச் செலுத்துவதும் அவர்களின் கடமைகளாக வரையறுக்கப்படவில்லை. ஆனால் இலங்கையில் அதுவும் வட மாகாணத்தில் மாகாண சபையின் அதிகாரங்கள் அனைத்தையும் ஆளுநரே தனது கைக்குள் வைத்துக் கொண்டு ஆட்சி புரிந்து வருகின்றார். மக்களால் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட மாகாண சபையால் ஆளுநரின் நடவடிக்கைகளை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கவே முடிகின்றது.

ஆளுநர் நியமனத்தில் ஜனாதிபதி தமக்கு வழங்கிய உறுதிமொழிகளைக் காற்றில் பறக்கவிட்டதாக முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர். இந்த நாட்டைப் பொறுத்த வரையில் கொடுத்த வாக்குறுதிகளை மீறுவதென்பது புதுமையான விடயமல்ல. சர்வதேச சமூகமே இதில் ஏமாந்து நிற்கும்போது எம்மவர் எம்மாத்திரம் என்பது தெளிவாகத் தெரிகின் றது.

இதேவேளை வடக்கு மாகாண சபையின் கையாலாகாத நிலைக்கு மாகாண சபையின் பிரதம செயலருக்குத் தாம் வழங்கிய உத்தரவுகளைமீளப்பெறுவதாக முதலமைச்சர் உயர் நீதி மன்றத்தில் தெரிவித்துள்ளமையை ஓர் உதாரணமாகக் கொள்ள முடியும். தமக்குக் கீழ் கடமையாற்றும் ஓர் அதிகாரியைக் கட்டுப்படுத்த முடியாத நிலையிலேயே வடக்கு முதலமைச்சர் காணப்படுகின்றார். இந்த நிலையில் மாகாண சபை என்ற பெயரில் ஒன்று இருப்பது அவசியம்தானா? என்ற கேள்வி மக்களிடையே எழுந்துள்ளது. அதிகாரம் சிறிதளவும் இல்லாத ஒரு சபை எமக்குத் தேவைதானா? எனவும் அவர்கள் முணுமுணுக்க ஆரம்பித்துவிட் டார்கள். ஏற்கெனவே பிரதேச சபை களில் நிலவும் குத்துவெட்டுக்கள் தொடர்பாகத் தமது கடும் அதிருப்தியை வெளி யிட்டுவரும் அவர்கள் தற்போது மாகாண சபையும் வெறும் சபையாகப் பெயரளவில் மட்டுமே இயங்குவதை ஏற்றுக் கொள்ள முடியாத மனநிலைக்கு இட்டுச் செல்லப்பட்டுள்ளனர்.



ஆனால் ஒன்றை மட்டும் வடக்குத் தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மக்களிடமிருந்து விலக்கி வைக்கக்கூடிய வகையிலான சதி வலைகள் வேகமாகப் பின்னப்பட்டு வருகின்றன. இதற்கு ஆளும் தரப்பினரின் பூரண ஆசீர்வாதமும் கிடைக்கின்றது. இதனை முறியடிக்கும் வகையிலான செயற்றிட்டம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்களால் வகுக்கப்பட்டு உடனடியாகச் செயற்படுத்தப்பட வேண்டும். அப்போது தான் மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடியும். மக்களுக்கும் உண்மை நிலை தெரிய வரும். இதைவிடுத்து மக்கள் குழம்பிப் போய் விடுவார்களாயின் எதிர்காலத்தில் வேண்டத்தகாத விளைவுகளை கூட்டமைப்பினர் சந்திக்க நேரிடும்.

ஆனால் மக்கள் மத்தியில் பந்தா காட்டுவதிலும், சொகுசு வாகனங்களைப் பெற்றுக் கொள்வதிலும் காட்டும் ஆர்வத்தை இந்த விடயத்தில் மாகாண சபை உறுப்பினர்கள் காண்பிப்பதில்லை என்பது பொதுவான குற்றச்சாட்டாகவே காணப்படுகின்றது. ஜனாதிபதியின் செயல்களும் ஆளுநரின் நடவடிக்கைகளும் புதிதானவையல்ல. எனவே அவற்றுக்கு எதிரான வகையில் சாதுரியமாகக் காய்களை நகர்த்துவது அவசியமாகும். மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்று ஒரு வருடத்தை எட்டும் நிலையில் வெறுமனே வார்த்தை ஜாலங்களைக் காட்டிக் கொண்டிருப்பதால் மக்களின் மனங்களில் குடிகொண்டுள்ள வெறுமையைப் போக்கிட முடியாது. ஆக்கபூர்வமான செயற்பாடுகளே அவர்களைத் திருப்திப்படுத்தும் என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது.

வெளிநாடுகளிலிருந்து இங்குவரும் பிரமுகர்கள் இந்த நாடு அபிவிருத்தியில் திளைப்பதாகப் புகழ்ந்துவிட்டுச் செல்கின்றனர். அவர்களின் கண்களுக்கு அதிவேக நெடுஞ்சாலைகளும், கொழும்பு நகரின் புதிய தோற்றமும், புதிய புதிய கட்டடங்களும் தென்பகுதியின் வனப்பும் மட்டுமே தெரிகின்றன. இவற்றையெல்லாம் விட வேறு ஒரு சாரார் அவல வாழ்வு வாழ்வது அவர்களுக்குத் தெரிவதில்லை. சொந்த இடங்களுக்குச் செல்லமுடியாத நிலையில் முகாம்களில் அடைபட்டிருப்போர் தொடர்பாகவும், மீளக்குடியமர்வு என்ற பெயரில் அவல வாழ்வு வாழ்வோரின் நிலை பற்றியும் அவர்கள் அறிந்திருக்கவில்லை. மேலும் அதிகாரம் எதுவுமே வழங்கப் படாது செயலற்று முடங்கிக் கிடக்கும் வடக்கு மாகாண சபையை இவர்கள் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. இவையெல்லாம் தமிழரின் தலைவிதியென இவர்கள் நினைக்கின்றார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது. எனவே வடக்கு மாகாண சபையைப் பொறுத்த வரையில் இனிவரும் நாள்கள் கடுமையான சோத னைகள் நிறைந்தவையாகவே இருக் கப் போகின்றன.

இதுவரை படைத்துறை சாராத ஒருவர் ஆளுநராக நியமிக்கப்படுவாரென்ற நம்பிக்கையாவது இருந்தது. இப்போது அதுவும் கானல் நீராக மாறிவிட்டது. முதலமைச்சரால் கூட மாகாண சபை அதிகாரிகளைக் கட்டுப் படுத்த முடியாது என்பதும் உயர் நீதிமன் றத்தில் நிரூபணமாகிவிட்டது.

ஆகவே வெறுமனே வேடிக்கை பார்ப்பதை நிறுத்திவிட்டு பயனுள்ள வகையில் செயற்பட வேண்டியதொரு இறுதித் தருணம் இதுவென்பதை மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் மறந்து விடக் கூடாது. அவல நிலையில் இருந்து கொண்டு அவல வாழ்வு வாழும் தமது மக்களை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சிந்திக்க மறந்தால் வரலாறு ஒரு போதுமே இவர்களை மன்னிக்காது.

# தமிழர் வாழ்வியலில் ஆடிப்பிறப்பு

நவாலியூர் சோமசுந்தரப் புலவர். ஆடிப்பிறப்பின் சிறப்பை பின் வருமாறு தமது பாடல்வரிகளின் மூலமாகத் தெரிவித்துள்ளார்.

*ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை*
*ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே*
*கூடிப் பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்*
*கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே*

*பாசிப் பயறு வறுத்துக் குத்தி செந்நெல்*
*பச்சை அரிசி இடித்துத் தெள்ளி*
*வாசப் பருப்பை அவித்துக்கொண்டு நல்ல*
*மாவைப் பதமாய் வறுத்தெடுத்து*

*வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே*
*வேலூர்ற் சர்க்கரையும் கலந்து*
*தோண்டியில் நீர் விட்டு மாவை அதில் கொட்டி*
*சுற்றிக் குழைத்துத் திரட்டிக் கொண்டு*

*வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித் தட்டி*
*வெல்லக் கலவையை உள்ளே இட்டு*
*பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே*
*பார்க்கப் பார்க்க பசி தீர்ந்திடுமே*

*பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி*
*போட்டு மாவுருண்டை பயறுமிட்டு*
*மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்*
*மணக்க மணக்க வாயூறிடுமே*

*குங்குமப் பொட்டிட்டுப் பூமாலை சூடியே*
*குத்து விளக்கு கொளுத்தி வைத்து*
*அங்கிள நீர் பழம் பாக்குடன் வெற்றிலை*
*ஆடிப் படைப்பும் படைப்போமே*

*வண்ணப் பலாவிலை ஒடிப் பொறுக்கியே*
*வந்து மடித்ததை கோலிக் கொண்டே*
*அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க*
*ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே*

*வாழைப்பழத்தை உரித்துத் தின்போம் நல்ல*
*மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்*
*கூழைச் சுடச்சுட ஊதிக் குடித்துக்*
*கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே*





"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே" என்கின்ற பாடல் தெரியாதவர்களே இல்லையென்று கூறலாம். ஆன்மிக ரீதியில், ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளையும், பிதிர்க் கடன்களையும் நிறைவேற்றுகின்ற காலமாகவும் இந்த மாதத்தைக் கைக்கொள்கின்றனர்.

சூரியன் தெற்கு நோக்கிப் பயணத்தை ஆரம்பிக்கும் மாதமாக ஆடி மாதம் பார்க்கப்படுகின்றது. இது தெட்சணாயன காலம் எனப்படுகிறன்றது. துல்லியமான கிரக நகர்வுக் கணிப்பீடுகள் இன்றைய அறிவியல் வளர்ச்சியில் எத்துணை வியக்கப் படுகின்றது. ஆனால் குறைந்தளவு வசதி கொண்ட அந்தக் காலத்திலேயே, அமாவாசையும், முழு நிலாவும் எப்போது தோன்றும் என்றும் கிரகணங்கள் தோன்றும் நாள்களையும் துல்லியமாகக் கணிப்பிட்டுக் கூறினான் தமிழன். நாங்கள் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தமையையும், அதற்கு அனுசரணையாகத் தமிழர்கள் தமது பண்பாட்டுக் கோலங்களை அமைத்துக் கொண்டமையையும் தமிழர் வரலாறு துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றது. கீழைத் தேசத்தவர்களின் பண் பாட்டுக் கோலங்களில் ஆடி மாதம் ஒரு சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. இலக்கியங்களில்கூட ஆடி மாதம் பற்றி நிறையவே பேசப்படுகின்றன. 'ஆடி விதை தேடி விதை' என்ற கவி வரி நம்மவர்களின் பருவத்தே பயிர் செய்யும் காலத்தை எதுகை மோனையுடன் பாடி வைத்துள்ளனர்.

முருங்கை, கிழுவை போன்ற மரங்களை நாட்டும் மாதமாக நாம் ஆடியைக் கொள்வதில் அர்த்தமுள்ளது. ஏனெனில் தொடர்ந்து வரும் மாதங்கள் வனப்பையும், வளத்தையும் கொண்டு வரும் வசந்த காலங்களாகும். இதேவேளை நல்ல மழை பெய்து, நெல், பயறு, உழுந்து, கௌபி, கடலை முதலிய தானியங்கள் விளைய வேண்டும் எனப் பிரார்த்தித்தும், ஆடிப் பிறப்பு நம்மவர்களால் கொண்டாடப்பட்டுள்ளது.

நிலமங்கை குதூகலத்துடன் மகிழும் மாதமாக நாம் ஆடியை வரவேற்கின்றோம். இந்த மகிமையினால்தான் ஆடிப் பிறப்பன்று நாம் அனைவரும் உண்டு மகிழ எமது பண்பாடு வழிசமைத்து வைத்திருக்கின்றது. எமது உடல் வலுவை அதிகரிப்பதுடன், உள ரீதியாக ஒற்றுமையை மேம்படுத்தும் ஆடிப்பிறப்பில் ஊர் கூடித் தேரிழுத்து மகிழ்வதைப்போல் நாமும் கூடிக் கூழ் காய்ச்சி உண்டு மகிழ்வதோடு எம் கிராமிய, பாரம்பரிய விளையாட்டுக்களில், ஈடுபட ஏற்ற ஒழுங்குகளைச் செய்து, நாமும் மகிழ்ந்து எதிர்காலச் சந்ததியையும் குதூகலம் கொள்ளச் செய்வோம். இது பண்பாட்டுக் கடமை என்பதை நாம் மனதில் கொள்வோம்.

இயற்கை ஆறுகள் எதுவுமற்ற எமது பிரதேசங்களில், மாரி காலத்தில் தோற்றம் பெறும் ஆறுகள் வற்றாத நதியாகத் திகழ மழை வேண்டிப் பிரார்த்திக்கும் காலமாகவும் நாம் இதனைக் கொள்வோம். எல்லா உள்ளங்களும் இணைந்த வகையில் வேண்டும் வேண்டுதல்களும், பிரார்த்தனைகளும் ஒரு நாளும் பொய்த்துப் போவதில்லை.

1950களின் முன் பின்னராக ஓரிரு தசாப்தங்களில் பிறந்து வாழ்பவர்களிடையே "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே" என்கின்ற பாடல் தெரியாதவர்களே இல்லையென்று கூறலாம். ஆன்மிக ரீதியில், ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளையும், பிதிர்க் கடன்களையும் நிறைவேற்றுகின்ற காலமாகவும் இந்த மாதத்தைக் கைக்கொள்கின்றனர். இத்தகைய ஒரு ஆடி என்கின்ற ஜீலையில்தான், ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ரோங் வான முழு நிலவைத் தொட்டுவிட்டு பூமிக்கு மீண்டு விஞ் ஞான சரித்திரத்தைப் படைத்தார். இன்றுவரை அங்கு இன்னுமொரு மனிதச் சுவடு தடயமாகவில்லை என்பதும் வரலாறு. இவ்வாறாக ஆன்மிக வாதிகளையும், அறிவியல் வாதிகளையும் கவர்ந்த ஒரு மாதமாக ஆடி பார்க்கப்படுகின்றது.

ஆடிப்பிறப்பின் மகத்துவம் உணர்ந்து அந்நாளில் கூடிக் குதூகலிப்போம். வாழ்வில் துயர்மிகு காலங்களில் துவண்டு விடாமல் வலிமையுடன் மீண்டெழுவதற்கு தமிழ் சமூகத்தின் வாழ்வியலோடு உட்பொதிந்து தொடர்கின்ற பாரம்பரியங்களையும், பண்பாட்டுக் கடமைகளையும் ஆற்றுவதற்கு திடசங்கற்பம் பூணும் ஒரு அடையாள மாதமாக ஆடிப்பிறப்பைக் கொண்டாட நாம் அனைவரும் முனைப்புடன் செயற்பட வேண்டும்.



## "ஆடிப்பிறப்பினை கொண்டாடி மகிழ்வோம்"

ஆடிப்பிறப்பினைக் கொண்டாடி மகிழ்வோம்
ஆனந்தம் பெருகிட உண்டாடி மகிழ்வோம்
கூடிக் களித்தே கொண்டாடி மகிழ்வோம்
கூழும் களியும் உண்டாடி மகிழ்வோம்
நீடிக்கும் இன்னல்கள் ஒழிந்திட வேண்டுவோம்
நிர்மலன் ஈசனை வேண்டியே தொழுவோம்
நாடியே வரங்களைத் தேடிப் பெறுவோம்
நமக்கின்று ஆடி பிறந்த தென்றெ எழுவோம்
மாடிகள் மனைகளெங்கும் மங்களம் பொங்கிட
மண்ணிலே ஆடியிலே நற்றவம் செய்வோம்
தேடிய செல்வத்தில் ஏழைக்கும் கொடுத்தே
தேசத்தில் ஆடியே தர்மங்கள் செய்வோம்
பாடியே எங்களின் பெருமைகள் சொல்வோம்
பண்டைய தமிழர் பண்டிகையை எண்ணியே மகிழ்வோம்
வேடிக்கைக் கதைகளை விடுத்தே உயர்வோம்
விடிவினை ஆடியில் தேடியே பெறுவோம்

*மதுரகவி*
*காரை. எம். பி. அருளானந்தம்*

## சிறப்பு மிகுந்த ஆடிப்பிறப்பு

இ. நிஷாந்தன்

இந்துக்களால் கொண்டாடப்படும் பண்டிகைகளில் ஆடிப்பிறப்புப் பண்டிகையும் ஒன்றாகும். ஆடி மாதத்தின் முதல் நாள் இந்தப் பண்டிகை கொண்டாடப்படு கின்றது. சூரியன் வட திசை நோக்கிச் செல்லும் தை முதல் ஆனி வரையான ஆறு மாதங்கள் உத்தராயண காலம் எனப்படும். அது போல் சூரியன் தெற்கு நோக்கிச் செல்லும் ஆடி முதல் மார்கழி வரையான ஆறு மாதங்கள் தட்சணாயன காலம் ஆகும். இந்த தட்சணாயன காலத்தின் ஆரம்பமே இந்த ஆடி மாதமாகும். அத்துடன் தேவர்களுக்கு இரவுப் பொழுது ஆரம்பிக்கும் மாதமும் இதுவாகும். அது மட்டுமன்றி மழை காலத்தின் ஆரம்ப காலம் எனவும் இந்த மாதத்தைக் கூறுகின்றனர்.

ஆடிப்பிறப்பு பண்டிகையின் சிறப்பான அம்சமாகக் கருதப்படுவது கூழ் காய்ச்சுவது ஆகும். பனங்கட்டி, அரிசி மா என்பன கொண்டு கூழ் காய்ச்சி மகிழ்வோடு உண்ணுவர். அது மட்டுமல்லாது கூழுடன் கொழுக்கட்டை, மோதகம் போன்ற இனிப்பு உணவுகளையும் தயாரித்து இந்துக்கள் தமது உறவினர், அயலவர்களுடன் உண்டு மகிழ்வார்கள். எனவே, இத்தகைய சிறப்பு மிகுந்த ஆடிப்பிறப்பு நன்நாளிலே இந்துக்களாகிய நாம் எமது இல்லங்களில் தூய்மையான உள்ளத்தோடு ஆடிக் கூழ் காய்ச்சி அதனை இறைவனுக்கு படையல் செய்து உறவினர், அயலவர்களுடன் ஒற்றுமையாக உண்டு மகிழ்வுறுவோம்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: உங்களுடைய செயற்றிறனும் சிந்தனையும் பெரிதும் பாராட்டப்படும். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்களை அடையப்பெறுவார்கள். பெற்றோர்களால் அனுகூலம் அடையப் பெறுவீர்கள். மக்களால் மகிழ்ச்சி ஏற்படும். குடும்பத்தில் சிறு சிறு சலசலப்புகள் வந்து போகும்.

**இடபம்**: மகிழ்ச்சியின் மிகுதியால் அலட்சியமாகப் பேசுவதைத் தவிர்ப்பது நல்லது. நாவடக்கம் மிகத்தேவை. முக்கிய நபர்களின் சந்திப்பும் அவர்களால் உதவியும் கிடைக்கும். மனதில் தைரியம் கூடும். சுய நம்பிக்கை உண்டாகும்.

**மிதுனம்**: எடுத்த காரியங்களைச் செய்து முடிப்பதில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்ற வாய்ப்புகள் எதிரில் வந்து தோன்றும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு முக்கிய பொறுப்பு கிடைக்கலாம்.

**கடகம்**: குடும்பத்தில் சந்தோஷம் உண்டாகும். பிரிந்து சென்ற குடும்ப உறுப்பினர் மீண்டும் வந்து சேரலாம். பிள்ளைகள் கல்வி பற்றிய சிந்தனை அதிகரிக்கும். உறவினர் மத்தியில் மரியாதை கூடும்.

**சிங்கம்**: எதிர்பாராத சந்திப்புகள் உண்டாகும். முக்கிய பொறுப்புகள் கிடைக்கக்கூடும். மாணவர்களுக்கு கல்வியில் திருப்தியான நிலை காணப்படும். இதேவேளை அவசரமாக எதையும் செய்ய தோன்றும். துணிச்சலுடன் எதிலும் ஈடுபடுவீர்கள்.

**கன்னி**: எதை பற்றியும் கவலைப்படாமல் வேலையில் வேகம் காட்டுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுக்கும்போது அவசரப்படாமல் இருப்பது நல்லது. நிதானமாகச் செய்தால் வெற்றி நிச்சயம். வீண் வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்**: நினைத்த காரியத்தைச் செய்து முடிக்கும் சூழ்நிலை உருவாகும். தெய்வ சிந்தனை அதிகரிக்கும். வாழ்க்கையில் இருந்த அதிருப்தி நீங்கி பிடிப்பு உண்டாகும். எதிர்பார்த்த தகவல் வரும். இடமாற்றம் உண்டாகலாம்.

**விருச்சிகம்**: எதிர்பாராத திடீர் செலவு ஏற்படும். தொழில் வியாபாரத்தில் திடீர் வீழ்ச்சி ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் அடுத்தவர்களால் திடீர் பிரச்சினை தலை தூக்கலாம்.

**தனுசு**: குடும்பத்தில் மனம் விட்டு பேசுவது நன்மை தரும். பெண்களுக்கு மனதில் இருந்த சோர்வு நீங்கி உற்சாகம் உண்டாகும். எதிர்பார்த்த தகவல் சாதகமாக வரும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண்பதில் ஆர்வம் உண்டாகும்.

**மகரம்**: அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்த்து தீர ஆலோசித்து எதிலும் ஈடுபடவும், மற்றவர்களிடம் நிதானமாகப் பேசுவது நல்லது. வீண் செலவும், அலைச்சலும் உண்டாகலாம். எதிர்பாராத இடமாற்றம் ஏற்படலாம். எதிலும் மிகவும் கவனத்துடன் ஈடுபடுவது நல்லது.

**கும்பம்**:மற்றவர்களிடம் நிதானமாகப் பேசுவது நல்லது. வீண் செலவும், அலைச்சலும் உண்டாகலாம். எதிர்பாராத இடமாற்றம் ஏற்படலாம். தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகலாம். எனவே எதிலும் மிகவும் கவனத்துடன் ஈடுபடுவது நல்லது.

**மீனம்**: தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அடுத்தவர்களுக்கான பொறுப்புகளை ஏற்கும்போது எச்சரிக்கை தேவை. தீ, ஆயுதம் இவற்றைக் கையாளும் போது கவனமாக இருப்பது நல்லது.

## நாளை

**ஆடி-02 வெள்ளிக்கிழமை | 18.07.2014**

திதி: ஸப்தமி பி.இ.02.20 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி மு.ப.10.30 வரை

சுபநேரம்: 06.00-07.30 வரை
இராகுகாலம்: 10.30-12.00 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## தவம்

'நல்லதையும் அழகியதையும் வழிபடுவது பலவீனத்தைக் காட்டுகிறது என்றும், கொடுமையானதையும் தீயதையும் நேசித்து நாம் வழிபட வேண்டும்' என்றும் கூறும்சமயப்பிரிவினர்உள்ளனர். இந்தப் பிரிவினர் திபெத் முழுவதும் பரவி இருக்கின்றனர். இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் திருமணம் செய்து கொள்வதில்லை. இவர்கள் வெளிப்படையாகச் செயல்புரிவது இல்லை. இரகசியமாக நிறுவனங்களை அவர்கள் உருவாக்குகின்றனர். கீழ்த்தரமானவர்களைத் தவிர நல்ல மனிதன் எவனும் இவர்களுடைய கூட்டத்தில் சேர விரும்பமாட்டான். பொதுவுடைமைக் கொள்கை (Communism) திபெத்தில் மூன்று தடவைகள் முயற்சி செய்யப்பட்டது. மும்முறையும் அது தோல்வி அடைந்தது. ஆற்றல் பெறுவதற்காக அவர்கள் தவம் செய்கின்றனர். பெருமளவுக்கு ஆற்றலைப் பெறுவதில் அவர்கள் வெற்றி அடைகின்றனர். "தவம்" என்னும் சொல் 'எரித்தல்' என்று பொருள்படுகிறது. மேலான இயல்புகளைச் 'சூடாக்கத்' தூண்டுவது தவம் ஆகும். சூரிய உதயத்திலிருந்து மறைவது வரை, ஓயாது ஓம் என்று ஜெபித்துக்கொண்டிருப்பது ஒரு வகைத் தவம் ஆகும். கட்டுப்பாடான இத்தகைய ஒழுக்கத்தின் விளைவாக உங்களிடம் ஒரு வித ஆற்றல் பிறக்கிறது. இந்த ஆற்றலை உங்கள் விருப்பம் போல் நீங்கள் ஆன்மிகத்துக்கோ லௌகீகத்துக்கோ பயன்படுத்தலாம். தவம் என்னும் இந்தக் கருத்து இந்து மதம் முழுவதும் பரவி இருக்கிறது. படைப்புத் தொழிலை ஆரம்பிக்கும் முன்னர் இறைவனே தவம் செய்தார் என இந்துக்கள் கூறுகிறார்கள். விரும்புவது எதையும் சாதித்துக் கொள்ள மனோமயமான கருவியாக இருப்பது தவம். "மூவுலகங்களிலிருக்கும் எதையும் தவத்தின் மூலம் பெற்று விடலாம்...."

# கின்னஸ் சாதனை படைத்த உலகின் மிக உயரமான பதின்ம வயதுப் பெண்

துருக்கியில் உள்ள கராபுக் பகுதியைச் சேர்ந்த ருமைசா கேல்கி என்னும் 17 வயதுப் பெண், உலகின் மிக உயரமாக பதின்ம வயதுப் பெண் என்ற பட்டத்தைப் பெற்று கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்து உள்ளார்.

7 அடி 9 அங்குல உயரமுள்ள இவரின் பெற்றோரும், சகோதரர்களும் சாதாரண உயரம்கொண்டவர்கள் ருமைசா கேல்கி வேகமாக வளர்வதற்கு வீவர்ஸ் சின்ரோம் (Weaver's syndrome) என்னும் மரபணுப் பாதிப்பு காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அசாதாரண உயரத்தைத் தவிர ருமைசா கேல்கியின் பாதம் 30.5 செ.மீ. நீளமாக உள்ளது. அதீத வளர்ச்சியால் ருமைசாவுக்கு நடப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.



# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலினும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 6 | 7 | | 8 |
| | | 8 | | | | 9 | | |
| | 9 | 6 | 8 | | 3 | 5 | | 4 |
| 9 | 8 | | | 2 | 5 | | | 7 |
| 2 | | | | 3 | | | | 9 |
| 6 | | | 9 | 8 | | | 1 | 5 |
| 5 | | 2 | 1 | | 8 | 4 | 9 | |
| | | 7 | | | | 1 | | |
| 3 | | 9 | 5 | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 5 | 2 | 4 | 3 | 9 | 1 | 8 |
| 3 | 1 | 9 | 6 | 5 | 8 | 4 | 2 | 7 |
| 8 | 2 | 4 | 1 | 9 | 7 | 3 | 5 | 6 |
| 1 | 8 | 7 | 9 | 6 | 2 | 5 | 3 | 4 |
| 2 | 4 | 3 | 8 | 1 | 5 | 6 | 7 | 9 |
| 9 | 5 | 6 | 7 | 3 | 4 | 1 | 8 | 2 |
| 5 | 6 | 8 | 3 | 2 | 9 | 7 | 4 | 1 |
| 4 | 9 | 2 | 5 | 7 | 1 | 8 | 6 | 3 |
| 7 | 3 | 1 | 4 | 8 | 6 | 2 | 9 | 5 |

# கலைமகள், இந்து இளைஞர் அணிகள் இறுதி ஆட்டங்களில் மோதத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 17

மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற 'பி' பிரிவு அணிகளுக்கான அரையிறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

'ஏ' பிரிவு அணிகளுக்கான அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-23)

## மோகனதாஸ், ஸ்ரார் ஆட்டங்களில் அசத்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 17

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 49 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தப்படும் யாழ்.மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற யாழ்.பல்கலைக்கழக அணிக்கும் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

கலைவாணி விளையாட்டுக்கழக அணிக்கும் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## வென்றது யாழ். ஐக்கியம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 2ஆம் சுற்று ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றுவருகின்றன.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கலைமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைக் காண்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் யாழ்.ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## அடுத்த சுற்றுக்கு நக்கீரன்



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டி ஆட்டமொன்றில் வடமராட்சி நக்கீரன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

நெல்லியடி கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் அணியும் வடமராட்சி நக்கீரன் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதல்பாதி ஆட்டத்தில் ஒரு கோலை பெற்றுக்கொண்ட நக்கீரன் விளையாட்டுக் கழகம் இரண்டாம் பாதி ஆட்டத்தில் மேலும் மூன்று கோல்களைப் போட்டது. ஆட்ட நிறைவில் நக்கீரன் விளையாட்டுக் கழகம் 04:00 என்ற கோல் கணக்கில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் அணியை வென்று அடுத்த சுற்றில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (த-86)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 17

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின பொன் விழாவை முன்னிட்டு வட மாகாண ரீதியாக நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இரண்டாம் சுற்று ஆட்டங்கள் இன்று வியாழக்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 17

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 2ஆம் சுற்று ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஞானகலா விளையாட்டுக்ழக அணியை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நியூட்டன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்துத் திக்கம் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## ஆட்டங்களில் வென்ற அணிகள்



யாழ்ப்பாணம், ஜூலை 17

மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் லீக் ஆட்டங்கள் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணிக்கும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணிக்கும் ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணிக் கும் அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## ஆவரங்கால் இந்து இளைஞர் கரப்பந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 17

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 95 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வட மாகாண ரீதியாக நடத்திய மின்னொளிக் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றுச்சம்பியன்ஆனது.

கடந்த சனிக்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய முன்றலில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இள்ஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

5 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## வென்றது சென்.ஜோசப்

யாழ்ப்பாணம், ஜூலை 17

பனங்கட்டிக் கொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணியும் மன்னார் உதைபந்தாட்ட லீக்கும் இணைந்து வடமாகாண ரீதியாக நடத்திய 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் மன்னார் பனங்கட்டிக்கொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றுச் சம்பியன் ஆனது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மன்னார் பனங்கட்டிக்கொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 2 கோல்களைப்பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைக் காண்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் மன்னார் பனங்கட்டிக் கொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணி 6:5 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



முல்லைத்தீவு சிலாவத்தை டில்லி குஞ்சன் முன்பள்ளி மழலைகளின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் சிலாவத்தை புனித அன்னாள் ஆலய வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது இந்த விழாவில் முல்லைத்தீவு கல்வி வலய முன்பள்ளிகளின் உதவிக்கல்விப் பணிப்பாளர் வே.ஜெயம் சபாபதி கலந்துகொண்டார். (த-102)

உதயன் 17.07.2014

# மொத்தப் பரிசுத் தொகை ரூ. 10,000 கோடி ஜேர்மன் அணிக்கு மட்டும் 630 கோடி ரூபா

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் ஜேர்மனி சம்பியன் பட்டம் வென்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனாவை 1-0 என்ற கோல் கணக்கில் ஜேர்மனி வென்றது.

ஜேர்மனியின் 22 வயது இளம் வீரர் மரியோ கோட்ஸே 113ஆவது நிமிடத்தில் கோல் அடித்து அணிக்கு வெற்றி தேடித்தந்தார். இதன் மூலம் சுமார் 24 ஆண்டுகளுக்குப் பிறகு ஜேர்மனி மீண்டும் உலக சம்பியன் ஆனது.

அந்த அணிக்கு 630 கோடி ரூபா பரிசுத் தொகை வழங்கப்பட்டது. இரண்டாவது இடம் பெற்ற ஆர்ஜென்ரீனா அணிக்கு 450 கோடி ரூபா கிடைத்தது.

உலகக் கிண்ணத்தை வெல்ல அதிக வாய்ப்புள்ளதாக கணிக்கப்பட்ட ஸ்பெய்ன், போர்த்துக்கல் உள்ளிட்ட சில அணிகள் முதல் சுற்றிலேயே வெளியேறி அந்நாட்டு ரசிகர்களுக்கு அதிர்ச்சி அளித்தன.

பிரேஸில், ஜேர்மனி, நெதர்லாந்து, ஆர்ஜென்ரீனா ஆகிய அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின. இதில் பிரேஸிலை வீழ்த்தி ஜேர்மனியும், நெதர்லாந்தை வென்று ஆர்ஜென்ரீனாவும் இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றன. இதில் ஜேர்மனி சம்பியனானது. இதன் மூலம் தென் அமெரிக்க மண்ணில் உலக சம்பியன் பட்டம் வென்ற முதல் ஐரோப்பிய அணி என்ற பெருமையை ஜெர்மனி பெற்றது. சுமார் 24 ஆண்டுகளுக்குப் பிறகு ஜேர்மனி மீண்டும் உலக சம்பியனாகியுள்ளது.

இதற்கு முன்பு 1990ஆம் ஆண்டு இத்தாலியில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் இறுதி ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா அணியை ஜேர்மனி 1-0 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியன் ஆனது.

அதன் பிறகு 1994, 1998 ஆம் ஆண்டுகளில் கால் இறுதி ஆட்டம் வரையே ஜேர்மனி முன்னேறியது. 2002ஆம் ஆண்டில் இறுதி ஆட்டத்துக்கு முன்னேறினாலும் பிரேஸிலிடம் கிண்ணத்தை நழுவவிட்டது. 2006, 2010ஆம் ஆண்டுகளில் அரையிறுதியில் தோல்வியடைந்து ஜேர்மனி வெளியேறியது.

இப்போது 24 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சம்பியன் பட்டத்தை ஜேர்மனி வென்றுள்ளது.

அடுத்த உலகக் கிண்ணப் போட்டி 2018ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெறவுள்ளது. இதற்கான ஆயத்தப் பணிகளை இப்போதிருந்தே ரஷ்யா தொடங்கிவிட்டது.

ஜேர்மனி அணிக்கு 18 கரட் தங்கத்தில் செய்யப்பட்ட கிண்ணத்துடன், 630 கோடி ரூபா பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இது வரை நடைபெற்ற கிண்ணப் போட்டிகளில் இதுவே அதிக பட்ச பரிசுத் தொகையாகும். கடந்த முறை சம்பியன் பட்டம் வென்ற ஸ்பெய்ன் அணிக்கு 540 கோடி ரூபா பரிசு வழங்கப்பட்டது.

இம்முறை இரண்டாவது இடம் பிடித்த ஆர்ஜென்ரீனா அணிக்கு சுமார் 450 கோடி ரூபா பரிசாக வழங்கப்பட்டுள்ளது. 3ஆவது இடத்தை பிடித்த நெதர்லாந்து அணிக்கு 360 கோடி ரூபாவும், 4ஆவது இடத்தை பிடித்த பிரேஸில் அணிக்கு 300 கோடி ரூபாவும் கிடைத்தது.

காலிறுதியில் தோல்வியடைந்த பிரான்ஸ், கொலம்பியா, பெல்ஜியம், கோஸ்டா ரிக்கா ஆகிய அணிகளுக்கு தலா ரூ. 240 கோடியும், நொக் அவுட் சுற்றில் வெளியேறிய சிலி, உருகுவே, மெக்சிக்கோ, கிரீஸ், நைஜீரியா, அல்ஜீரியா, சுவிட்சர்லாந்து, அமெரிக்கா ஆகிய 8 அணிகளுக்கு தலா ரூ.165 கோடியும் வழங்கப்பட்டன.

முதல் சுற்றிலேயே வெளியேறிய ஸ்பெயின், ஜப்பான், ஈக்குவடோர், ஹோண்டுரஸ், பொஸ்னியா, ஈரான், போர்த்துக்கல், இத்தாலி, இங்கிலாந்து, குரேஷியா, கமரூன், ஆஸ்திரேலியா, ஐவரிகோஸ்ட், கானா, ரஷ்யா, தென்கொரியா ஆகிய 16 அணிகளுக்கு தலா ரூ.150 கோடி பரிசு வழங்கப்பட்டது. இந்த உலக கிண்ணத்தின் மொத்த பரிசுத் தொகை ரூ.10,000 கோடி. இது கடந்த உலகக் கிண்ணத்தைவிட 37 சதவீதம் அதிகம். (த)






## வேதனையில் மெஸ்ஸி



உலகக்கிண்ண இறுதிப்போட்டியில் ஆர்ஜென்ரீனா தோற்றதால் அந்த அணியின் நட்சத்திர வீரர் மெஸ்ஸி மிகுந்த மன வருத்தத்தில் இருக்கிறார்.

இந்த ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் போராடி இறுதி வரை வந்த ஆர்ஜென்ரீனா கடைசியில் வலிமை வாய்ந்த ஜேர்மனி அணியிடம் வீழ்ந்து கிண்ணத்தைப் பறிகொடுத்தது.

ஆர்ஜென்ரீனா கிண்ணம் வெல்ல நான் என்ன வேண்டுமானாலும் செய்ய தயார் என்று கூறிய அணித் தலைவர் மெஸ்ஸி இதனால் மன முடைந்து போயுள்ளார்.

இந்தத் தொடரில் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்ட மெஸ்ஸி தங்கபந்து விருதைத் தட்டிச் சென்றார்.

இது பற்றி மெஸ்ஸி கூறுகையில், இந்தச் சமயத்தில் தங்கப்பந்து ஒரு விடயமில்லை. உலகக் கிண்ணம் தான் முக்கியம். ஆனால் அதை கைப்பற்ற முடியாமல் போனது ஏமாற்றமாக உள்ளது.

நாங்கள் சிறப்பாக விளையாடி தோல்வி அடைந்ததுதான் மனதை மிகவும் பாதித்துள்ளது. எனக்கு கொடுக்கப்பட்ட பரிசு மற்றும் ஏதும் என்னை ஆறுதல் படுத்தாது என்று கூறியுள்ளார். (த)

## அன்டர்சன் - ஜடேஜா மோதல்

இந்திய கிரிக்கெட் அணியின் வீரர் ரவீந்தர் ஜடேஜாவிற்கு எதிராக தகாத வார்த்தை பிரயோகங்களை பாவித்தமைக்காகவும், அவரை தள்ளி விட்டமைக்காகவும் இங்கிலாந்து அணியின் வீரர் ஜேம்ஸ் அன்டர்சன் தண்டிக்கப்பட்டுள்ளார்.

இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் மதியபோசன இடைவேளைக்கு மைதானத்தை விட்டு வெளியே செல்லும்போது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. போட்டி நடுவர்கள் இந்த சம்பவத்தை பாத்திருக்கவில்லை. எனவே அவர்கள் போட்டி மத்தியஸ்தரிடம் இது தொடர்பாக முறையிடவில்லை.

இருப்பினும் இந்திய அணியின் முகாமையாளர் இந்த விடயம் தொடர்பாக போட்டி மத்தியஸ்தரிடம் முறையிட்டதை தொடர்ந்து ஜேம்ஸ் அன்டர்சன் குற்றவாளியாக இனம் காணப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் சபை இந்த முறையீடு தொடர்பாக தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளது. இந்திய அணி இந்த சம்பவத்தை சிறிய ஒரு சம்பவம் என ஊடக அறிக்கையாக வெளியிட்டுவிட்டு முறையீடு செய்து பெரிதாக்கிவிட்டது என தெரிவித்துள்ளது. தாங்கள் ஜேம்ஸ் அன்டர்சனுக்கு பக்கபலமாக இருப்போம் எனவும் ஜடேஜாவுக்கு எதிராக முறையீடு செய்யவுள்ளோம் எனவும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

14 நாள்களுக்குள் விசாரணை நடாத்தப்பட்டு அதன்படி அவரின் குற்றம் நிரூபிக்கப்படும் வேளையில் 2 டெஸ்ட் போட்டி தடைக்கு உட்பட வாய்ப்புக்கள் உள்ளன. குறித்த குற்றத்திற்கு 4 தொடக்கும் 8 புள்ளிகள் வழங்கப்படும். ஒவ்வொரு 2 புள்ளிகளும் 1 டெஸ்ட் போட்டித் தடைக்கு அல்லது 2 ஒருநாள் சர்வதேசப் போட்டித்தடைக்கு சமனானவை. இதன் படி ஜேம்ஸ் அன்டர்சனுக்கு 4 புள்ளிகள் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாளைய தினம்



இரு அணிகளுக்குமான இரண்டாவது டெஸ்ட் போட்டி ஆரம்பிக்கவுள்ளது. எனவே நாளைய போட்டியில் ஜேம்ஸ் அன்டர்சன் விளையாடும் வாய்ப்புக்கள் கிடைக்கும். இருப்பினும் அடுத்த இரண்டு போட்டிகளும் சந்தேகம் என்ற நிலை உருவாகும். டோனி உட்பட அனைவரும் இந்த சம்பவம் தொடர்பாக முறையிட்டனர். இது ஒரு பெரிய விடயம். ஒரு வீரரை எதிரணி வீரர் தொட முடியாது. அன்டர்சன் தள்ளியுள்ளார். எனவேதான் நான் இதை முறையீடு செய்தேன் என இந்திய அணியின் முகாமையாளர் சுனில் தேவ் கூறியுள்ளார். (த)

## முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா நிதானம்



இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் இலங்கை அணிக்குமிடையிலான தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி நேற்று காலி சர்வதேச விளையாட்டரங்கில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலாவது விக்கெட்டுக்காக 70 ஓட்டங்களை சேர்த்திருந்த போது பீற்றர்சன் 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து களம் புகுந்த டு பிளசிஸ், எல்கருடன் இணைந்து சிறந்த இணைப்பாட்டத்தை வழங்கினார். சிறப்பாக துடுப்பெடுத்தாடிய எல்கர 187 பந்துகளை எதிர்கொண்டு 3 சிக்ஸர்கள், 11பவுண்டரிகள் உள்ளடங்கலாக 103 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். தொடர்ந்து களம் புகுந்த அணித் தலைவர் அம்லா 11 ஓட்டங்களையும், டீ வில்லியரஸ் 21 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்த டு பிளசிஸ் 196 பந்துகளில் 80 ஓட்டங்களைப் பெற்றார். முதலாம் நாள் ஆட்டநேர முடிவில் 91 பந்துப் பரிமாற்றங்களை எதிர்கொண்டிருந்த தென்னாபிரிக்க அணி 5 இலக்குகளை இழந்து 268 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. டி கொக் 17 ஓட்டங்களுடனும் ஸ்ரெய்ன் ஓட்டமெதனையும் பெறாமலும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர்.

பந்து வீச்சில் சுரங்க லக்மல், தில்ருவான் பெரேரா ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும், ரங்கண ஹேரத் ஒரு இலக்கையும் கைப் பற்றினர். போட்டியின் இரண் டாம் நாள் ஆட்டம் இன்று தொடரும்.



## மெஸ்ஸிக்கு தங்கப் பந்தா?

ஆர்ஜென்ரீனா உதைபந்தாட்ட அணியின் நட்சத்திர வீரர் லியோனல் மெஸ்ஸி தங்கப் பந்து விருதைப் பெற்றமை தனக்கு ஆச்சரியமளிப்பதாக சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் செப் பிளாட்டர் தெரிவித்துள்ளார்.

போட்டிகளின் சிறந்த வீரருக்கான தங்கப் பந்து விருதுக்கு மெஸ்ஸியின் பெயர் அறிவிக்கப்பட்டபோது தனக்கு ஆச்சரியமாக இருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்

ஜேர்மன் மற்றும் ஆர்ஜென்ரீனாவுக்கு இடையிலான உலகக் கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் மெஸ்ஸி கோல் எதனையும் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (த)

# யாழ். பல்கலை 3 ஆம் இடம்



கொழும்பு, ஜூலை 16

இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட வீதி ஓட்டப் போட்டியில் யாழ். பல்கலைக் கழக அணி முதல் முறையாகப் பங்குபற்றி 3 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கிடையிலான வீதி ஓட்டப் போட்டி கடந்த 13ஆம் திகதி தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்டது.

இந்தப் போட்டியில் 11 பல்கலைக்கழகங்கள் பங்குபற்றியிருந்தன. இதில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அணி முதலாம் இடத்தையும், பேராதனைப் பல்கலைக்கழக அணி 2ஆம் இடத்தையும், யாழ். பல்கலைக்கழக அணி 3ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

யாழ். பல்கலைக்கழக வீதிஓட்ட அணியின் தலைவராக எஸ். யோகராஜ் என்பவரும், உபதலைவராக ஏ. ஜே. எட்வின் ஜோசப் என்பவரும், பயிற்றுநராக செல்வி. இ. அருளம்பலமும், முகாமையாளராக திருமதி. சி. சசிகரனும் செயற்பட்டனர். (த-86-23)

## ஊரெழு றோயல் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 17

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107 ஆவது அண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகத்துடன் இணைந்து யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பகல் இரவு ஆட்டங்களாக இடம்பெற்றுவருகின்றன.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதிக் கொண்டது. இரண்டு அணியினரும் தலா 2 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஊரெழு றோயல்விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலைமகள் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(த-23)

## அரியாலை ஐக்கியம் றோயல் ஆட்டங்களில் அசத்தின

அரியாலை சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்கும் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 6:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணிக்கும் ஆனைக்கோட்டை கலை ஒளி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)


## கண்ணீர் அஞ்சலி

எமது கழக ஆதரவாளர்களான
சுஜிகரன், றஜிகரன்
அவர்களின் அன்புத் தாய்

திருமதி **பத்மராணி (ராணி) செல்வவிநாயகமூர்த்தி**



அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும்**

**சம்பியன் லேன்.** (சி/15423) (10) **கொக்குவில் கிழக்கு.**

## மரண அறிவித்தல்



**நடராசா நியூட்டன் (குமரன்)**

அளவெட்டி கிழக்கு, கும்பலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா நியூட்டன் (குமரன்) நேற்று முன்தினம் (15.07.2014) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா-நாகம்மா தம்பதியரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்ற செல்லையா-நாகேஸ்வரி தம்பதியரின் மருகனும், ராதிகாவின் பாசமிகு கணவரும், துஷாந்தின் அன்பு தகப்பனும், மாலா, ரகு, உமா, ரவி, ஜீவன், வகிலா, ஜெனோ, மஜிந்தன், சுயா, மயூரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், யோகராசா சுஜி, சாந்தன் தயா, சுபாயினி, தவராசா சர்மிளா, கண்ணன் வில்வநாயகி, செல்வநாயகி, யோகம் கிளியன், அருமைத்துரை தவநேஸ் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2014) மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(50034)(10)

## மரண அறிவித்தல்

**வயித்தி சின்னத்தம்பி (பெற்றோல்)**



கைதடி மத்தி குமரநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வயித்தி சின்னத்தம்பி (பெற்றோல்) நேற்று (16.07.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வயித்தி-இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், சிவமணியின் அன்புக் கணவரும், மாணிக்கம்-இலட்சுமி தம்பதியரின் மருமகனும், சிவரஞ்சன், தயாபரன் (இலண்டன்), பிரதீபன் (சுவிஸ்), சிவகஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பாக்கியம், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சின்னத்துரை, கணேசு, காலஞ்சென்ற நாகம்மா ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் சின்னம்மா, தெய்வானை, கிருஸ்ணன் (கார்), காலஞ்சென்றவர்களான நாகம்மா, வடிவேலு மற்றும் செல்லம்மா ஆகியோரின் மைத்துனரும், விஸ்னுதேவி, சிந்துஜா, நிறோஜா ஆகியோரின் அன்பு மாமனும், றஜிதன், றஜிதா, தர்மிகா, ரோபிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.07.2014) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஊத்தல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கைதடி மத்தி, குமரநகர், கைதடி**
**தொ.பே: 077 418 7048** (C/15422)(10)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## ACTED

## VACANCY ANNOUNCEMENT

**ACTED (Agency for Technical Cooperation and Development)** is a non-governmental organization created in 1993. Independent, private and not-for-profit, **ACTED** is looking for professionally confident, self-motivated, experienced and committed team player to fill the vacant positions in Area Office.

| EMP 222 | CSO Resource CentreAssistant– Killinochchi | 01 Position |
|---|---|---|
| Job Description / Duties and Responsibilities | 1. **1. Functioning of the Resource Centre**<br>1. Assist the RC Coordinator in the development of business plan for the CSO Resource Centre<br>2. Supervision of the day-to-day use of theRC<br>3. Guidance / advice to CSOs members on the RC services<br>4. To make theRCattractive and accessible to CSOs<br>**2. Support tasks**<br>5. Maintain the Bank accounts for the resource centre, and overall record keeping of resource centre's each activity takes place for further references under finance.<br>6. Maintain all types of financial procedures related to the resource centre with the ACTED financial process and accountable for the financial part in the resource centre.<br>7. Propose new services to be provided by CSO RC according to CSOs needs and priorities evolution.<br>8. Ensure the attendance is maintained and support documents are updated, and the involvements of casual contracts are taken place on time.<br>9. Follow the Logistic process in the event of offering various services as identified through the activities.<br>**3. Reporting, communication**<br>10. Record keeping of resource centre's for each activity taking place for further references.<br>11. Develop and maintain RC database<br>**4. Relationships**<br>12. Work under the direct supervision of the RC Coordinator<br>**5. Others**<br>13. Adhere to HAP standards as set by ACTED<br>14. Any other task as assigned by the line manager | |
| Qualifications Required | • GCE A/L with distinction for accounts<br>• Working knowledge with more than three years experiences in the areas of Administration / Logistics and Finance.<br>• Marketing Knowledge will be an added advantage.<br>• Proven experience of working independently through remote management;<br>• Experience working / living in a physically challenging environment.<br>• Excellent spoken and written English and Tamil, Sinhala will be an advantage;<br>• Being a resident of Vanni and good knowledge about the locations in Killinochchi / Mullaitivu Districts will be an advantage;<br>• Valid Motorbike license is essential by the time of the start of service | |
| Application Procedure | • Applications should include a cover letter, a detailed CV giving three referees, copies of academic certificates and a day telephone contact.<br>• It is **Important** the Subject row of the E mail that you send appear as,<br>○ **EMP 222 – CSO Resource CentreAssistant – Killinochchi**<br>• The information you provide in your application must be clear and concise as it will be the basis for the selection of applicants for further assessment / interview.<br>• Applications should be sent to: killinochchi.finance@acted.org<br>• Last Date to submit applications will be**22nd July 2014**<br>• Only short listed candidates will be contacted.<br>• ACTED reserves the right to fill the position before the last day of application | |

(41322)(10)

## சூழலைப் பேணாத மூவருக்கு எதிராக வழக்கு

தென்மராட்சி, ஜூலை 17

சுகாதார அமைச்சின் அறிவிப்பின் பிரகாரம் கடந்த வாரம் சாவகச்சேரி சுகாதார வைத் திய அதிகாரி பிரிவால் நடத்தப்பட்ட டெங்கு கட்டுப் பாட்டு வார நடவடிக்கைகளில் டெங்கு நுளம்பை உற்பத்தி செய்யும் நிலையில் தமது சுற்றாடலை வைத்திருந்த மூவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

குறித்த வாரத்தில் கொடிகாமம், வரணி, கைதடி, மந்துவில், மட்டுவில், சாவகச்சேரி நகரம், மீசாலை ஆகிய பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் சுமார் 4 ஆயிரம் இடங்கள் பிரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

குடியிருப்புகள், பாடசாலைகள், வணிக நிலை யங்கள், திணைக்கள அலுவலகங்கள், ஆல யங்கள், பொது அமைப்புகளின் கட்டடங்கள், தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் பரி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. (வ-9)

## ஆடிக் கூழ் காய்ச்சும் நிகழ்வு

ப்ருந்தகானலய மன்றத்தினால் நடத்தப்படும் ஆடிப்பிறப்பு விழா இன்று மாவைக்கந்தன் ஆலய கிழக்கு வாசலில் பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறவுள்ளது. இந்த விழா வலி.வடக்குப் பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

◆ ◆ ◆

தெல்லிப்பழை தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு ஆடிப் பிறப்பு நன்னாளில் ஆனந்த ஆடிக் கூழ் காய்ச்சும் நிகழ்வு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ள மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. மறைந்து செல் லும் தமிழ்ப் பாரம்பரியங்களை கட்டி வளர்க்கும் வகையில் உருவாக் கப்பட்ட தெல்லிப்பழை தமிழ்ச் சங்கம் இதனை வளர்த்தெடுக்கும் வகை யில் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (க-86)

◆ ◆ ◆

தென்மராட்சிப் பிரதேச அரச திணைக்கள அலுவலகங்களில் இன்று ஆடிப் பிறப்பை கொண்டாடும் விதத்தில் ஆடிக் கூழ் காய்ச்சி வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சாவகச்சேரி மருத்துவமனையில் காலை 9 மணிக்கும், தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்தில் பிற்பகல் 2 மணிக்கும் ஆடிக் கூழ் காய்ச்சி அனைவருக்கும் பகிர்ந்து குடிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் அரச அலுவலகங்களில் தமிழர் பாரம்பரிய நிகழ் வான ஆடிப் பிறப்பு தினத்தில் ஆடிக் கூழ் காய்ச்சி கொண்டாடுவது குறித்து மக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர். (வ-9)

## குருதிக் கொடை

அளவெட்டி, ஜூலை 17

சுன்னாகம், ஹற்றன் நஷனல் வங்கியின் 11ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன் னிட்டு வங்கியில் பணியாற்றும் பணியா ளர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட குருதிக் கொடை நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கியின் நட மாடும் சேவைப் பிரிவு குருதியைச் சேக ரித்துள்ளது. இதில் 18 பேர் (பணியாளர்கள்) குருதிக் கொடையில் ஈடுபட்டதாகத் தெல்லிப்பழை இரத்த வங்கியினர் அறி வித்துள்ளனர். (க-36)

## நாடக ஆற்றுகை செயலமர்வு

சங்கானையில் இயங் கும் Butterfly International School ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலையில் கல்வி கற்கும் சிறார்களுக்கு நாட கம் நடிக்கும் திறனை வளர்க்கும் நோக்குடன் நாடக அற்றுகை செயல மர்வொன்று இன்று வியா ழக்கிழமை நாடகத்துறை யில் தேர்ச்சி பெற்ற வள வாளர்களால் நடத்தப் படவுள்ளது. (க)

HNB அடகுப் பொருள்கள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி

யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, சுன்னாகம், மானிப்பாய், கைதடி, வேலணை, திருநெல்வேலி, சங்கானை, கிளிநொச்சி வடக்கு, கிளிநொச்சி தெற்கு, அச்சுவேலி, கொடிகாமம், முல்லைத்தீவு, முள்ளியவளை, மல்லாவி, நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய கிளைகளில் 30.06.2013இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவண செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 21.07.2014 தொடக்கம் 30.07.2014 (திங்கள் - புதன்) வரை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 06.00 மணி வரை இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ்.கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

(சி15417)
(12.3.6)

- ஹற்றன் நஷனல் வங்கி -

## மூக்குக் கண்ணாடியை எடுத்துச் சென்றோர் ஒப்படைக்குமாறு அறிவுறுத்து

தென்மராட்சி, ஜூலை 17

சாவகச்சேரி மருத்துவமனை வளாகத்தில் பணியாளர் ஒருவரின் மூக்குக் கண்ணாடி தவறுதலாக எடுத்துச் செல்லப்பட்டு விட்டது. இவ்வாறு தவறுதலாக எடுத்துச் சென்றவர்கள் ஒப்படைக்குமாறு மருத்துவமனை நிர்வாகம் அறிவித்துள்ளது. (வ-9)

வேலையாள்கள் தேவை

நெல்லியடியில் இயங்கும் புத்தகக் கடைக்கு ரைப்பிங் தெரிந்த பெண்பிள்ளை தேவை.

தொடர்பு: 077 599 1949 (50024) (7.6.3)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கணபதி வல்லிபுரம்

(சாத்திரியார் நடராசா)

தோற்றம்
21.06.1939

மறைவு
17.07.2013

உயிருக்கு உயிராய் இருந்து
எமைக்காத்த எமது தெய்வமே!
ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம்

கடந்த 17.07.2013 சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் **கணபதி வல்லிபுரம்** அவர்களின் முதலாவது ஆண்டு நினைவுப்பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று (17.07.2014) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

183, திருமகள் வீதி,
அரியாலை.

குடும்பத்தினர்.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
வைத்திலிங்கம்
இலட்சுமணன்
(பனங்கட்டி)

தோற்றம்
28.07.1939

மறைவு
17.07.2011

ஆண்டவன் தன்னோடு அழைத்து
ஆண்டுகள் மூன்று ஆனதே ஐயா!
நீங்காத நினைவுகள் நெஞ்சில்
நிலைத்திருக்கும் வரை
நேச நினைவும் பாசப்பிணைப்பும்
என்றென்றும் அகலாது ஐயா!
எங்கள் வாழ்வை உயர்த்தி
நிறைவான வாழ்வு வாழ்ந்தீரே ஐயா!
உங்கள் ஆத்மசாந்திக்காக
எல்லாம்வல்ல இறைவனை
என்றென்றும் வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கோயில் வீதி, மல்லாகம். குடும்பத்தினர்.

(49949)(7.6.3)

## இரத்த தான முகாம்

கொழும்பு, ஜூலை 17
களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் நேற்று இரத்ததான முகாம் ஒன்று நடத்தப் பட்டது.
மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இயங்கும் இரத்த வங்கிப் பிரிவு களுவாஞ்சிக்குடி பொலிஸாரிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த இரத்த தான முகாம் ஏற்பாடு செய்யப் பட்டது என்று களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி கே.எச்.சுஜித் பிரியந்த கூறினார்.
இந்த இரத்ததான முகாமில் 50க்கும் மேற்பட்ட பொலிஸார் இரத்ததானம் வழங்கினர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
இதன்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இயங்கும் இரத்த வங்கிப் பிரிவால் இரத்தம் சேகரிக்கப் பட்டது. (ற)



கிழக்கு மாகாணத்தில் தற்போது கடும் உஷ்ணமும், அனல் வெப்பக் காற்றும் வாட்டி வதைக்கின்றன. கடும் உஷ்ணம் காரணமாக விலங்குகள் நீர்நிலைகளைத் தேடிச் சென்று அவற்றுக்குள் மூழ்கி எழுந்து உஷ்ணத்தை குறைத்துக் கொள்ள முயற்சிக்கின்றன. (ற)

# நாளொன்றுக்கு நால்வர் தற்கொலைக்கு முயற்சி

### தனியார் நிதி நிறுவனங்களின் கடனே காரணம் என குற்றஞ்சாட்டுகிறார் திருகோணமலை நகரசபை உறுப்பினர்

திருகோணமலை, ஜூலை 17
தனியார் நிதி நிறுவனங்கள் அதிக வட்டிக்கு வழங்கும் நுண் கடன் திட்டம் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு மூவர் அல்லது நால்வர் தற்கொலை முயற்சியில் ஈடுபடும்நிலைமை ஏற்பட்டுள்ளது என்று குற்றஞ் சாட்டியுள்ளார் திருகோண மலை நகரசபை உறுப்பினர் சி.நந்தகுமார் இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,
"திருகோணமலை மாவட்டத்தில் பல்வேறு தனியார் நிதி நிறுவனங்கள் நுண்கடன் திட்டத்தின் அடிப்படையில் விளிம்பு நிலை மக்களுக்கு கூடிய வட்டியில் கடன் வழங்குகின்றன.
இந்த வட்டியைச் செலுத்த முடி யாத ஏழை விவசாயிகள், மீனவர்கள் போன்றோர் தங்களது தொழில் நடைபெறாத காலங்களில் மேற்படி நிதி நிறுவனங்களை நாடி கடன் பெற்று வாழ்க்கையைக் கொண்டு செல்கின்றனர்.
இந்த கடன்களுக்கான வட்டியை மீளச்செலுத்த முடியாத நிலையில் குடும்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பிரச்சினைகள் ஏற்பட்டு விரக்தியில் தற்கொலை செய்யும் நிலைக்கு ஆளாகின்றனர்.
திருகோணமலை மாவட்டத்தில் நாளொன்றுக்கு மூவர் அல்லது நால்வர் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர் என்று திருகோணமலை பொது வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.
இது அபாயகரமான சமூக குறிகாட்டியாகும். நுண் கடனை வழங்கும் நிதி நிறுவ னங்கள் கடனை வழங்குவது உயர் வசதி படைத்தவர்களுக்கோ, சட்டத்தரணிகளுக்கோ அல்லது வைத்தியர்களுக்கோ அல்ல. சாதாரண கூலித் தொழிலாளர்களுக்கே அவர்கள் கடனை வழங்குகிறார்கள். இந்தத் தொழிலாளர்கள், கடனையும் அதற்கான வட்டியையும் செலுத்த முடியாத நிலை ஏற்படும்போது இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்"- என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.
(ற)

## வழிகாட்டல் கருத்தரங்கு இன்று

களுவாஞ்சிக்குடி, ஜூலை 17
மட்டக்களப்பு - தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய பரிபாலன சபையின் அனுசரணையோடு பட்டிப்பளைப் பிரதேச ஒளிக்கல்லூரி அமைப்பு 2014 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்க ளுக்கு இலவச பரீட்சை வழி காட்டல் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளது.
இந்த இலவச பரீட்சை வழி காட்டல் கருத்தரங்கு நேற்று புதன்கிழமை தொடக்கம் நாளை 18 ஆம் திகதிவரை காலை 9 மணி முதல் நடைபெறுகிறது என்றும், தமிழ், இந்து நாகரிகம், நாடகமும் அரங்கியலும், விவசாயம், சித்திரம், அளவையியல், அரச றிவியல், ஆகிய பாடங்களுக்கு உரிய கருத்தரங்குகள் வழங் கப்படுகிறது என்றும் அறிவிக் கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### சின்னப்பு நவரத்தினம் (ராசா)



இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ராசா என அன்பாக அழைக்கப்படும் சின்னப்பு நவரத்தினம் (அரசினர் வைத்தியசாலை, கோப்பாய்) நேற்று (16.07.2014) புதன் கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும் சூரியதாஸ், சுமதி, சந்திரதாஸ், இந்திரதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் நேசரத்தினம், காலஞ்சென்ற புலேந்திரன் மற்றும் நல்லம்மா, காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் கணேஸ் காலஞ்சென்ற இலங்கைநாதன் மற்றும் பொன்மலர் ஆகியோரின் அன்பு சகோதரனும், நல்லையா, செல்லையா, கந்தசாமி, ஜெயலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் தர்மேந்தினி, சுபாஜினி, குனாநிதி, கௌரி ஆகியோரின் அருமை மாமனாரும், லோஜன், பிரியங்கா, சாளினி, ஆதித்தன், முகேஸ், தர்சனா, டியூக்ஷியாம், சமன்ஷியாருக் ஆகியோரின் பாசமான பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.07.2014) வியாழக் கிழமை பி.ப. 3 மணிக்கு இல.19/1, ஈச்சமோட்டை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொழும்புத்துறை துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*19/1, ஈச்சமோட்டை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.*

தகவல்: **மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**


## ஆள் தேவை

கணினி ரைப்செற்றிங், போட்டோக்கொப்பி வேலை தெரிந்த பெண் பிள்ளைகள்,
டேவின்சன் ஓவ்செற் மெசின் ஓடத் தெரிந்தவர்கள் பகுதி நேர வேலைக்கு (ஆண்கள்) தேவை.
071 212 3633
அபி பிரிண்டர்ஸ் நல்லூர். (50031) (10)

## கமநல அபிவிருத்தி கட்டடத்துக்கு அடிக்கல்

களுவாஞ்சிக்குடி, ஜூலை 17
மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பிரதேச கம நல அபிவிருத்தித் திணைக்களக் காரியாலயக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்தக் கட்டடம் 90 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.
கமநல திணைக்களத்தின் மட் டக்களப்பு மாவட்ட உதவி ஆணையாளர் பொறியியலாளர் என். சிவலிங்கத்தின் தலை மையில் களுவாஞ்சிக்குடி கடற்கரை வீதியில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மீள்குடியேற் றப் பிரதியமைச்சர் முரளிதரன், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் எம். கோபாலரெத்தினம், களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரி கே.எச். சுஜித் பிரியந்த, மீள்குடியேற்றப் பிரதியமைச்சரின் இணைப்புச் செயலாளர் பொன். ரவீந்திரன், களுவாஞ்சிக்குடி பிரதேச கம நல அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் செ.பேரின்பம், களுவாஞ்சிக் குடி கிராமத் தலைவர் அ.கந்தவேள் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
(ற)

## காணவில்லை



கரியாலை, நாகபடுவான், முழங்காவிலைச் சேர்ந்த தாமோதரம் பிள்ளை பவளம்மா (வயது 71) என்பவரை கடந்த 09.07.2014 முதல் காணவில்லை. கண்டவர்கள் கீழ் உள்ள தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

T.P: 077 850 7197, 077 218 9581

தகவல்: மகன்-அருள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




### செல்வநாயகம் பத்மநாதன்
SLPS - I

எமது கல்லூரியின் அதிபர் செ.பத்மநாதன் அவர்கள் இலங்கை அதிபர் சேவையின் தரம் I இற்கு 2008.06.01 இல் இலிருந்து பதவி உயர்வு பெற்றமையையிட்டு எமது இதயபூர்வமான வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரிக் கழகத்தினர்
யா/அத்தியார் இந்துக் கல்லூரி

## மரண அறிவித்தல்

### கதிராசிப்பிள்ளை அப்புக்குட்டி



மந்துவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட கதிராசிப்பிள்ளை அப்புக்குட்டி நேற்று (16.07.2014) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவரான சோழங்கர் அப்புக்குட்டியின் அன்பு மனைவியும், மகேஸ்வரி, செல்லாச்சி, பாக்கியம், காலஞ்சென்றவர்களான, முத்துப்பிள்ளை, இராசதுரை, நாகராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும், திலகவதி, அருந்தவம், காலஞ்சென்றவர்களான கதர்காமத்தையன், சங்கரலிங்கம், கந்தையா ஆகியோரின் மாமியாரும், கதாயுதன் (கொழும்பு), றஜனிகாந்த (நீதிமன்றம் - சாகவகச்சேரி), சுசீலா (தாதி - யாழ். போதனா வைத்தியசாலை), சசிலியா (யாழ். மாவட்ட செயலகம்), நந்தகோபன் (ஹற்றன் நஷனல் வங்கி - கிளிநொச்சி), சாருலதா, துஷ்யந்தி (பிரான்ஸ்), சுரேஸ் (லண்டன்), பகிதாஸ் (பிரான்ஸ்), றஜனிகாந், சிறிகாந், ரவிகாந்த, சிறிதேவி, சசிகாந்த், சிவப்பிரியா, விஜயகாந் (மலேசியா), சிறிவித்தியா, துஷ்யந்தன், துஷ்யந்தி, துஷ்யந்தராசா, துஷ்யந்தகுமார், துஷ்யந்த வேணி, துஷ்யந்தபவன், துஷ்யந்தகுமாரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அக்ஷயா, சஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2014) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மீசாலை வடக்கு, மீசாலை**

**தகவல்**: குடும்பத்தினர்.

உதயன்
17.07.2014

# மக்கள் தேவையறிந்து உள்ளூராட்சி மன்றங்கள் வினைத்திறனாக சேவையை வழங்க வேண்டும்

## வடக்கு முதலமைச்சர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 17

பல்வேறுபட்ட மனக்காயங்களுக்குள்ளான எமது மக்கள் சுயமாக வளம்பெறவும், மனித உரிமையைப் பேணவும் வழிகாட்ட வேண்டியது உள்ளூராட்சி மன்றத் தலைவர்களின் பொறுப்பு. நாங்கள் ஒரு புதிய பாதையில் உள்நுழைந்துள்ளோம். வன்முறையை நிறுத்திவிட்டு வருங்காலத்தை நோக்கி வளமான மனித மேம்பாட்டுக் கொள்கைகளை முன்வைத்து முன்னேற வேண்டும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

பொதுநலவாய உள்ளூராட்சி மன்றங்களின் இணையத்தின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி மன்றங்களின் தேசியக் கொள்கை தொடர்பான மாகாணக் கலந்துரையாடல் ரில்கோ விடுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போரினால் பாதிக்கப்பட்ட காலத்தில் ஒரு வித்தியாசமான கலாசாரம் எம்மைப் பீடித்திருந்தது. எமது நலன்களுக்கு ஏற்றவாறு சட்ட ஏற்பாடுகளை மாற்றியமைத்து, நல்லாட்சி விழுமியங்களை மறந்து கடமையாற்ற வேண்டிய அந்தக் கலாசாரம் போரின் பின்னரும் தொடர வேண்டிய அவசியமில்லை. எமது நடவடிக்கைகள் இன்றைய காலகட்டத்தில் கட்டுக்கோப்புக்குள் வர வேண்டும்.

இங்குள்ள பிரதேசசபைத் தவிசாளர்கள் அடிமட்ட ஜனநாயக பாரம்பரியத்தின் மூலம் - தேர்தல் செயற்பாட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். நீங்கள் உங்கள் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி இங்கு வந்துள்ளீர்கள். நீங்கள் உங்கள் மக்களின் உணர்வுகளை, அபிலாஷைகளை, ஆதங்கங்களை, எதிர்பார்ப்புக்களை நன்குணர்ந்தவர்களாக இருப்பீர்கள் என்பது எமது நம்பிக்கை. எனவே அவர்களது தேவைகளை நிறைவேற்றவும் சிறந்த சேவைகளை அவர்களுக்கு வழங்கவும் நீங்கள் கடப்பாடு உடையவர்களாக இருக்கின்றீர்கள்.

எனவே சமூக நீதியை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பும் கடமையும் ஒவ்வொரு தவிசாளருக்கும், சபை அங்கத்தவருக்கும் இருக்கின்றது. சகல மக்களையும் சமமாகவும், சமானமாகவும் பேணிவருதல் உங்களைச் சார்ந்த ஒரு கடப்பாடு. இன்று சாதி அடிப்படையிலும் பிராந்திய அடிப்படையிலும் சமூக நீதிக்கு ஒவ்வாத பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம்.

உள்ளூராட்சியில் தேவையான நிதி மூலங்களைத் தேடிக் கண்டுபிடித்து நிதியை முறையாகக் காப்பதற்கும் அதன் மூலமாக அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்குமுரிய வழி வகைகளைக் கண்டறிய வேண்டியதும் தவிசாளர்களாகிய உங்கள் ஒவ்வொருவரையுஞ் சார்ந்த கடப்பாடாகும். அபிவிருத்திக்குச் செலவிடப்படும்; ஒவ்வொரு ரூபா பணமும் மக்கள் செலுத்திய வரி அல்லது மக்கள் திருப்பிக் கட்ட வேண்டிய கடன் என்பதை மனதில் நிறுத்துவதுடன் ஒவ்வொரு ரூபாவும் வழங்கக் கூடிய் அதி உச்சப் பயனை மக்கள் பெறும் வண்ணம் ஊழலற்றதான நல்லாட்சியை வழங்கப் பாடுபடுங்கள். - என்றார். (ஐ-5)

## தொடர்ச்சிகள்

### காணாமற்

பதன் அடிப்படையில் ஆணைக்குழு மேலும் 6 மாத கால பதவி நீடிப்புக்கு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ற-5)

### 11 வயதான

சிப்பாய் நேற்று உடனடியாகக் கைது செய்யப்படவில்லை என்றும் விரைவில் அவர் கைது செய்யப்படுவார் என்றும் பேச்சாளர் கூறினார்.

இந்த முறைப்பாடு குறித்துத் தாமும் அறிந்துள்ளனர் என்று கடற்படையின் பேச்சாளர் கொமடோர் கோசல வர்ண குலசூரிய தெரிவித்தார்.

தரம் ஆறில் கல்வி கற்கும் குறித்த சிறுமி கடந்த 12 நாள்களாகப் பாடசாலைக்கு சமுகமளிக்கவில்லை. இது குறித்து பாடசாலை நிர்வாகத்தால் காரைநகர் பிரதேச செயலகத்திற்கும் சிறுமியின் பெற்றோருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. அதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த பெற்றோர், கடந்த 12 நாள்களாகத் தமது மகள் காலையில் சீருடையுடன் பாடசாலைக்குப் புறப்பட்டுச் சென்று பிற்பகலில் வீடு திரும்புகிறாள் என்று கூறினர்.

இதையடுத்து, பாடசாலை முடியும் நேரத்தில் வீடு திரும்பிய சிறுமியிடம் நேற்றுமுன்தினம் அரச அதிகாரிகள் விசாரித்தனர். அப்போதே உண்மை தெரிய வந்தது. உடனடியாகச் சிறுமி மருத்துவ பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று மருத்துவ சோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டது என 'உதயன்' அறிந்தது. தொடர்ச்சியாக 11 நாள்களாக சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் என்று சந்தேகிக்கப்படுகிறது.

நீலநிறச் சீருடை அணிந்த கடற்படைச் சிப்பாயே தன்னை வன்கொடுமைக்கு உள்ளாக்கியவர் என்று சிறுமி வாக்குமூலம் அளித்துள்ளார் என்றும் தெரிகிறது.

குறித்த சிறுமியின் 9 வயதான சகோதரியையும் வன்கொடுமைக்கு உள்ளாக்க கடற்படைச் சிப்பாய் ஒருவர் முயன்றார் என்று உறவினர்கள் இப்போது கூறுகின்றனர். சொக்லேட், பிஸ்கெட்டுக்களை வாங்கி வைத்துக் கொண்டு அந்தச் சிறுமியையும் தன்னிடம் வருமாறு சிப்பாய் அழைத்தார் என்றும் ஆனால் அவர் வீட்டுக்கு ஓடி வந்துவிட்டார் என்றும் அவர்கள் கூறினர்.

சிறுமியின் வீட்டில் இருந்து 300 மீற்றர்கள் தூரத்தில் உள்ள கடற்படைக் காவலரணுக்குச் சமீபமாக இந்தச்சம்பவம் இடம்பெற்றிருக் கலாம் என்று கருதப்படுகிறது.

சிறுமியிடம் நடத்தப்பட்ட விசாரணையிலிருந்து மேலும் ஒரு சிறுமி பாலியல் ரீதியாகக் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகிக்கிறார்கள். இதனால் அந்தச் சிறுமியும் மருத்துவ சோதனைகளுக்காக நேற்று யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு நேற்றுப் பிற்பகல் நேரில் சென்ற மாகாண சபை உறுப்பினர்களான கஜதீபன் மற்றும் அனந்தி சசிதரன் ஆகியோர் சிறுமியின் உறவினர்களிடம் இருந்து விவரங்களைக் கேட்டறிந்தனர். கடற்படையினரே சிறுமியை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கினர் என்று உறவினர்கள் தம்மிடம் தெரிவித்தனர் என்று கஜதீபன் உதயன் பத்திரிகையிடம் கூறினார். (உ-5)

### அணி திரண்டு

இந்நிலையில், முதல்கட்டமாக புலம்பெயர் தமிழர்கள் வாழும் நாடுகளில் தனது விசாரணைகளை ஐ.நா. விசாரணைக்குழு ஆரம்பித்துள்ளது.

இதுகுறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் ஐ.நா. விசாரணைக்குழு தனது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று தகவல் கிடைத்துள்ளது. இதன் பின்னர் புலம்பெயர் தமிழர்கள் வாழும் நாடுகளில் ஐ.நா. விசாரணைக்குழு அமர்வுகளை நடத்தி சாட்சியங்களைப் பதியவுள்ளது. இதனை நாம் வரவேற்கின்றோம்.

எனவே, இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான முதற்படியாக ஐ.நா. விசாரணைக்குழு முன்னிலையில் புலம்பெயர் தமிழர்கள் அணி திரண்டு சாட்சியமளிக்க வேண்டும்.

அதேவேளை, இலங்கை மீது ஐ.நா. விசாரணையைக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்குப் புலம்பெயர் தமிழர்கள் முழு மூச்சாகச் செயற்பட்டார்கள் என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், இலங்கையில் வாழும் தமிழ் மக்களும் ஒருபோதும் மறக்க மாட்டார்கள்.

இறுதிப் போரில் பாதிக்கப்பட்ட அதிகமான தமிழ் மக்கள் ஆஸ்திரேலியா சென்று அங்கு தஞ்சமடைந்துள்ளனர். எனவே, அவர்களும் ஐ.நா. விசாரணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதேவேளை, ஐ.நா. விசாரணைக்குழு இலங்கை வர அரசு அனுமதி மறுத்துள்ள போதிலும் இங்குள்ள தமிழ் மக்கள் ஏதோவொரு வழியூடாகத் தமது சாட்சியங்களை விசாரணைக்குழுவுக்கு வழங்குவார்கள்" - என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-சி)

### மக்களின்

றியப்படக் கூடாது. பலவந்தமாக காணிகளை பறித்தெடுத்தால், அது நியாயமற்ற சூழலை ஏற்படுத்தும். அபிவிருத்தித் தேவைகளுக்காக காணிகளைப் பெறும் போது, பொருத்தமான சுவீகரிப்பு நடைமுறையொன்று நடைமுறைப்படுத்துவதை அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும்.

இரத்தினபுரியில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள, நெடுஞ்சாலை அபிவிருத்திக்கோ அல்லது வேறு திட்டங்களுக்கோ பலவந்தமாக காணிகள் பெறுவதை தவிர்க்க வேண்டும்"- அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வடக்கிலும் - கிழக்கிலும், தமிழ் மக்களின் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை இலங்கை அரசு பலவந்தமாகப் பறித்தெடுத்துள்ள நிலையிலேயே, தெற்கில் பலவந்தமாக காணிகளைப் பறிக்கக்கூடாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். (ற-5)

### நல்லிணக்க

கப்பட முடியாது. ஒவ்வொருவரும் அதனை உருவாக்க வேண்டும். எதிர்க்கட்சியினர், சிவில் சமூகத்தினர், மதத் தலைவர்கள் போன்றோர் இதில் முக்கியமானவர்கள். இவர்களின் முயற்சி ஊடாகவே சமாதானத்தை நிலைபெறச் செய்ய முடியும்.

போரின் பின்னர் உள்ளக ரீதியாக இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். முன்னாள் போராளிகள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இலங்கை பொருளாதார ரீதியாக முன்னேற்றமடைந்துள்ளது.

இலங்கை தென்னாசிய பிராந்தியத்தில் வெற்றிகரமாக வளர்ச்சியடைந்து வரும் நாடாக இருக்கிறது - என்றுள்ளது. (ஐ-5)

### தமிழக

இலங்கைக் கரைக்கு அழைத்து வராது நடுக்கலில் வைத்தே கடற்படையினர் விடுதலை செய்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை - இந்திய வெளிவிவகார அமைச்சர்கள் சந்தித்து பேசியதன் அடிப்படையில் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படாது நடுக் கடலில் வைத்தே திருப்பி அனுப்பப்பட்டனர் என்று தெரியவந்தது. (ஐ-14)

### மக்களின் எதிர்ப்

அதிகாரிகள் வந்தனர்.

மக்கள் எதிர்த்து அந்த அதிகாரிகளுடன் தர்க்கத்தில் ஈடுபட்டதால் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

இதேவேளை கடற்படை முகாமின் பின்பக்கமாக, அளவீட்டு நடவடிக்கைகளை நில அளவைத் திணைக்களத்தினர் முன்னெடுத்தபோது, அங்கு சென்ற வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், இது தனியார் காணி. அதை அளவீடுகளைச் செய்ய முடியாது என்று நில அளவையாளர்களுடன் முரண்பட்டார். எனினும் அதிகாரிகள் கடற் படை முகாமுக்குள் நின்றவாறே அந்தக் காணிகளையும் அளந் தனர்.

நிலஅளவை நடவடிக்கையை எதிர்ப்பதற்காக வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், துணைத் தவிசாளர் ச.சஞ்சீவன், உறுப்பினர்களான சி.ஹரிகரன், தங்கராசா ஆகியோர் அந்தப் பகுதிக்கு வருகை தந்திருந்தனர்.

இருப்பினும் கடற்படை முகாமுக்குள் வைத்தே அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையால் எந்தவொரு எதிர்ப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. (ஐ- 5)

### சிறில்

இலங்கை அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் அனுசரணையாளராகச் செயற்படுவதற்கு தென்னாபிரிக்கா சம்மதித்திருந்தது. அதனடிப்படையில் தென்னாபிரிக்காவின் துணை ஜனாதிபதியும், இலங்கைக்கான விசேட பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருந்த சிறில் ரமபோஷ இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். இரு நாள் பயணமாக இலங்கைக்கு வந்த அவர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், நீதியமைச்சர் ஹக்கீம், மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடன் சந்திப்புக்களை நடத்தியிருந்தார்.

அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையையும், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனையும் அவர் சந்தித்திருந்தார். இந்தச் சந்திப்புக்களின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தென்னாபிரிக்காவின் அனுசரணையை ஏற்பதற்கு சம்மதம் வெளியிட்டிருந்தது.

பல்வேறு சந்திப்புக்களை மேற்கொண்டு தென்னாபிரிக்கா திரும்பியுள்ள ரமபோஷ, தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூ மாவிடம் இலங்கைப் பயணம் தொடர்பான அறிக்கையை இன்னும் இரு வாரங்களில் கையளிக்கவுள்ளார். இந்த அறிக்கையின் அடிப்படையிலேயே தென்னாபிரிக்க அரசின் எதிர்கால நடவடிக்கைகள் அமையவுள்ளன.

இலங்கை அரசு தென்னாபிரிக்க அனுசரணையை விரும்பவில்லை என்பதும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்படும். அத்துடன் தென்னாபிரிக்காவின் அனுபவ பகிர்வு எப்படிப்பட்டதாக இலங்கைக்கு அமைய வேண்டும் என்பதும் அறிக்கையில் குறிப்பிடப்படும் என்று தென்னாபிரிக்க இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ற-5)

### இராணுவ

தற்கு வழி தேட வேண்டும். மாகாணசபை தேர்தல்களில் போட்டியிடுவோர் எந்தத் தகுதிகளும் இன்றி உள்நுழைய முற்படுகின்றனர். தேர்தல் ஆணையாளரும் பதுளை, மொனறாகலை மாவட்டங்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைத்துள்ளார். இது அந்த பகுதி மக்களின் ஜனநாயகத்தை மீறும் செயலாகும். ஊவா மாகாண சபையின் கீழ் வரும் பதுளை மாவட்டத்தில் சுமார் 8லட்சத்து 80 ஆயிரம் வாக்காளர்கள் உள்ளனர். இதேபோன்று மொனராகலை மாவட்டத்தில் சுமார் 4லட்சத்து 40 ஆயிரம் வாக்காளர்கள் உள்ளனர். ஆனால் தேர்தல் ஆணையாளர் பதுளை மாவட்டத்துக்கான மூன்று பிரதிநிதிகளை குறைத்து அவற்றை மொனராகலை மாவட்டத்துக்கு வழங்கும் முயற்சி ஒன்று நடைபெறுகிறது. இது எந்த வகையிலும் நியாயம் அற்றது.

மேல்மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் அநுர சேனநாயக்கவுக்கு தற்போது வயது 62. ஆனால் அவருக்கு மூன்றாவது தடவையாகவும் பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பதவி நீடிப்புக்களை வழங்க வேண்டாம் என்று உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தல் வழங்கி இருக்கின்றது. இந்த அறிவுறுத்தலை மீறியே அநுர சேனநாயக்கவுக்கு இந்த பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனால் பதவி உயர்வு பெற வேண்டிய பல சிரேஷ்ட அதிகாரிகள் அந்தப் பதவி உயர்வுகளைப் பெறாமலேயே ஓய்வு பெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

உச்ச நீதிமன்ற தீர்ப்புக்களையோ அதன் அறிவுறுத்தல்களையோ இந்த அரசு மதிப்பதில்லை என்பது உறுதியாகி உள்ளது.

நாட்டில் உள்ள 3500 பாடசாலைகளுக்கு நிரந்தரமான, தகுதியான அதிபர்கள் இல்லை என்று தெரியவந்துள்ளது. தகுதியானவர்களை அதிபர் பதவிகளுக்கு நியமிக்காமல் அரசியல் வாதிகளின் ஆதரவாளர்களை பதில் அதிபர்களாக நியமித்து பாடசாலைகள் நடத்தப்படுகின்றன. தங்களுக்கு ஆதரவாக இல்லாதவர்களை அடையாளம் கண்டு அவர்களை நீக்கிவிட்டு எப்படி அடுத்த தேர்தலில் வெற்றி பெறலாம் என்பது தான் திட்டம் - என்றார். (ஐ-10)

## வடமாகாண பாடசாலைகளில் ஆடிக் கூழ் காய்ச்சும் நிகழ்வு

கரணவாய், ஜூலை 17
தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாக்கும் வகையில் வடமாகாணத்திலுள்ள பாடசாலைகள் அனைத்திலும் ஆடிப்பிறப்புத் தினமான இன்று வியாழக்கிழமை ஆடிக்கூழ் காய்ச்சும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

வடமாகாணப் பாடசாலைகளில் ஆடிப்பிறப்பு தினத்தன்று ஆடிக்கூழ் காய்ச்சி மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுடன் பகிர்ந்து உண்ணுவதற்கு ஏற்ற ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்தல் விடுத்திருந்தார்.

இதனையடுத்து ஆடிக்கூழ் காய்ச்சும் நிகழ்வு பாடசாலைகளில் இன்று இடம்பெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை பாடசாலை அதிபர்கள் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை- தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் ஆடிக்கூழ் காய்ச்சும் நிகழ்வு சிறப்பாக இடம்பெறவுள்ளதுடன் தமிழரின் பாரம்பரியங்களை வெளிப்படுத்தும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (வ-108)



மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு திங்கட்கிழமை இலங்கைக்கு வருகை தந்த இந்திய விமானப்படைத் தளபதி எயார் சீஃப் மார்ஷல் அருப் ரஹாவை கட்டுநாயக்க விமான நிலையத்தில் இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் கோலித குணதிலக வரவேற்றார். இரு நாட்டு இராணுவ உறவை வலுப்படுத்தும் நோக்கில் இலங்கை வந்துள்ள இவர் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முப்படைத் தளபதிகளையும் சந்திக்கவுள்ளார்.

## சுகாதாரமற்ற வகையில் பாலைப்பழம் விற்பனை



குருநகர், ஜூலை 17
குருநகர் பொதுச் சந்தையில் பாலைப்பழம் விற்பனைக்கு வந்துள்ளது. ஒரு சுண்டு பழம் 30ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனை விற்பனை செய்யும்போது வியாபாரிகள் பழங்களை தமது கையினாலேயே அள்ளிப் போடுகின்றனர். அதனைச் சுகாதார முறைப்படி கரண்டியால் எடுத்தோ அல்லது கைக்கு பாதுகாப்பு உறைகளைப் பயன்படுத்தியோ எடுப்பதில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு பாதுகாப்பற்ற முறையில் விற்பனை செய்யப்படுவதால் நோய் பரவும் சந்தர்ப்பம் ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனவே பாதுகாப்பு முறை மூலம் பாலைப்பழத்தை விற்பனை செய்வதை உரிய சுகாதாரத் துறை அதிகாரிகள் கண்காணிக்க வேண்டியது அவசியம் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-51)

## வீடு புகுந்து திருட முயன்றவர் மடக்கிப் பிடிப்பு

பட்டப்பகலில் வீட்டினுள் புகுந்து பொருள்களைத் திருடிய நபரை அயலவர்கள் மடக்கிப் பிடித்த[illegible]. உதவிக்கு வந்த மேலும் நால்வர் தப்பியோடி விட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி பெரிய அரசடியில் இடம்பெற்றது. வீட்டுக்காரப் பெண்மணி பெரிய அரசடிச் சந்தியில் உள்ள கடைக்கு சென்றதை அவதானித்த திருடர்கள் வீட்டினுள் புகுந்து அங்கிருந்து நகைகள், பணம் உட்பட பெறுமதியான பொருள்களை எடுத்துக் கொண்டிருந்த வேளையில் வீட்டுக்காரப் பெண்மணி அங்கு சென்றதால் வீட்டுக் குள்ளிருந்த திருடர்கள் தப்பிடியோடிய போது வீட்டுக்காரப் பெண்மணி கூக்குரலிடவே அயலவர்கள் அங்கு திரண்டு வந்து தப்பியோட முயன்ற திருடர்களில் ஒருவரை மடக்கிப் பிடித்தனர். பிடிக்[illegible]பட்ட திருடன் முறையான [illegible]னிப்பின் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இதேவேளை தப்பியோடியோரில் மேலும் ஒருவரும் மக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (வ-9)

# சமுத்திர மற்றும் மீன்பிடித் தகவல் கேந்திரநிலையம் பேருவளையில்

கொழும்பு, ஜூலை 17
சமுத்திர மற்றும் மீன்பிடி தகவல் கேந்திரநிலையத்தை இன்று பேருவளைபிரதேசத்தில் மீன்பிடி மற்றும் நீர்வள அபிவிருத்தி அமைச்சர் ராஜித்த சேனாரத்ன திறந்து வைக்கவுள்ளார். தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரதிநிதித்துவ நிறுவனம் எனப் படும் நாரா நிறுவனத்தின் கீழ் புதிய கேந்திர நிலையம் இயங்கவுள்ளது.

இலங்கையின் சுற்றுப் புறத்தில் உள்ள கடல் எல்லைகள் தொடர்பான தகவல்கள்- இடர்கள்-காலநிலை விவரங்கள்- என்பவற்றை மிகத் துரிதமாக குறித்த கேந்திர நிலையத்தினூடாக மக்களால் பெற்றுக்கொடுக்க முடியும்.

நாரா நிறுவனத்தின் சமுத்திர விஞ்ஞான பிரிவு இந்தநிலையத்தை இயக்கவுள்ளது. 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி இடரில் ஏற்பட்ட உயிர் பொருள் சேதத்தை அடுத்து இவ்வாறான இடர்கள் தொடர்பில் முழு உலகிலும் அதிகமாகப் பேசப்பட்டது.

எனவே சுனாமி போன்ற இடர்களை முன்கூட்டித் தெரிந்து கொள்வதற்கும் உலக மக்களை இவ்வாறான இடர்கள் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்கும் சுனாமி தொடர்பாக ஆழ்கடல் மதிப்பீட்டு மற்றும் அறிவிக்கும் கருவி ARTd Deep Ocean Assessment and Reporting of Tsunami ஆழ்கடலின் மிக ஆழமான பகுதியில் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனூடாக ஆழ்கடலில் ஏற்படும் சிறியதொரு மாற்றத்தையும் அறிந்துகொள்ள முடியும். அவ்வாறான சுனாமி முன்னெச்சரிக்கை நிலையம் ஒன்றை கொழும்பு மட்டக்குளி பிரதேசத்தில் நாரா நிறுவனம் அமைத்துள்ளது.

இதனூடாக 24 மணித்தியாலமும் உலகின் அனைத்து இடங்களிலும் புவியதிர்வு- சுனாமி மற்றும் காலநிலை தொடர்பான விவரங்களை குறித்த நிறுவனங்களுக்கு புள்ளிவிவரத்துடன் பெற்றுக் கொடுக்க நாரா நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. பேருவளை பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள சமுத்திர மற்றும் மீன்பிடி தகவல்கேந்திர நிலையத்தினூடாகவும் 24 மணி நேரமும் தகவல்கள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

## சாவகச்சேரி நகர சபையின் உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வு

சாவகச்சேரி பிரதேச சபையின் இவ்வருட உள்ளூராட்சி வார இறுதி நாள்நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறும்.

பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும் சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.பி. எதிரிசிங்க, கொடிகாமம் வர்த்தக சங்கத்தலைவர் ம.சின்னத்துரை ஆகியோரும் கலந்து கொள்வர். உள்ளூராட்சி வாரத்தை யொட்டி நடத்தப்பட்ட போட்டி களில் வெற்றி பெற்றோருக் கான பரிசில் வழங்கலும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (வ-9)

# வெட்க உணர்வு அரசுக்கிருந்தால் ஹக்கீமை அமைச்சரவையிலிருந்து வெளியேற்றட்டும்

**ஊடகவியலாளர் மாநாட்டில் பொதுபலசேனா காட்டம்**

கொழும்பு, ஜூலை 17
அரசுக்கு வெட்க உணர்வு இருக்குமானால் ரவூப்ஹக்கீமை அமைச்சரவையிலிருந்துஉடனடியாகவெளியேற்ற வேண்டும் என்று பொதுபல சேனா தெரிவித்துள்ளது.

> காவியு டைய தரித்தோரை அரசு கட்டுப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் இஸ்லாமிய தீவிரவாதம் தலைதூக்கும் என்று வெளிநாட்டு ஊடகங் களுக்கு தெரிவித்துள்ளார்.

கொழும்பு கிருலப்பனையிலுள்ள பொதுபலசேனாவின் தலைமையகத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு உரையாற்றிய பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரர் மேலும்கூறியதாவது:- இலங்கையில் ஆயுதங்களுடனான முஸ்லிம் பயங்கரவாதமும்இஸ்லாமியதீவிரவாதமும் இயங்கி வருகின்றன. இதுதொடர்பில் அரசும் உளவுப் பிரிவினரும் கவனம் செலுத்த வேண்டும். இதனை சாட்சியங்களுடன் நிரூபிக்கத் தயாராகவுள்ளோம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை 'ராஜாசனத்தில்' அமர வைத்தது பௌத்த குருமாரும், சிங்கள பௌத்தர்களுமே ஆவர். இன்றுபௌத்த குருமாரையும்சிங்கள பௌத்தர்களையும் பயங்கரவாதிகளாக அமைச்சர் ஹக்கீம் உலகம் பூராகவும் பரப்புரை செய்கிறார். அது மட்டுமல்லாது ஐ.நா. பிரதி ஆணையாளர் நாயகம் உட்பட இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதர்களிடமும்நாட்டுக்கு எதிராக பௌத்த குருமாருக்கு, சிங்களவர்களுக்கு எதிராககருத்துக்களைக் கூறுகிறார். அறிக்கைகளை கையளிக்கின்றார். காவியுடை தரித்தோரை அரசு கட்டுப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் இஸ்லாமிய தீவிரவாதம் தலைதூக்கும் என்று வெளிநாட்டு ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

2003ஆம் ஆண்டு ஒலுவில் பிரகடனத்தை மறைந்த அஷ்ரப் வெளியிட்டு முஸ்லிம் களை ஒன்று சேர்ப்பதற்காக முஸ்லிம் காங்கிரஸை உரு வாக்கினார். இதனால் இனவாதம் தலை தூக்கியது. அதன் பின்னர் உண்மையைப் புரிந்து கொண்ட அஷ்ரப் தேசிய ஐக்கிய முன்னணியை உருவாக்கினார். ஆனால் இன்று ஹக்கீம் அரசுக்குள்ளேயே இருந்து கொண்டு முஸ்லிம்களை அச்சுறுத்தி அரசியல் செய்கின்றார். பணத்துக்காகவும் சுகபோக வாழ்வுக்காகவும் சொத்துக்களுக்காகவும் சோரம் போகிறவர்தான் ஹக்கீம்.

அத்துடன் [illegible]ாளிகாவத்தை உட்பட கி[illegible]கில் முஸ்லிம் வலயங்க[illegible]ா உருவாக்க முயற்சிக்கி[illegible]றார்.

உண்மையிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு பௌத்த குருமார், சிங்கள பௌத்தர்கள் மீது பாசம் இருக்குமானால் உலகம் முழுவதும் பௌத்தர்களை இழிவுபடுத்தும் ஹக்கீமை உடனடியாக அமைச்சரவையிலிருந்து வெளியேற்ற வேண்டும். இந்த அரசுக்கு வெட்கம் என்ற உணர்வு இருக்குமானால் இதனை உடனடியாக செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

இதேவேளை அங்கு டிலந்த பெரேரா நாட்டில் சட்டம் ஒழுங்கு இல்லை. இவ்வாறானதோர் நிலையில்ஹக்கீம் நீதியமைச்சராக பதவிவகிப்பது வெட்கம். ஆனால் அரசில் அமைச்சுப் பதவியை வகித்துக்கொண்டு கருத்துத் தெரிவித்தால்தான் உலகில் அதற்கு மதிப்பு கிடைக்கும் என்கிறார் ஹக்கீம். அரசுக்குள்ளிருந்து கொண்டு அமைச்சர் பதவியை முஸ்லிம்களுக்காக மட்டும் பயன்படுத்தும் ஹக்கீம் சட்டம் ஒழுங்கு நாட்டில் இல்லையென பாதுகாப்பு அமைச்சரான ஜனாதி பதியை விமர்சிக்கும் ஹக்கீமை நாட்டை காட்டிக் கொடுக்கும் அரபு சதிகாரர்களின் கையாளும் தேசத்துரோகி[illegible]ன ஹக்கீமை இதற்கு மேலும் [illegible]அமைச்சரவைக்குள் வைத்துக் கொள்ளக் கூடாது. உடனடியாக வெளியேற்ற வேண்டும். காவியுடை தரித்த பயங்கர வாதம் நாட்டுக்குள் உள்ளதாக அவர் விமர்சிக்கின்றார். ஆனால் நாட்டுக்குள் ஆயுதங் களுடனான முஸ்[illegible] பயங்கர வாதமும் இஸ்லா[illegible] தீவிர வாதமும் இயங்குவதை மூடி மறைக்கின்றார். இது தொடர்பாக உளவுப் பிரிவினரும் அரசும் கவனம் செலுத்த வேண்டும். இன்று உலகில் அனைத்து நாடுகளிலும் முஸ்லிம் பயங்கரவாதமும், இஸ்லாமிய தீவிரவாதமும் தலைவிரித்தாடுகின்றன. அது இலங்கைக்குள்ளும் வந்து விட்டது. ஆனால் ஹக்கீம் தமக்கு தெரியாதவர் போல் நடிக்கின்றார்.

அளுத்கமவில் பௌத்த மத குரு தாக்கப்பட்டதும் பௌத்தர்களுக்கு எதிரான நடவடிக்கைகளும் மறைக்கப்பட்டு முஸ்லிம்களின் பிரச்சினைகள் மட்டுமே பூதாகாரமாக்கப்பட்டன. ஊடகங்களும் இதன் போது நடுநிலை வகிக்கவில்லை. 2006ஆம் ஆண்டிலேயே முஸ்லிம் ஆயுதம் தாங்கிய பயங்கரவாதம் தலைதூக்கியது. அந்த வருடத்தில் காத்தான் குடியில் முஸ்லிம் மதக் குழுவினரிடையே ஏற்பட்ட மோதலின் போது ஆயுதங்கள் பாவிக்கப்பட்டு 6 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. அன்றே ஆயு தங்கள் இருந்துள்ளன. இன்று 2014ஆம் ஆண்டாகி விட்டது. இப்போது எவ்வளவு தொகை ஆயுதங்களை சேர்த்திருப்பார்கள். முஸ்லிம் ஆயுத பயங்கரவாதம் இங்கு இயங்குகின்றது. இதனை நீதிமன்றத்திலும் நிரூபிக்க தயாராகவுள்ளோம் என்று தெரிவித்தார்.

ஊடகவியலாளர் மாநாட்டில் பொதுபலசேனாவின்தேசிய அமைப்பாளர் விதார தேரரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (வ-10)



வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரின் அனுசரணையுடன் இந்த மாத முழு நிலாக்கலை நிகழ்வு முல்லைத்தீவு கல்வி வலயத்தினால் உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. புதிய வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன் தலையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாகாணக்கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் பிரதம விருந்தினராகவும், ஓய்வு நிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு.திருஞானம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் மூவின மாணவர்களும் இணைந்து தங்கள் ஆற்றுகைகளை நிகழ்தினர். (ந-433)

# தீர்வுக்கு மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் அவசியம்!

## வடக்கு ஆளுநர் பதவி நீடிப்பு மூலம் நிரூபணம் என்கிறது மு.கா.

கொழும்பு,ஜுலை 17

சிறுபான்மையின சமூகத்தின் பிரச்சினைகளுக்கு உள்நாட்டுப் பொறிமுறை மூலம் தீர்வு காண முடியாது என்பதற்கு வடக்கு ஆளுநர் நியமிப்பு விவகாரம் சிறந்த எடுத்துக் காட்டாகும் எனச் சுட்டிக் காட்டியுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மூன்றாந்தரப்பு மத்தியஸ்தமின்றி தீர்வைப் பெறமுடியாத நிலை உருவாகியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

சிறுபான்மைச் சமூகத்தினருக்கு எதிராக அடக்கியாளும் போக்கைத் தான் அரசு கடைப்பிடிக்கும் என்ற எச்சரிக்கையையும் ஆளுநர் நியமனத்தினூடாக அரசு விடுத்துள்ளது எனவும் மு.கா. தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடும் எதிர்ப்பையும் மீறி அதன் ஆளுகைக்குட்பட்ட வடமாகாண சபையின் ஆளுநராக மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியை ஜனாதிபதி மீண்டும் நியமித்துள்ளதற்கு எதிராக சிவில் அமைப்புகள், ஜனநாயக விரும்பிகள் உட்படப் பல்வேறு தரப்பினரும் கண்டனம் வெளியிட்டுள்ளனர். அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரித் தலைவர் கள்கூட ஆளுநர் நியமனத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

இந்நிலையில், இதுவிடயம் தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு என்னவென்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ரி.ஹசனலியிடம் நேற்று 'சுடர்ஒளி' வினவியது. இதன்போது அவர் கருத்து வெளி யிடுகையில்,

"ஜனாதிபதி என்ற நிறுவனத்தை மக்கள்தான் தெரிவு செய்தனர். அதே போல், வட மாகாணம் என்ற ஜனநாயக நிறுவனத்தையும் மக்கள் தான் தேர்ந் தெடுத்துள்ளனர். இவை இரண்டுக்குமிடையில் ஒரு வித்தியாசம்தான் இருக்கின்றது. அதாவது, தேசிய மட்டத்தில் பெரும்பான்மைச் சமூகத்தின் ஆதரவுடன் ஜனாதிபதி தெரிவுசெய்யப்பட்டார். போரால் பாதிக்கப்பட்ட மக்களின் ஆதரவுடன் வடமாகாண சபை அமைக்கப்பட்டது.

இந்நிலையில், வடக்குக்கு சிவில் ஆளுநர் அவசியம் என்ற நிலைப்பாட்டில் வட மாகாண சபை உறுதியாக இருந்தது; இருக்கின்றது. எனினும், அதற்குச் செவிசாய்க்காது - மக்களின் கோரிக்கையை ஏற்காது ஆளுநருக்குப் பதவிநீடிப்பு வழங்கப்பட்டுள்ளமையானது அரசின் அடக்குமுறைப் போக்கை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

குறிப்பாக, சிறுபான்மையினச் சமூகம் என்னதான் கோரிக்கை முன்வைத்தாலும், எதைத் தான் சொன்னாலும், தாங்கள் கூறுவதுபோல்தான் இந்த நாட்டில் வாழவேண்டும் என்ற செய்தியை இதன்மூலம் அரசு விடுத்துள்ளது என்பதே யதார்த்தம்.

எனவே, உள்நாட்டுப் பொறிமுறையூடாக சிறுபான்மையினச் சமூகத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது என்பது இதனூடாகப் புலனாவதுடன், மூன்றாம் தரப்பு உதவியையும் இது வலியுறுத்துகின்றது" - என்றார்.

# அளுத்கம சம்பவம்: 85 முறைப்பாடுகள்

கொழும்பு,ஜுலை 17

அளுத்கம பிரதேச முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் பொலிஸ்மா அதிபர் என்.கே. இளங்ககோனுக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது.

குறித்த சம்பவத்தின்போது பொலிஸார் முஸ்லிம் மக்களைப் பாதுகாக் கவில்லை எனத் தெரிவித்து 85 முறைப்பாடுகள் பொலிஸ்மா அதிபருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டன.

இந்த முறைப்பாட்டில் பிரதிவாதிகளாக மேல் மாகாணத்திற்குப் பொறுப் பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதி பர் அநுர சேனநாயக்க, சம்பவத்தின்போதுகளுத்துறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக செயற்பட்ட ரொசான் சில்வா மற்றும் அளுத்கம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

முறைப்பாட்டாளர்கள் சார்பில் சட்டத்தரணி றுஸ்தி ஹபீப் தலைமையில் சட்டத்தரணிகளான சிதாரா ஹப்புவாராச்சி, சப்ராஸ் ஹம்சா, ரமீஸ் பசீர் மற்றும் முகம்மட் இம்தியாஸ் ஆகியோர் இந்த முறைப்பாட்டை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தாக்கல் செய்தனர்.

இதேவேளை, குறித்த சம்பவத்தின் போது பொலிஸார் செயற்பட்ட விதம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் மூன்று மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை விடயத்தில் மோடியின் கொள்கை தர்மசங்கடத்தில் தமிழகக் கூட்டணிக் கட்சிகள்

கொழும்பு, ஜுலை 17

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை விவகாரத்தை கையாளும் விதம் தமிழ்நாட்டில் உள்ள அவரது கூட்டணிக் கட்சிகளுக்கு பெரும் தர்ம சங்கடத்தை உருவாக்கியுள்ளது என டைம்ஸ் ஒவ் இந்தியா சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை தொடர்பான முன்னைய காங்கிரஸ் அரசின் கொள்கைகளை கடுமையாக சாடி வந்த பாட்டாளி மக்கள் கட்சியும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும் மோடி அரசின் இலங்கை தொடர்பான இராஜதந்திர கொள்கை மற்றும் இலங்கையுடன் பேச்சுகளை முன்னெடுத்து உறவை வலுப்படுத்தும் நிலைப்பாடுகளால் ஏமாற்றமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் டைம்ஸ் ஒவ் இந்தியா மேலும் தெரிவித்துள்ளதாவது,

நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவிற்கு இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்ததே முதலாவது துரோகச்செயல் என இந்தக் கட்சிகளால் கருதப்பட்டது. இதன் பின்னர் சர்வதேச விசாரணைகளுக்கு இந்தியா தனது எதிர்ப்பை வெளியிடும்என ஜி.எல். பீரிஸிடம் சுஷ்மா சுவராஜ் தெரிவித்ததாக ஊடகங்களில் தகவல் வெளியானது. பின்னர் வெளிவிவகார அமைச்சகமே அதனை உறுதி செய்தது. இது மேலும் அதிர்ச்சி தருவதாக அமைந்துள்ளது என பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் மறு மலர்ச்சி திராவிட கழக வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.

இந்தியாவின் முடிவு அதிர்ச்சி அளிப்பதாக வுள்ளது என பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸ் ஞாயிற்றுக் கிழமை தெரிவித்திருந்தார். இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் அன்புமணி ராமதாஸ் இந்திய வெளி விவகார அமைச்சரைச் சந்திக்கவுள்ளதாகவும் அதன் போது அவர் இலங் கைக்கு எதிரான ஐ.நா. விசாரணைக்கு இந்தியா ஆதரவளிக்க வேண்டுமெனக் கோருவார் என பாட்டாளி மக்கள் கட்சி வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.

SPOKEN ENGLISH

யாருக்காக?

- இளைஞர் யுவதிகள்
- வெளிநாடு செல்வோர்
- பல்கலை மாணவர்கள்
- ஆங்கிலம் பேசவிரும்புவோர்
- பல்கலை மாணவர்கள்
- தொழில்புரிவோர்

புதிய பயிற்சிநெறி ஆரம்பம் 19.07.2014 சனி

1. காலை 08.00-10.00 3. காலை 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00

எமது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.

"ஆங்கிலத்தில் ஒரெழுத்து தெரியாதவர்களும் கூட இப்பயிற்சியில் இணைந்து மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"

SAAMSON LANGUAGE SCHOOL 170, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567 021 320 3313

மாபெரும் மாட்டுவண்டி சவாரி

வேம்பாப்புலம் புத்தூர் வடக்கு ஞான வைரவர் ஆலய கட்டட வளர்ச்சி நிதிக்காக நடத்தப்படும் மாட்டுவண்டி சவாரிப்போட்டி

இடம் : நீர்வேலி சவாரித்திடல்

காலம் : 20,07.2014

நேரம் : பிற்பகல் 1.30 மணிக்கு

எனவே அனைத்துக் காளை உரிமையாளர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பிரவேசம் : 20/= ரூபாய் மட்டும்

ஆலய பரிபாலன சபையினர்.

(50030)(7.6.3)

மிக குறைந்த விமான கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| கொழும்பு—டுபாய் | 19000/= | One way |
| கொழும்பு—சென்னை | 21900/= | Return |
| கொழும்பு—திருச்சி | 22400/= | Return |
| கொழும்பு—டோகா | 26000/= | One way |
| கொழும்பு—அபுதாபி | 26500/= | One way |
| கொழும்பு—மலேசியா | 30000/= | Return |
| கொழும்பு—சிங்கப்பூர் | 30500/= | Return |
| கொழும்பு—பிரான்ஸ் | 45500/= | One way |
| கொழும்பு—லண்டன் | 44800/= | One way |
| கொழும்பு—ஜேர்மனி | 72300/= | Return |
| கொழும்பு—சுவிஸ் | 86700/= | Return |
| கொழும்பு—கனடா | 105700/= | One way |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்

யாழ் ந[illegible]ல் நம்பிக்கையான பாதுகாப்பான 24 ம[illegible]த்தியால சேவை வழங்குனர்

Natio[illegible] Popular Travels & Tours

# 8, Brown Road, Jaffna

128.பிட புண் வீதி யாழ்ப்பாணம்

Mobile 0773083820 www.nationtravels.com

Hot line 0114651199 Jaffna 0214920920

பிரதிக்கு முந்துங்கள் A/L தமிழ் -2014 கருத்தரங்கு வினா விடைகள்

வெற்றிவழி நாக. தமிழிந்திரன்

நூாலசிங்கம் - அன்னை - யாழ்.

T.P. 077 547 8159 (50029)(45.6.3)

கார் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள 10-xxxx வோக்ஸ் வகன் கார் (VOLKS WAGEN-1300) உடன் விற்பனைக்கு உண்டு.

தொ.பே: 078 615 5929, 021 320 5939 (50023)(7.6.3)

Dip. In Mobile Phone Repair / Software

புதுப் பொலிவுடன் யாழ். மண்ணில் ஆரம்பமாகிறது.

10 வருட அனுபவமும், நம்பகமும், சிறப்பு மிக்க ஆசிரியரின் (GANESH) வழிகாட்டுதலின் கீழ்...

அனைத்துவிதமான கையடக்கத் தொலைபேசிகள் திருத்துதல் மற்றும் மென்பொருள் நிறுவுதல் ஆரம்பம் முதல் கற்பிக்கப்படும். (0777444225)

குறைவான முதலீட்டில் கூடிய வருமானம் பெற இன்றே அழையுங்கள்

BTEC 21, Sirampiyadi lane, Jaffna. (0217904468)




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.